தென்மொழி

தனித் தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

ஆடி
தி.பி. 1994



நரிச் செயல்!

மொழி நலமும் இனநலமும் காவாதார்
தமிழ் காப்போம் எனமு ழங்கல்
குழிமுயலைக் காப்பமெனக் கோளரிபால்
நரிகொண்டு சேர்த்தல் ஒக்கும்;
பழி சேர்க்கும் செந்தமிழ்க்கு; தமிழகத்தைப்
பகைவரின்கைக் கொண்டு சேர்க்கும்.
விழி சோர்தல் இல்லாது தமிழரெல்லாம்
வியன்றமிழைக் காத்தல் செய்வீர்!

தென்மொழி
இலக்கிய இதழ்

திருப்பாதிரிப்புலியூர்.

சுவடி 1. ஓலை 6.

தி. பி. 1994
ஆடித்திங்கள்.
(1963–சூலை)

●

சிறப்பாசிரியர்
புலவ, பண்டித
ஞா. தேவநேயப்
பாவாணர்

பொறுப்பாசிரியர்
பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்
ம. இலெ. தங்கப்பா
மு. சாத்தையா
செம்பியன்.

●

உரிமை, வெளியீடு
தாமரை
உலக முதல்வி

●

அச்சகம்
மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்.

தனியிதழ் 50 காசு.

MADRAS

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

பயிற்று மொழி.

"ஒரு சில கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகச் செய்தும், அதன் வழிக் கல்வி கற்க மாணவர்கள் முன்வந்திலர்" என்று தமிழ் நாட்டு அரசியலார், குறிப்பாகக் கல்வியமைச்சர் பக்தவத்சலம் அண்மையில் கூறிக்கொண்டு வருவது நமக்கு வியப்பையும் திகைப்பையும் ஒருங்கே ஊட்டவல்ல செய்தியாகும்.

"உலகில் தாய்மொழி வழிக் கல்வியே மிகவும் சிறப்புடையது" என்பது கல்வி வல்லுநர் பெரும்பாலார் கருத்தாயிருக்கின்றது. அவ்வாறு அவர்கள் கருதுவதற்கு இன்றியமையாக் காரணங்கள் சில. மக்களுள் தாய்மொழிப் பற்றில்லாதவர்கள் ஒருவரும் இலர் என்பதும், அதன் வழி எவ்வகை அறிவையும் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல்போல், பிற மொழி வாயிலாக உணர்தல் அரிதென்பதும், அது மிகவும் குறைவான பயனையே தருகின்றது என்பதும் அக்காரணங்களில் தலைமையானவையாகும்.

மாந்தராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தாய்மொழி உணர்வு தலையெடுத்து நிற்ப, ஒரு சிலர் மட்டும் தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்கத் தயங்குவது நமக்குத் திகைப்பையே ஊட்டுகின்றது. அதுவும் திண்மையும் நுண்மையும் வாய்ந்த தமிழ் மொழி வாயிலாகப் பயில்வதற்குத் தமிழ்

மாணவர்களே முன்வந்திலர் என்பதும், இந்நிகழ்ச்சி தமிழகத்திலேயே நடக்கின்றது என்பதும் நாம் நாணத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். இதற்கு ஏதாவது ஒரு பெருத்த காரணம் இருத்தல் வேண்டும் என்பதை அறிஞர்கள் உணர்தல் வேண்டும். அக் காரணம் என்னவாக இருத்தல் கூடும்?

தனியொருவரின் வல்லாட்சி மிகுந்த உருசியாவில் இசுடாலின் (Stalin) காலத்து நடந்ததாக ஒரு கதை உள்ளது. சமயத் துறவிகள் சிலரைக் கொணர்வித்து, அவர்களிடம் இறையுணர்வு சிறந்ததா, இரையுணர்வு சிறந்ததா என்று கேட்கப்பட்டதாம்! துறவியர் இறையுணர்வே சிறந்ததென்றும் பசியுணர்வு அவ்வளவு சிறந்ததன்றென்றும் கூறினராம். உடனே ஆணையர் அத்துறவியரைச் சிறையிலிடுவித்துச் சோறும் நீரும் வார்த்தல் வேண்டாவெனக் கட்டளையிட்டனராம். சிறையில் நெடுநாட்கள் பசியால் வாடிக்குலைந்த அவர்கள், இறுதியில் பசியுணர்வே சிறந்ததென்று கூறினர் என்பதாக அக்கதை அமைந்துளது. இக்கதை மெய்யாகவிருப்பினும் பொய்யாகவிருப்பினும் இதனால் பெறப்படுவது ஒன்று. தேவைக்கு மேற் சிறந்தது ஒன்றில்லை என்பதே அது.

செல்வ நாட்டங் குன்றிக் கல்வி நாட்டம் மிகுந்திருந்த பண்டைக் காலத்தில் மக்கள் கல்வி நலம் பெற ஊர் விட்டு ஊரும், நாடு விட்டு நாடும் சென்று பல காலம் பாழிகளிலும் பள்ளிகளிலும் தங்கியிருந்து நல்லாசிரியர்க்கு உவப்பன செய்து, மும்மைக்கும் வேண்டுவதான அரும் பெறற் கல்வியைத் திறந் தெரிந்து தேர்ந்தனர். ஆனால் எவ்வகையிலும் பொருள்வகையே நாகரிகவாழ்விற்குக்காப்பாகவும் கடனாகவும் அமைந்து கிடக்கும் இற்றைப் பொழுதில் கல்வி கற்பது அறிவு நலம் வேண்டியன்று என்றும், பொருளீட்டுதற்கு மிக எளிமையானதும், வலிமையானதுமான ஒரு வழியாக அஃதிருப்பதே காரணம் என்றும் நம்மில் பெரும்பாலார் கருதுவர். இஃது ஓரளவு உண்மையுமாகும்.

கல்வியிலார் தம் கண்முன்னர் பற்பல இழிப்புக்கும் பழிப்புக்கும் ஆளாகி வல்லடிமைசெய்து வாழ்வராயிருப்ப, கல்விமிக்கார் அவர் தம்மை ஆட்டிப் படைப்பதும் அவரால் பெரும் பொருளை ஈட்டிக் குவிப்பதுமாக உள்ளனர். அதிலும் ஆங்கிலக் கல்வி நலம் மிக்குடையார் அரசினர் ஆணையராகவும் ஆட்சிக் காவலர் களாகவும் செல்வாக்குற்றிருப்பதைக் கண்டு, அவர் நிலைக்கு அங்காந்து நின்று எப்பாடு பட்டேனும் எக்கேடு கெட்டேனும் தம் மக்களையும் அன்னவர்போல் ஆங்கிலக் கல்வி பெறச்செய்து வாழ்வில் உயர்ந்து போவதையே பெரிதும் விரும்புகின்றனர். இஃதொருவகையில் வாழ்க்கைப் போலி எனினும் மாற்றவியலா

மக்கள் அமைப்பாகி விட்டது. அதனாலேயே மேற்கண்ட துறவியர் கதையில் கண்டது போல் தேவையான ஒன்றே சிறந்த ஒன்றினும் வலுவுடையதாகப் படுகின்றது. இத்தேவைக்கும் பயிற்று மொழிக்கும் என்ன தொடர்பு?

துறவியரைப் பட்டினி போட்டுப் பசிப்பிணி வாட்டுகையில் இறை வேண்டுமா? இரை வேண்டுமா? என்று கேட்க, அப்பசி வேட்கையாளர் இரையே வேண்டும் என்று கேட்டது தேவையாலன்றோ? இதுபோல் நம் தமிழக அமைச்சர்களும் தில்லியாட்சியரின் கைப் பாவைகளாக இருந்து தந்திறங் குன்றித் தமிழ் மக்களை ஏமாற்றியும் ஏமாந்தும் வருகின்றனர் என்பதை அரசியற் பார்வையாளர் உணர்வர்.

நடுவணரசு அலுவலகங்களிலும், வழக்கு மன்றங்களிலும் உயர்ந்த வருவாயுள்ள இன்றியமையாத பிற துறைகளிலும் ஆங்கிலமும் அதன்பின் படிப்படியாக இந்தியுமே அலுவல் மொழியாகவிருக்கும் என்று இந்திய அரசினர் ஆட்சி மொழிச் சட்டத்தில் ஏற்பாடு செய்து கொண்டதைக் கண்டதுமே கால் தூக்கிகளாகவும் கை தூக்கிகளாகவுமுள்ள தமிழரும் பிறரும் தம் பிள்ளைகட்குப் பரபரப்போடு இரவு பகலாக இந்தியைப் பயிற்றுவித்து வருகின்றனர். என்றைக்கிருப்பினும் ஆங்கிலம் தன் மதிப்பிற் குன்றப்போவதில்லை என்று ஆங்கிலமறிந்த ஒரு சிலர் தம் பிள்ளைகளை ஆங்கிலமும், எதற்கும் பயன்படும் என்று இந்தியையும் பயின்று கொள்ளச் செய்து வருகின்றனர். அவர்கட்கு இந்தி படிப்பதோ, ஆங்கிலம் படிப்பதோ முகாமையன்று. இவ்வாறு அவர் செய்வதற்கு அவற்றின்மேல் அவர் கொண்ட பற்று, காரணமில்லை. மொழிப்பற்று என்பதே என்னவென்று அறியாதவர் அவர். செல்வம், வாழ்க்கை, பகட்டு என்ற சொற்களைத் தவிர அவர்க்கு இந்தியன் ஆட்சியும் ஒன்றுதான்; சீனன் ஆட்சியும் ஒன்றுதான். பயிற்று மொழிபற்றி அவர் கவலைப் படுவதில்லை. அவர்க்குத் தேவையானதெல்லாம் வயிற்று மொழியே! அன்று ஆங்கிலம் இந்தியாவில் தலையெடுத்தமைக்கும், இன்று இந்தி தலை தூக்குகின்றமைக்கும் காரணமும் இதுவே! இப் போலி வாழ்க்கை வாழ்வாரை நம்பியே பேராயக் கட்சியார் ஆட்சியையும் அதன் சட்ட திட்டங்களையும் மேலும் மேலும் வலுவாக்கிக்கொண்டு வருவதுமன்றி அவற்றைப்பற்றிப் பெருமையோடும் பேசுகின்றனர். இசுடாலின் ஆட்சியையும் அயூப்கான் ஆட்சியையும் அவர்க்கு நினைவூட்டுகின்றோம். குடியாட்சிப் போர்வையில் வல்லாட்சியாளர் திரிவது புலி, ஆவின் தோலைப் போர்த்துக்கொண்டு மேய்வதற்கொப்பாகும்.

இந்தியோ ஆங்கிலமோ கற்றவர்க்குத் தாம் அரசினர் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று திட்டவட்டமாக அறி

வித்தபின் தாய்மொழி உணர்வால் தமிழைப் படிக்க இங்கிருப்பார் எவர் முற்படுவர்? தமிழ்க் கல்விபற்றித் தமிழக அரசினர் தில்லி ஆட்சியினரின் அடிச்சுவட்டில் ஒரு சிறிதும் பிறழாது நடந்து மிக விழிப்பாக மக்களை ஏமாற்றி வருகின்றனர். மாநில அரசினர் சில மாதங்கட்கு முன் தமிழ்மொழி அறிந்தவர்க்கே தமிழக அரசில் வேலைகிடைக்கும் என்று அறிவித்ததும் திரு. இலால்பகதூர் சாத்திரி அக்கால் தமிழகம் வந்து திரும்பிய பின் அவ்வறிக்கை எடுபட்டதும், இந்தித் தேர்வு தேவையில்லை என்று முன்னர் அறிவித்ததும் நடுவணரசினர் அழுத்தத்தால் அதையும் பின்னர் விடுத்ததும் நாம் கூறும் இக்கருத்தை வலியுறுத்தப் போதுமான எடுத்துக் காட்டுகளாம். செய்வதையும் செய்துவிட்டுக் குறையையும் தமிழர்கள் மேலேயே சாற்றுகின்றனர். இதற்குக் காரணம் தில்லியார் தமிழக அமைச்சர்களுக்கு இடும் வாய்க்கரிசியே. திருப்பதிபோய் முடியிறக்கவும் மடியவிழ்க்கத் தயங்கும் சுப்பிரமணியங்களும் பக்தவத்சலங்களும் இன்று அமெரிக்காவென்றும் உருசியாவென்றும், நொடிக்கு நூறுயிர முறை பேசுவதும், ஓடுவதும் தில்லியர் வீசும் காசுக் காகவே என்பதை மக்கள் உணருங் காலம் சேய்மையிலில்லை. எதிர்காலத் தமிழக வரலாற்றில் இவ்விழிசினர்தம் பெயர்களைத் தூக்கியெறிய இங்குக் 'குருசேவ்'கள் பலர் தோன்றப்போவது உண்மையே.

நடுவணரசு அலுவலகங்களில் வேலை செய்து வரும் இந்தியறியாத் தமிழரை இந்தி படிக்கக் கட்டாயப் படுத்துவதும், படியாதார்கள் இந்தி வகுப்புகட்கேனும் சென்றுவரல் வேண்டுமென்று கட்டளையிடுவதும், ஆணை முறைகட்கு அஞ்சிச் சில வகுப்புகட் காகிலும் அன்னவர் போவதும், அவ்வாறு போவாரை இந்தித் தேர்வுக்கு அனுப்புவதும், அவர் அதில் ஓரெண்ணும் பெருமற் போயினும் தேர்வு பெற்றதாகச் சான்றிதழ் தந்து இந்தி வழங்கும் பகுதிகட்கு அவர்களை அனுப்பிவைப்பதும், பிழைப்பு வேண்டி நிற்கும் அவ்வேழ்மையாளர் வேறு வழியின்றி 'இந்தியே' என்று அதனை வீட்டிலேயே கற்று வருவதும் நாம் அன்றாடம் கேள்வியுறும் நிகழ்ச்சிகளாம். இத்துணைக் கொடுமைகட்கிடையில் இந்தி ஆங்கிலம் என்ற மொழிகளைப் பயிலாது தமிழ் கற்கத் துணியும் ஒருசிலர்க்கும் வேலை வாய்ப்புகள் தராது கொடுமை செய்வதும் கண்கூடு. இவற்றை அறிந்த நல்லுணர்வு மிக்க ஒரு சிலரும் பிழைப்புக் கெனத் தாய்மொழிக் கல்வியைப் புறக்கணிக்கின்றனர். தெனாலி இராமன் பூனை வளர்த்த கதைபோல் நம் தமிழக அமைச்சர்கள் தமிழ் வளர்க்கின்றனர். இந்நிலையில் தமிழ் வளருமா? தமிழர்களே, நீங்கள் தூங்கிக் கிடக்கும் வரையில் இதுவும் நடக்கும்; இன்னமும் நடக்கும்!



மக்களவை

(இப்பகுதி தென்மொழியின் புகழுரைகளைப் பறைசாற்ற வேண்டும் எனும் நோக்கத்துடன் தொடங்கப்பெற்றதன்று! உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் எங்கெங்கு உறைகின்றன என்பதையும், அவை தென்மொழியால் எவ்வாறு கீண்டப் பெற்று உயிர்த் தெழுகின்றன என்பதையும் தூங்கும் தமிழர் கட்கும் தீங்குசெய் பகைவர்கட்கும் உணர்த்த வேண்டுவதே இதன் தலையாய நோக்கமாகும். அதுவன்றிப், பிறர் புகழுரைக்கும் மயங்கோம்! புல்லியர்தம் இகழுரைக்கும் தயங்கோம்!

— ஆசிரியர்.)

தொண்டிற்கே..!

தொண்டிற்காகத் தோன்றிய தாளிகை
உண்டெனில் அஃது ''தென்மொழி'' ஒன்றே!

— கரு. இராசு பணிக்கோட்டை.

*　　*　　*

அத்திப்பூ..!

'பழம்'என்ற வண்ணம் பூசிக், காயை விற்றுவரும் கன்னித் தமிழ் நாட்டு இதழ்களில் அத்தி பூத்தாற் போன்று எழுந்துள்ள தென்மொழி கண்டு கழி பேருவகை கொண்டேன்.

— கல்லூர் மணியம் மலாயா.

*　　*　　*

அனைத்தும் அருமை..!

'தென்மொழி' என்போன்ற ஆர்வலனுக்கு ஆசானாக இலங்குகின்றது. இதழ் முழுதும் தமிழ் மணம் கமழ்கின்றது. அனைத்தும் அருமை!

பெ. கோ. மலையரசன் மலாயா.

*　　*　　*

உலகெங்கும் பரவ..!

பிறமொழி வெறியர்க்கும், அன்னை மொழிப் பகைவர்க்கும் கோடரியாகத் 'தென்மொழி' அமைந்திருப்பது காணப்படிப்பகம் அகமகிழ் வெய்துகிறது... உலகெங்கும் மணங்கமழப் பரவுதல் வேண்டும் என்பதே எங்களின் பேராவல்.

— **தீந்தமிழ்ப் படிப்பகம் தஞ்சை.**

* * *

யாது கைம்மாறு..!

தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் பணியாற்றுகின்ற எம் போன்றோர்க்குத் தனித்தமிழ் ஆர்வத்தை ஊக்குவித்து, வளமிகு வண்டமிழின் மாண்புகளை எடுத்தியம்பும் தென்மொழிக்கு யாது கைம்மாறு செய்யவல்லோம்!

— ச. வே. சுப்பிரமணியம் மகாதேவி-முசிறி.

* * *

எங்கணும் காணேன்..!

தென்மொழி யன்னதோர் தண்டமிழ் ஏடுபோல் எங்கணும் கண்டதில்லை.

— **கோவிளங் குழலோன்,**
பாண்டுகுடித் தமிழ்மறைக் கழகம்.

* * *

தேன்பாகே!

தென்மொழியே! தெவிட்டாத நல்லமிழ்தே! தேன்பாகே! உன்னழகைக் கண்ணுற்று உவகை பூக்கின்றோம்.

— சி. கலியபெருமாள் ஆத்தூர்.

* * *

ஒத்துழைப்பு என்றுமுண்டு.

அழகு தமிழ் நடையில் பழகு மொழியில் கருத்தைக் கவரும் தென்மொழி இதனைப்போல் யாம் இதுநாள்வரை தமிழேடு ஒன்றைக் கூடக் காணாத குறையைப் போக்கினீர்கள். தமிழர்கள் உள்ளத்தில் நீங்கா இருக்கையினைப் பற்றிக்கொண்ட தென்மொழிக்கு எங்கள் ஒத்துழைப்பு என்றுமுண்டு.

— **தமிழ்நாட்டுக் கையெழுத்தேட்டினர் கழகம்,**
சென்னை 12.

* * *

இருளகற்றும் பொய்யா விளக்கு.

அன்னை மொழிபேணி அருங்கலை தான்வளர்க்கும்
கன்னி மொழியிதழே! கற்கண்டே! கண்ணே!
தொன்மை மொழிக்குலத்துள் தூயநறும் பேர்தாங்கிப்
புன்மை இருளகற்றும் பொய்யா விளக்கே!
இலக்கணம் நடமாடும்; இலக்கியம் உறவாடும்;
பன்மொழி பெயர்ப்பிலங்கும்; பாநலம் இடைதுலங்கும்!

— புலவர். க. செந்தில், கோவை-5.

* * *

பகுத்தறிவுப் பெருந்தொண்டு.

ஆகா,என் தென்மொழியே! என்றன் அன்னை
அருந்தமிழாம் அன்னவளின் உருவாய் வந்தாய்!
போகாத இந்தியினைப் பொசுக்கிப் போக்கப்
புலிகயல்வில் கொடிவேந்தர் வேட்கை கொண்டாய்!
பாகான தென்தமிழைப் பிழைக்க வைத்துப்
பகுத்தறிவுப் பெருந்தொண்டு செய்ய வந்தாய்!
'சோகாப்பர்' இல்லாத நாடாய் மாறச்
செய்கின்ற உன்பணிக்கு வணக்கம் நன்றே!

— பசும்பொற் கிழார்,
திருவள்ளுவர் மன்றம், பசும்பொன்.

* * *

நன்னெறி ஏடு!

உடல்பொருள் அனைத்தும் உயர்தமிழ் வளர்க்க!
தடைவரும் எனிலோ தருவோம் இன்னுயிர்!
இந்தி வருமெனில் செந்நீர் பெய்வோம்;
மந்திகள் அல்லர் மறவர்கள் நாங்கள்!
என்றுசொல் தென்மொழி! இன்தமிழ் வளர்க்கும்
நன்னெறி ஏடே! நலமுடன் வாழ்கவே!

— குராயூர் எழிலன், மதுரை.

* * *

நம் தலையாய கடமை!

தமிழ் தமிழாகவும் தமிழன் தமிழனாகவும் வாழ்தல் வேண்டு மானால் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தங்களின் முழு ஆக்கத்தைத் தென்மொழிக்குத் தருவதோடு, அஃது ஆற்றி வரும் எல்லையற்ற தனித்தமிழ்த் தொண்டைப் பாதுகாக்க வேண்டியதும் நம் தலையாய கடமைகளுள் ஒன்று.

— இராச. தமிழழகன் ஈப்போ.

* * *

போர் முரசு ஓச்சுக!

[பெ. முனியப்பன்]

பொய்மையில் மூழ்கினைப்; பூசல் விளைத்தனைப்;
பொங்கும் வளத்தினை மாய்த்துவிட்டாய்-நீ
உய்யவும் ஆற்றிய ஓர்தமிழ் அன்னையை
ஓங்கும் மடமையால் சாய்த்துவிட்டாய்!

வேற்று மொழியினர் ஒன்றுபட் டோங்குதல்
வெற்றி விளைத்தநீ கண்டிருந்தும்-பெரும்
ஆற்றல் வளர்த்திலை; ஆக்கமும் செய்திலை;
அயலவன் காலடி மண்டியிட்டாய்!

அன்னை வருந்திட உன்னரும் நெஞ்சினில்
எண்ணரும் நஞ்சினைச் சேர்த்துவிட்டாய்-எனில்
உன்னில் வளர்ந்துல கோங்கும் கயமையை
உழலும் பணத்தொடு போர்த்துவிட்டாய்!

ஆயிரம் சாதிகள் ஆயிரம் கட்சிகள்
ஆகப் படைத்தனை அத்தனைக்கும்-செந்
தாய்தமிழ் போற்றிடத் தக்கதோர் கட்சியைத்
தாயகம் கண்டதோ? எண்ணிடுவாய்!

மூக்கினில் நோயுளர் மோப்பம் அறிவரோ?
மூடம்சேர் கொள்கையில் வாழ்விழந்தும்-அதைத்
தீக்கிரை யாக்கிலை; தீயவை போக்கிலை;
தெவ்வரை ஊக்கிநீ தாழ்ந்தமிழ்ந்தாய்!

ஏட்டினில் பாட்டினில் ஏற்றமாய்ப் பேச்சினில்
'எந்தமிழ்த் தா'யென வீசுதலில்-பயன்
நாட்டினில் ஒன்றிலை; நன்மைகள் சேர்ந்திட
நந்தமிழ்ப் போர்முர சோச்சுகவே!

தமிழ் வரலாற்றுச் சுருக்கம்.

இவ்வுலகில் ஒப்புயர்வற்றுயர்ந்த பனிமலை (இமயம்) கடலுள்ளிருந்தெழுமுன்பும், பறவையினம் தோன்று முன்பும், பல்லூழி நிலைத்திருந்ததும்; ஆத்திரேலியா தென்னாப்பிரிக்கா தென்னிந்தியா ஆகிய முந்நிலங்களையும் இணைத்துக் கொண்டிருந்ததும்; மேலையறிஞரால் இலெமுரியா (Lemuria) என்றும், கீழையறிஞரால் குமரிக்கண்டம் என்றும் சொல்லப் பெறுவதும்; தலைக் கழகக் கால முதல் கடைக்கழகக் காலம் வரை சிறிது சிறிதாய்ப் பல்வேறு கடல்கோளால் கவரப் பட்டதும்; தொடக்கத்தில் ஏறத்தாழ ஈராயிரங்கல் தொலைவு தென்வடலாய்த் தொடர்ந்திருந்ததும் ஆன தென்பெருங் கண்டமே தமிழ் தோன்றி வளர்ந்த இடமாம்.



அக்கண்டத்தின் தென்கோடியடுத்துப் பனிமலை போற் படர்ந்தும் தொடர்ந்துமிருந்த குமரிமாமலைப் பாங்கர்க் கருக் கொண்டு, குறிஞ்சி முல்லை மருதம் ஆகிய முத்திணை நாகரிக நிலைகளையும், கற்காலம் பொற்காலம் ஆகிய இருவகைக் கால நிலைகளையும், அசைநிலை, கூட்டுநிலை, ஈற்றுநிலை, கொளுவுநிலை ஆகிய நால்வகைச் சொன்னிலைகளையுங் கடந்து, கி.மு. 10,000 ஆண்டுகட்கு முன்பே முழுவளர்ச்சியடைந்து முத்தமிழிலக்கிய விலக்கணங்களும் பல்வேறு துறைப்பட்ட கலையறிவியல் நூற் களும் நூற்றுக்கணக்காய்ச் சிறந்த செய்யுள் வடிவிற் செய்யப் பெற்று, முதற்றனிச் செம்மொழியாய் உலகில் முதன்முதல் அக வொளி பரப்பி,

மொழிப்பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்"

என்று பண்டைப் புலவர் பரவிப் புகழுமாறு பைந்தமிழ் வீற்றிருந்தது.

மக்கட் பெருக்கம், கடல்கோள், போர், கொள்ளை, முதலிய பல கரணியம் (காரணம்) பற்றி, தமிழர் வடக்கும் வடமேற்கும் படிப்படியாய்ப் பரவிச் சென்றனர். வேங்கடத்திற்கு வடக்கிற் பரவிச் சென்றவர் மொழி, நாளடைவில், சுற்றுச் சார்பு மாற்றம் பலுக்கற் (உச்சரிப்புச்) சோம்பல், புலவரின்மை, முதலிய கரணியங்களால் ஒலியிலும் பலவாறு திரிந்தது. திரிமொழி கொடுந்தமிழ் என்றும், திரியாமொழி செந்தமிழ் என்று பெயர் பெற்றன. திரி மொழியைப் பேசுவோர் பிற்காலத்தில் திரவிடர் என்றழைக்கப்பட்டனர். தமிழிலுள்ள சொற்கள் திரிந்தது போன்றே, தமிழ் என்னும் பெயரும் ஆரியரால் முறையே, (தமில) த்ரமில-த்ரமிள-த்ரமிட-த்ரவிட எனத் திரிக்கப்பட்டது.

தெலுங்கு கன்னடம் முதலிய திரவிட மொழிகளில் கி. பி. 9-ஆம் நூற்றுண்டிற்கு முந்திய இலக்கிய மின்மையாலும், செந்தமிழாகிய தமிழுக்கும், கொடுந்தமிழும் கொடுந்தமிழ்த் திரிபு மாகிய திரவிடத்திற்கும் முற்காலத்தில் வேறுபாடு அறியப் படாமையாலும், மொழிப் பண்பாட்டிலும் இலக்கிய வளத்திலும் தமிழ் பண்டைக் காலத்திலேயே தலைசிறந்திருந்தமையாலும், வடவர் தமிழையும் திரவிடத்தையும் திரவிடம் என்னும் ஒரே சொல்லால் நெடுங்காலம் குறித்து வந்தனர்.

தமிழரால் முதன்முதல் வடுகு (வடகு) என்னும் பெயராற் பிரித்தறியப்பட்ட திரவிட மொழி தெலுங்காகும். இது கி. பி. 3-ஆம் நூற்றுண்டிற்கு முற்பட்ட கடைக்கழகக் காலத்திலே நிகழ்ந்ததாகும். அதன்பின், 7-ஆம் நூற்றுண்டில் குமரிலபட்டர் தமிழையும் திரவிடத்தையும் ஆந்திர திராவிட பாசை யென்று குறிப்பிட்டார். 12-ஆம் நூற்றுண்டில் கம்பர் வடுகொடு கன்னடத்தையும் ஒருமொழியாகக் குறித்தார். சென்ற நூற்றுண்டில், கால்டுவெல் கண்காணியார் தமிழையும் திரவிடத்திற் கொப்பாகக் கொண்டு திரவிடமொழிகளைப் பதின்மூன்றுகக் கணக்கிட்டார். இன்றோ, பேராசிரியர் காமஞேவும் பேரா. பரோவும் அவற்றைப் பத்தொன்பதாகக் காட்டியுள்ளனர்.

வடவர் குசராத்தி மராட்டி யென்னும் இருமொழியையும் பஞ்ச திராவிடத்திற் சேர்த்திருந்தமையாலும் இந்தி வங்காளம்

முதலிய வட இந்திய மொழிகளிலும் அடிப்படை தமிழாய் அல்லது திரவிடமாயிருப்பதாலும், பிராகுவீ மாலிற்ரோ முதலிய திரவிட மொழிகள் இன்றும் வடஇந்தியாவில் வழங்குவதாலும், இன்று ஆரியக்கிளைகளாகக் கருதப்பெறும் அவையும் முதற் காலத்தில் (வடதிராவிடம் என்னத்தக்கவாறு) திரவிடமொழி களாயே இருந்திருத்தல் வேண்டும்.

வட இந்தியாவினின்று வடமேற்காக ஐரோப்பா வரை பரவிச் சென்ற திரவிடரே ஆரியராக மாறியுள்ளனர். இங்ஙனம் கொள்ளுதற்கு, பாரசீகம் மெசொப்பொத்தாமியா வட ஆப்பிரிக்கா முதலிய இடைவழிநாடுகளிலும், ஐரோப்பாவில் கிரேக்க வித்தாலி முதற் காண்டினேவியம் வரைப்பட்ட ஆரிய நாடுகளிலும், தமிழ்ச் சொற்களும் தமிழ்ப் பழக்க வழக்கங்களும் சமயக் கோட்பாடுகளும் தமிழ் நாட்டுப் பொருள்களும் காணக்கிடப்பதும்; அங்கு வழங்கும் மொழிகளின் அடிப்படைச் சொற்கள் பல வற்றிற்குத் தமிழிலேயே வேரிருப்பதும், ஐரோப்பாவின் வட மேற்கோடியில் வழங்கிய ஆங்கில சாகுசனியம் ஏனையாரிய மொழிகளினும் தமிழுக்கு மிக நெருக்கமாயிருப்பதும், வேத ஆரியமும் அதன் வழிப்பட்ட சமற்கிருதமும் மேலையாரியத்தினும் திரிந்திருப்பதும், தமிழின் தொன்மை முன்மையும் சான்றும்.

வட ஆப்பிரிக்க மொழிகளுள் ஒன்றான காலுவில், 'வா', 'போ', 'தூக்கு' முதலிய தூய தென் சொற்கள் அடிப்படைச் சொற்களாய்த் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன.

கிரிம் (Grimm), வெர்னெர் (Verner) என்னும் ஆரிய மொழியாராய்ச்சியாளர் இருவரும், ஆரியச் சொற்களை அவற்றிற்கு நேர் தென் சொற்களுடன் ஒப்பு நோக்காமை பெருந் தவறும்.

எடுத்துக்காட்டு:

பொறு பொறுத்தல் = சுமத்தல். A. S. ber, (E. bear); O. H G ber; Gothic. bair; Greek pher; L. for; Sanskrit. bhan

துளை = வாயில்.

A. S. duru (E. door); German, thure; Greek, thura, Gothic, daur; Sanskrit, drar.

Ar (L.) என்பது கீழையாரியமாகிய வேத ஆரியத்திலும் சமற்கிருதத்திலும் இல்லாத மேலையாரிய வேர்ச்சொல்லென்று பேரா. மாக்சு முல்லர் குறிப்பிடுகின்றார். ஏர் (கலப்பை, Plough) என்பது தூய தென்சொல். A S. ear; E earth = that which is ploughed; arable = ploughable.

செருமானியத்திற்கும் கிரேக்கத்திற்கும் நெருக்கமான ஓர் ஆரியமொழியைப் பேசிக்கொண்டு, மேலை நாட்டினின்று வந்து கி.மு 2000 ஆண்டுகட்கும் 1500 ஆண்டுகட்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவிற்குள் புகுந்த ஒரு சிறு கூட்டத்தாரே கீழையாரியர். அவர் பின்பு வேதம் இயற்றிக்கொண்டதால் வேத ஆரியர் எனப்பட்டார். அவருள் முன்னேக்கும் முன்னேற்ற வுணர்ச்சியும் உள்ளவர் வேத ஆரியம் வழக்கற்றுப் போனபின் இடைக்கழகக் காலத்திற்கும் கடைக்கழகக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தென்னுடு வந்து தமிழ் கற்று, தமிழ் நெடுங்கணக்கைப் பின்பற்றி ஆரியவெழுத்து முறையை வகுத்துக்கொண்டு, அக்காலத்து வட்டார மொழிகளாகிய பிராகிருதங்களினின்று, சிறப்பாகத் தமிழினின்று, பல்லாயிரக்கணக்கான சொற்களைக் கடன் கொண்டு சமற்கிருதம் என்னும் அரைச்செயற்கையான இலக்கிய நடைமொழியை (Literary Dialect) அமைத்துக் கொண்டனர். அதன்பின்பு தமிழிலக்கண விலக்கியங்களைத் தழுவியும் மொழி பெயர்த்தும் சமற்கிருத விலக்கியத்தைப் பெருக்கிக் கொண்டனர்.

தென்னுடுவந்த வேத ஆரியர் தம்மை நிலத்தேவர் (பூசுரர்) என்றும் தம் முன்னேர் மொழியையும் சமற்கிருதத்தையும் தேவமொழியென்றும் ஏமாற்றித் தமிழ் வேந்தர் மூவரும் அதை நம்புமாறு செய்துவிட்டதனுல், சிவ மதமும் திருமால் மதமும் தமிழ் மதங்களாயிருந்தும், தமிழ் வழிபாட்டிற்குத் தகாதமொழியென்று தள்ளப்பட்டுத் தமிழராலும் புறக்கணிக்கப்பட்டு, ஆரிய வருகைக்கு முற்பட்ட தூய தமிழிலக்கியமனைத்தையும் இழந்ததுமன்றிப் பெரும்பாற் சொல்வளத்தையும் இழந்துவிட்டது. அதன்பின் அகப்பகையும் புறப்பகையும் அளவின்றி மிக்குத் தமிழ் வரலாறும் தலைகீழாய்த் திரிக்கப்பட்டது.

இந்நிலையில், கால்டுவெல், போப்பு முதலிய மொழியறிஞரும் ஆல்[Hall], வின்சென்று[Vincent] முதலிய வரலாற்றாசிரியரும், தமிழ்ச் சிறப்பையும் தமிழ நாகரிகவுயர்வையும் நடுநிலையாய் ஆய்ந்து கண்டு உலகத்திற் கெடுத்துக் காட்டினர். ஆயினும் தன்னலமும் கயமையுங் கொண்டு தமிழைக் காட்டிக் கொடுக்கும் தமிழ்ப் பேராசிரியர் சிலர் கூற்றினுல், வடநாட்டிலும் மேனுட்டிலும் உள்ள மொழிநூல் வல்லுநர்பலர் வழுக்கியும் இழுக்கியும் உரைத்தும் எழுதியும் வருகின்றனர். பேரா. (P. T.) சீநிவாசையங்கார் எழுதிய History of the Tamils, பர். இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய *Origin and Spread of the Tamils*, Prehistoric South India முதலியதமிழர் வரலாற்று நூல்களைக் கண்டு உண்மை தெளிக.

பண்பட்டவும் பண்படாதவுமான திரவிட மொழிகளெல்லாம் தோன்று தொட்டு இந்தியாவிற்குள்ளேயே வழங்கி வருகின்றன.

அவற்றுள் பண்பட்டவெல்லாம் தென்னாட்டிலேயே வழங்கி வருகின்றன. அவற்றுள்ளும் தலைமையான தமிழ் தென்கோடியில் வழங்கி வருகின்றது. இங்ஙனம், தமிழ் தெற்கே வர வரத் தூய்மையாகியும் சிறந்தும் வடக்கே செல்லச் செல்லத் திரிந்தும் சிறுத்தும் இருப்பதுடன், இந்தியாவிற்கு வெளியே தென்சொற் களன்றித் திரவிட மொழியெதுவும் எங்கேனும் வழங்குவது மில்லை. முழுகிப்போன குமரிக் கண்டத்தொடு தொடர்புற்ற தமிழ் வரலாறும், தமிழொலிகளின் சின்மை மென்மையும், தமிழின் தென்மையையும் தொன்மையையும் முன்மையையும் தெரிவிக்கும்.

வங்க நாட்டு மொழி நூலறிஞரான பண்டாரகர் (Dr.) சட்டர்சி (S. K.), தமிழ்ப்பற்றற்ற சில பிராமணர் ஆங்கிலத்தில் தமிழைப்பற்றி யெழுதியுள்ளதைப் படித்தும், வையாபுரி வழித் தமிழ்ப்புலவர்வாய்க் கேட்டும், தமிழைப் பிறழவுணர்ந்து, கிழவி திரிந்து குழவியானாள் என்பதைப்போன்று g, j, ḍ, d, b என்னும் எடுப்பொலிகள் தமிழில் k, c, ṭ, t, p என்னும் கடுப்பொலிகளாக மாறினவென்றும்; மகன் தந்தையையும் பேரன் பாட்டனையும் பெற்றான் என்பதைப் போன்று, mastix அல்லது mastigos என்னும் கிரேக்கச்சொல் தமிழில் மத்திகை யென்று திரிந்துள்ள தென்றும், தமிழர் கிரேக்க நாட்டினின்று வந்தவரென்றும், தமக்குத் தோன்றியவாறே, Age of the Nandas and Mauryas என்னும் பொத்தகத்தில், Language and Literature என்னும் கட்டுரையிற் கூறியுள்ளார்.

மத்திகை = குதிரைச்சம்மட்டி (horse-whip).

''மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை''
(முல்லைப் பாட்டு, 59).

மொத்துதல் = அடித்தல். மொத்து–மொத்தி–மத்தி. மத்தித்தல் = அடித்தல்.

ஒப்பு நோக்க: ஒட்டு–அட்டு, கொம்பு–கம்பு, மொண்டை–மண்டை, தொளதொள-தளதள.

சமட்டுதல் = அடித்தல், துவைத்தல்.

சமட்டு-சமட்டி–சம்மட்டி = குதிரைச் சவுக்கு.

சமட்டு–சவட்டு–சவட்டை–சாட்டை. சவட்டு–சவட்டி–சாட்டி.

மத்திகை என்பதுமட்டுமன்று; திருப்பு (trepos), தொலை (telos), துரப்பணம் (trupanon) முதலிய எத்தனையோ தமிழ்ச் சொற்கள் கிரேக்கத்திலுள. அவற்றையெல்லாம் பர். சட்டர்சி அறியார் போலும்!

தமிழின் பெருமையும் தலைமையும் வட மொழியால் மிகமிக மறைக்கப்பட்டுள. அடுத்த கட்டுரை 'வடமொழி வரலாறு'பற்றி வரும். *

ஆங்கில மொழியாக்கம்

The Poet's Pride.

The royal splendour wealth and pomp
Of powerful kings and conquerors
Admire we not; What, if they have
Chariots fine with flags aloft.
And horses with the speed of winds
An army like an angry sea–
With glittering arms, a sight so grand!
Have elephants matching 'gainst the hills
Wär–drums sounding thunder–like
With victory in many a battle?
Our heart with admiration swells
Not for such; but for cultured men
Who are polite to us and kind,
Petty princes though they be
Of poverty–stricken village–states.
Though we are in distress deep,
The riches of unfeeling men
Tempt us not; O monarch great!
The indigence of cultured men
With pleasure we would rather share.

(PURAM 197.)

By Madalan Madhuraik Kumaran.

மொழி பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

பாவலர் பெருமிதம்!

வளிநடந் தன்ன வாஅய்ச்செல் இவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரினர் எனூஅக்
கடல்கண் டன்ன ஒண்புடைத் தானையொடு
மலைமாறு மலைக்கும் களிற்றினர் எனூஅ
உருமுரற் றன்ன உட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றியர் எனூஅ
மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே.
எம்மால் வியக்கப் படூஉ மோரே!
இடுமுள் படப்பை மறிமேய்ந்து ஒழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்
சீறூர் மன்னர் ஆயினும் எம்வயின்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே
மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்
நல்லறி வுடையோர் நல்குரவு
உள்ளுதும் பெருமயாம் உவந்துநனிபெரிதே!

(புறம்: 197: மாடலன் மதுரைக் குமரனார் பாட்டு.)

தமிழில் சொற்களா இல்லை?

குறைகூறுவார் பார்வைக்கு.

யானையின் சிறப்புப் பெயர்கள்.

உம்பல்	உயர்ந்தது என்னும் பொருளில்.
உவா	திரண்டது ,, ,,
ஓங்கல்	மலை போன்றது ,, ,,
கரி கள்வன்	கரியது ,, ,,
கறையடி	உரல்போன்ற அடியை உடையது என்னும் பொருளில்.
குஞ்சரம்	திரண்டது என்னும் பொருளில்.
கைம்மா	துதிக்கையுடைய விலங்கு எனும் பொருளில்.
தும்பி	துளையையுள்ள கையையுடையது ,,
நால்வாய்	தொங்குகின்ற வாயையுடையது ,,
புகர் முகம்	முகத்தில் புள்ளியுள்ளது ,,
புழைக்கை	(பூட்கை)துளையுள்ள கையையுடையது ,,
பெருமா	பெரிய விலங்கு என்னும் பொருளில்
பொங்கடி	பெரிய அடியையுடையது ,,
யானை (ஏனை)	கரியது ,,
வழுவை	உருண்டு திரண்டது ,,
வாரணம்	சங்கு போன்ற தலையையுடையது அல்லது புல்லை வாரிப்போடுவது ,,
வேழம்	வெள்ளை யானை போலும்!

— ஞா. தே.

நன்றியுரை!

கடல் கடந்து வாழ்ந்தும் தமிழின்பால் விடலறியா விருப்பினராகி நன்னெறிக்கே உழைக்கும் தென்மொழிக்கு வளர்ச்சி வேண்டித் தென்மொழியின் மலைநாட்டு முகவரும், பாவாணர் தமிழ் மன்றச் செயலாளருமான உயர்திரு. சா.சி.சுப்பையா அவர்கள் உருபா இருபத்தாறும் காசு இரண்டும் மகிழ்ந்தளித்தனர்.

உணர்வால் துடிக்கும் அவ்வுண்மை நெஞ்சர்க்கு எம் நன்றி உரியவாகுக.

ஒருநாட் கூத்து!

(இந்தியத் துணைக் கண்டத்து முதலமைச்சர் நேரு அவர்கள் தமிழ்நாடு வந்தஞான்று அவர்க்களிக்கப்பெற்ற வரவேற்பின் போலி ஆர்ப்பாட்டங்களைக் கண்ட ஏழைக் குடிமகன் கூற்று.)

(ம. இலெ. தங்கப்பா.)

மாந்தர் தம்முள் மாமணி என்றார்; புகழ்வேண்டா
ஏந்தல் என்றார்; யாவருங் கூடி உமைக்காணப்
போந்தார்; யானும் புன்பசித் துன்பும் மறந்திங்குப்
போந்தேன்; கண்டேன்; வயிறெரி வென்ன புகல்வேனே! (1)

குடியாள் நாட்டில் யாவரும் மன்னர் எனச் சொன்னார்;
முடிகொள் வேந்தை விஞ்சினிர் ஐயா! எமைப்போன்றார்
இடியுண் டேங்கிக் கால்வயிற் றுக்கூழ்க் கிடர்மிக்கோம்;
அடிசில் நெய்பால் கனியோ டுமக்கிங் களித்தாரே! (2)

சீனன் வந்தான், சீனன் வந்தான் என்றே எம்
வாய்நின் றேவெண் சோறு பறித்தீர்; எம்பெண்டிர்
மானம் காக்கும் தாலி பறித்தீர்; ஐயாஇன்(று)
ஏனோ கோடி வீண்செல விந்தப் பகட்டெல்லாம்? (3)

வண்ணத் தாள்கள் வானை மறைக்கும் ஒருகோடி!
கண்ணைக் கூசும் மின்னொளி ஈட்டம் ஒருகோடி!
பண்ணுங் கூத்தும் பந்தலும் அங்கங் கொருகோடி!
அண்ணல், தீமை காய்ந்திட உம்நா அசையாதோ? (4)

வண்ணத் தாள்எம் செந்நீர் பிழிந்த வரியன்றோ!
கண்ணைக் கூசும் மின்னொளி எம்கண் புனலன்றோ!
பண்ணும் கூத்தும் பந்தலும் எங்கள் பசியன்றோ!
எண்ணிப் பார்க்கின் ஏழையர் கும்பி எரியாதோ? (5)

வீண் செய் யற்க வண்பொருள்; மக்காள், ஒருவேளை
ஊண் செய் யற்க; வன்பகை ஓட்டல் சூள்''என்றீர்
தூண் செய் துந்தாள் தொங்கல்கள் செய்தும் மிகு செல்வம்
வீண் செய் கின்றீர் -ஒருநாட் கூத்தில்! விளைவுண்டோ? (6)

வெள்ளை மாந்தர் வீண்பகட் டந்நாள் வெறுத்தீரே!
வெள்ளிப் பேழை, வெறிகமழ் மாலை ஏன், ஏன், ஏன்?
கொள்ளை செய்தீர்! ஏழையர் எம்போல் தொழிலாளர்
பிள்ளை குட்டி வெம்பசி காணீர் பித்தீரே! (7)

நாட்டை ஆள்வோம் என்று நவின்றீர்; எம்போன்றூர்
கேட்டைத் துன்பைக் காண்பதிங் கல்லால் கெழுஞ்செல்வர்
கூட்டத் துட்போய்க் குலவிடு கின்றீர்; குடிவாழ்வைக்
காட்டா திங்கும் தட்டிக ளிட்டுக் கரந்தாரே! (8)

நாளைக் கில்லா வெற்றூர்ப் புக்காய் நாவிருநாள்
தாளார் வன்மை மக்கள் உழைப்பைத் தகைத்தீரே!
கேளிக் கைக்கோ எங்கள் உழைப்பு? கேடென்றல்
வாளைத் தூக்கும் தலைவீர்! இன்றேன் வாயற்றீர்? (9)

ஊர்செய் ஆர்ப்புக் கென்செய் வேம்என் றுரையாதீர்;
சீர்செய் செல்வம் நாட்டின தன்றே! கெடல்நன்றே?
நேர்செல் காந்தி அண்ணலின் நெறியும் இதுதானோ?
ஆர்செய் தால்என்? பிழைஎன் றுலங் கதுபிழையே! (10)

காதலும் கடமையும்

1924 இல் காந்தியடிகளின் இரண்டாம் மகன் மணிலால் காந்திக்கும், நாநாபாயின் பெண் சுசீலைக்கும் திருமணம் நடந்தது. அடிகள் உட்பட எல்லாரும் பெண் வீட்டுக்குப் புறப்பட்டனர். புகை வண்டியில் மணமகன், பெண், உடன்வந்தவர், எல்லாரும் ஒரே பகுதியுள் ஏறி அமர்ந்திருந்தனர். சந்தடிக்கிடையில் பெண்ணும் பிள்ளையும் ஒருவரையொருவர் அச்சத்துடன் கடைக் கண்களால் பார்த்துக் கொள்வதும் உள்ளூர நகைப்பதுமாயிருந்தனர். ஒருவருடன் ஒருவர் பேசத் துடித்தனர். உறவினர் கூட்டம் மிகுதியாக விருந்தமையின் அவர் எண்ணங் கைகூடாது ஏக்கப் பெருமூச்சுடனும் காதல் அழுத்தத்துடனும் அமர்ந்திருந்தனர். மணமக்கள் இவ்வகையிற் புழுங்குவதை உறவினர் கூட்டம் ஒருசிறிதும் உணராது தம்தம் விருப்பு வெறுப்புகளிலேயே ஈடுபட்டிருந்தனர். பிள்ளைக்கும் பெண்ணுக்கும் உயிர்த் தொல்லையாக இருந்தது.

வண்டி புறப்படும் நிலையில் இருந்தது. காந்தியடிகள் உடன் வந்திருந்தவர் எல்லார்க்கும் விடை கொடுத்தனுப்பி விட்டு அப்பகுதிக்கு வந்தார். மகனும் மருமகளும் எவரையும் பொருட்படுத்தாது கண்களால் பேசிக் கொள்வதைக் கண்டார். உடனே ''மணிலால்'' என்று அழைத்தார். மகன் நடுக்கத்தோடு எழுந்து வந்தான். ''நீ கீழே இறங்கு; சுசீலையை அழைத்துக்கொண்டு வேறு பகுதிக்குப் போய் உட்கார். ஆவலும் வெட்கமும் மோதிக்கொள்ள நீங்கள் தொல்லைப்படக்கூடாது இருவரும் தனியாகப் பயணஞ் செய்தால் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வாய்ப்பிருக்கும்; மகிழ்வாகவும் இருக்கும்'' என்றார். அதன்பின் பெண்ணும் பிள்ளையும் விடுதலைபெற்ற உள்ளத்தோடு வேறு பகுதியிற் போய் ஏறிக் கொண்டனர். ○

பெரும் பேராசிரியர், பண்டாரகர்

உ. வே. சாமிநாதர்.

(1885-1943.)

மேனாடுகளைப் பார்க்குமிடத்துத் தமிழகத்தில் மக்கள் தொண்டு செய்வார் எண்ணிக்கை மிக மிகக் குறைவு என்றே சொல்லலாம் ஏதேனும் ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்து கொண்டு சொற்பொழிவாற்றித் திரிவதும், பெரும் பெரும் மாநாடுகள் நடத்தி மக்களைக் கூட்டிக் கூரை அதிரும்படியும் கூட்டம் வியக்கும்படியும் பெரிய பெரிய தீர்மானங்களைப்போடுவதும், அவற்றை அரசினர் பார்வைக்கு அனுப்பிவிட்டுக் கையை உதறிக் கட்கத்து வைத்துக்கொண்டு வீடு திரும்புவதும், அன்றி நகராட்சி மன்றத்திலோ, சட்ட மன்றிலோ, பாராளுமன்றிலோ தாமும் ஒருவராய்ப்போய் அமர்ந்து கொள்வதுமே பொதுத் தொண்டு என்று மக்களாலும் தலைவர்களாலும் கருதப் பெற்றுப் பாராட்டும் பெற்று வருகின்றது. மனமும் அறிவும் வாழ்வும் ஈடுபடுமாறு, பயன்கருதாது உழைக்கும் மக்கள் தொண்டர் தமிழகத்து இலர் என்றே கூறிவிடலாம்.

உண்மையான மக்கள் தொண்டர்கள் இந்தத் தமிழகத்து மலராமைக்கும், ஒளிராமைக்கும் இங்குள்ள சாதி சமயப் பூசல்களும் கட்சிப் பாகுபாடுகளும், தாழ்வான செய்தித் தாள்களும், அருளுள்ளமும் பற்றற்றவாழ்வும் அற்ற செல்வர்களும், போலித் தொண்டர்களும் அரசியல் தலைவர்களுமே காரணமாவர்.

இத்தகைய நிலையில் தமிழகத்துள் ஓரிரு மெய்த் தொண்டர்களைப்பற்றி நினைக்கையில் நம் உள்ளம் வெயிலிடை நிழலெனக் குளிர்ந்து மகிழ்கின்றது. அவ்வருந்தமிழ்த் தொண்டர் ஓரிருவருள் எந்தமிழுக்கு இரவென்றும் பகலென்றும் பாராமல் காடும் மேடும் சுற்றியலைந்து, குடில்களையும் அரண்மனைகளையும், மடங்களையும் குடைந்து தேடி, கடலணைப்பிற்கும், தீயணைப்பிற்கும்

தீயோர் வினைக்கும் தப்பிப்பிழைத்த பழம்பெருந் தமிழ் நூல்களை, இத்தமிழ் உலகமும் தமிழரும் என்றென்றும் வியந்து போற்று மாறு, வெளிக்கொணர்ந்த பெரும் பேராசிரியர், பண்டாரகர் உ. வே. சாமிநாதர் ஒருவர் ஆவார். இவர் வரலாறு தமிழ் வரலாறும் தமிழர் வரலாறுமாகும்.

தமிழர் இன்றையுற்ற நாகரிக வாழ்விலோ இன்று பெற்ற இலக்கியங்களிலோ, அரசியல்உரிமைகளிலோ பெருமைப்படத் தகுந்தது ஒன்றும் இல்லை. தமிழர் பெருமைக்குக் காட்சிப் பொருளாய், கலங்கரை விளக்காய் என்றென்றும் மாட்சிமை குன்றுமல் ஆட்சி செய்யப் போவதெல்லாம், அவர்தம் கழகக் கால இலக்கியங்களே ஆம். இவ்விலக்கிய உயர்வுக்கும், இவற்றைத் தோற்றுவித்த வான்புலவர் கூட்டத்திற்கும் ஈடு இணை இந்த உலகெங்கணும் இல்லை. இதை வரலாற்று மயக்க மும் பெருமைப் பித்தும் இன்றி, அறிவும் உள்ளமும் தெளிந்து இலக்கியச் செழுமையை மட்டும் காண்பார் தெள்ளிதின் உணர் வர். ஆறுல் இத்தகைய சிறப்புகட்கெல்லாம் பெருங்காரணமாக இருந்தவருள் உ வே. சாவும் ஒருவர் என்னின் அது மிகை யாகாது. பார்ப்பனர் இனத்துப் பிறந்தார் ஒருவர் சாமிநாதர் போல் செந்தமிழ்த் தொண்டராகுதல் அரிதினும் அரிதே. திரு. வி. கோ. பரிதிமாற்கலைஞர் தனித்தமிழ் வல்ல தண்டமிழ்ப்பற்று ளர் எனினும், அறிவும் உள்ளமும் உடலும் ஒரு சேர உழைத்த வரில் சாமிநாதர் தனிநிலை பெற்றவர் ஆவர். கழகக் காலத்துப் பார்ப்பனர் சிலர் தொண்டே வாழ்வெனக் கொண்டிலங்கின ரேனும் பிற்காலத்தே, அன்னுர் இனவெறி தலையெடுப்ப, தமிழர் வாழ்வையும் மொழியையுமே அழிக்கத் தொடங்கினர். அவ் வழிப்பில் தலைப்புகாது உண்மைத் தமிழ்த் திறங்கண்டு உவந்த நெஞ்சினராய், நந்தமிழ் அன்னைக்கு வாழ்நாள் முற்றும் மேலான தமிழ்த் தொண்டு ஆற்றினுர் சாமிநாதர். தமிழர்க்குக் கழகக் காலம் பொற்காலமாக இருந்தது போலவே, இடைக் காலம் இருட்காலமாகவே இருந்தது; குல, சமயங்கள் தலை யெடுக்கத் தொடங்கின; அரசர்தம் களியாட்டங்கள் மிகுதியாக மண்டின. அறியாமையால் ஒருவரை ஒருவர் பகைத்தும் பழித் தும் தாம் அழியத் தலைப்பட்டனர்; மாதர் காதலும், கள்ளின் மயக்கமும் அன்னுரைக் கலக்குவித்த ஞான்றைப் புன்மைப் புலவர் பலர் இழிசுவைக் களிபாடல்களையும் உலா, தூது, மடல் முதலிய எண்ணிறந்த துறைகளில் வைத்துப் பாடித் தமிழன் னைக்குக் கறை சேர்த்தனர். கழக இலக்கியங்களும் அன்னுர் கைவயப்பட்டு ஒருபயனுமின்றிப் பரணிலும் குதிரிலும்முடங்கித் தூங்கின. இலக்கிய இருட் போர்வையுட் கிடந்த அந்நூல்களை ஒளிக்குக் கொணர்ந்து கண்களும் மெய்யும் வருந்த அவற்றைக் கூர்ந்து படித்துப் பிழையும் புலையும் நீக்கிப் பதிப்பித்துத் தமிழ் வேட்கையுற்ருக்கு, "இவை காண்; தமிழர் இலக்கியச் சொத்

துகள்'' எனத் தூக்கித் தந்த அச் சேப்பெரியனின் வரலாறு நினைவு கூரத் தகுந்த ஒன்றாகும்.

தஞ்சைப் பாவநாசம் வட்டத்துள் உத்தமதானபுரத்துள் வாழ்ந்தவரும், உடையார்பாளையம், அரியலூர் அரண்மனை இசைப்புலவரும் ஆகிய வேங்கடசுப்பன் என்பார்க்கும் சரசுவதி அம்மைக்கும், 1885 ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 19-ஆம் நாள் சாமிநாதர் பிறந்தார். பெற்றோரால் வேங்கடராமன் என்றும், சாமிநாதன் என்றும் அழைக்கப் பெற்றார். பின்னர் திரிசிரபுரம் பெரும்புலவர் திரு. மீனாட்சிசுந்தரனார், சாமிநாதன் என்ற பெயரே நன்றெனக் கூறியபின்னை அப்பெயரே வழங்குவதாயிற்று.

இளமையில் சாமிநாதர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பெற்றார். அக்காலத்திருந்த ஆசிரியர்கள் பலர்பாலும் கல்வி கற்றாலும் தம் ஏழாம் அகவைக் காலத்து அரியலூர்ச் சடகோபன் என்பார்பால் கற்ற தமிழ்க் கல்வியையே சாமிநாதர் பாராட்டியுரைக்கின்றார். ''என்று அவர் மாணவனாக நான் புகுந்தேனோ அன்றே த மி ழ் த் தா யி ன் அருட்பரப்பிற் குகந்தவனானேன். எனக்குத் தமிழில் சுவை உண்டாகுமாறு கற்பித்த முதல் ஆசிரியர் சடகோபரே. அவர் சிறிதுசிறிதாக ஊட்டிய தமிழமுதத்தின் சுவை இன்னும் எனக்கு மறக்கவில்லை'' என்பது அவர் கூற்று. இவர் தந்தையார் இசையையும் தெலுங்கையும் இவர்க்குப் புகட்டவிரும்பினார். ஆனால் தமிழே இவரைக் கவர்ந்தமையால் இவர் தமிழ்க் கல்வி கற்கவே விரும்பினார். ''தமிழும் இசையும் எனக்கு இன்பத்தை அளித்தன. தெலுங்கில் அந்த இன்பத்தை நான் காணவில்லை; நான் வேண்டுமென்றே அதை வெறுக்கவில்லை'' என்று சாமிநாதர் உரைக்கின்றார். இவரை என்ன துறையில் பயிற்றுவிக்க வேண்டும் எனத் தந்தை சோர்வுற்ற காலத்தில், பலரும் பலவாறு அவர்க்கு அறிவுரை கூறினர். இந்நிகழ்ச்சிகள்பற்றி அவர் குறிப்பிடுகையில், ''உறவினர்களில் சிலர் நான் சமற்கிருதம் படிக்கவேண்டும் என்று விரும்பினார்கள். வேறு பெரியோர் சிலர் நான் ஆங்கிலம் படித்து முன்னுக்கு வர வேண்டும் என்று எண்ணினார்கள்; உதவி செய்வதாகவும் முன் வந்தனர். என் தந்தையோ இ சை யி ல் நான் வல்லவனாக வேண்டும் என்று விரும்பினார். எல்லாருடைய விருப்பத்திற்கும் மாறாக என் உள்ளம் இளமையிலிருந்தே தமிழ்த்தாயின் திருவருளைப் பெறவேண்டுமென்று அவாவி நின்றது. சமற்கிருதம், தெலுங்கு, ஆங்கிலம் இவற்றுள் ஒன்றேனும் என் உள்ளத்தைக் கவரவில்லை; சிலகால் அவற்றில் வெறுப்பைக்கூட அடைந்தேன்'' என்றுரைக்கின்றார்.

இதனால் தந்தையார் இவரை அடிக்கடி ''நீ ஒரு வேலைக்கும் பயனில்லாதவன்; பரிமாறுகிற வேலைக்குக்கூட பயன்படமாட்

டாய்'' என்பாராம். அதனால் குன்னத்தூரில் கணக்குப் பிள்ளைக் குப் படிக்கவைத்துக் கணக்கராக்கினார். தமிழ் கற்கும் இவர் விருப்பத்தை அறிந்து சேலம் சார்வாய் ஊர் குமாரசாமிப் பாவலரிடம் தமிழ்ச் செய்யுள்களையும், கம்பவிராமாயணம் முதலிய இலக்கியங்களையும் நன்னூல் முதலிய இலக்கணங்களையும் பாடமாகக் கேட்டார். பன்னிரண்டாம் அகவைக்குள் சாமிநாதர் நன்னூல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி வெற்றிவேற்கை, நன்னெறி, நீதிநெறி விளக்கம். நைடதம் திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களையும் கம்பவிராமாயணத்தில் ஒருசில சுவையான பாடல்களையும் மனப்பாடமாக ஒப்புவிக்கும் ஆற்றல் பெற்றார். சதகங்கள், மாலைகள் முதலியவற்றைப் படித்திருந்தார். பட்டினத்தார் பாடல்கள் முழுவதும் மனப்பாடம் செய்திருந்தார்; அவற்றைப் படித்ததால் அவ்விளமைப் பொழுதே பெண்டிர் மயல் வெறுத்தல், செல்வரை வெறுத்தல் முதலிய பாடல்களைத் தாமே இயற்றிப் பாடுவாராம். சாமிநாதர்க்குத் திருமண முயற்சி நடந்தது. 'பிள்ளைக்கேற்ற பெண் ஒருத்தியும் கிடைக்கவில்லையே' என்று பெற்றோர் கவலையுறும் பொழுது, 'நமக்கேற்ற தமிழாசிரியர் ஒருவரும் கிடைக்கவில்லையே' என்று இவர் வருந்துவாராம். இறுதியாக 14 ஆண்டான இவர்க்கு 8 ஆண்டுப் பேதையான **மதுராம்பிகை** என்ற சிறுமியை 1868–இல் திருமணம் செய்வித்தனர். திருமணம் பற்றி இவர் குறிப்பிடுகையில் ''நான் திருமணம் செய்து குடும்பியாகிவிட்டதனால் என்னிடம் புதிய முன்னேற்றம் ஏதும் உண்டானதாகத் தெரியவில்லை. திருமணத்திலும் பொருள் வருவாயிலும், ஊர்ப்பயணத்திலும் எனக்கு நாட்டமும் ஊதியமும் இருந்ததாகத் தெரியவில்லை. எனக்கு ஒன்றுதான் நாட்டம்; தமிழ்தான் எனக்குச் செல்வம்; அதுதான் என் அறிவுப் பசிக்கு உணவு; எவ்வளவுக் கெவ்வளவு நான் அதன் தொடர்பை மிகைப்படுத்திக் கொள்கிறேனோ அவ்வளவுக்கவ்வளவு எனக்கு மகிழ்ச்சி; நல்லது செய்தோமென்ற பொந்திகை; ஊதியம் அடைந்தோம் என்ற உணர்ச்சி உண்டாகின்றன. அன்றும் சரி, இன்றும் சரி இந்த நிலைமை மாறவே இல்லை'' என்று கூறுகின்றார்.

இவர்க்குத் தமிழ்க் கல்வியில்தான் ஆர்வமிருக்கின்றது என்று கண்டுகொண்ட இவர் தந்தை 1869–இல் செங்கணத்தில் உள்ள ஒரு புலவர்பால் காரிகைப் பாடங் கேட்கச் செய்தனர். பலரிடத்தில் இவர் தமிழ் கற்றாலும் இவர் உள்ளம் நிறைவுறும் படியும் ஐயங்கள் தீருமாறும் இவர்க்குத் தமிழ் கற்பிக்க ஒருவராலும் முடியவில்லை. இதுபற்றி இவரே, ''தமிழ் நாட்டில் இணையற்று விளங்கும் ஒரு தமிழாசிரியரிடம் அடைக்கலம் புகுந்து தமிழமுதத்தை வாரி நுகர்ந்து செம்மாந்து நிற்க விரும்பினேன்'' என்று குறிப்பிடுகின்றார்.

இவர்க்குத் தமிழ் கற்பிக்க ஏற்றவர் மாயூரம் தமிழ்ப் பெரும் புலவர் மீனாட்சிசுந்தரனாரே என்று பலரும் கூற, இவர் அவர்பால் கல்வி கற்கப் பேராவல் கொண்டு, தந்தையொடு ஆண்டுச் சென்றார். அவர் பெருமையைப் பற்றி முன்னே பலவாறும் பலரிடத்தும் கேள்வியுற்றிருந்தமையால் அவரை அவர் எழுத்தறிவிக்கும் இறைவன் எனப் போற்றினார். அவரை முதல்நாள் கண்டதுபற்றி அவர் குறிப்பிடுகையில், ''அப்புலவர் பெருமான் வரும்பொழுதே அவருடைய தோற்றம் என் கண்ணைக் கவர்ந்தது; ...... குளிர்ச்சியான பார்வை! வாழ்க்கையில் பண்பட்ட அமைதி......! பலகாலமாகத் தவம் புரிந்து ஒரு தெய்வக் காட்சிக்குக் காத்திருக்கும் அடியவனைப்போல் நான் அவரைக் கண்டேன்; அவரைக் கண்டவுடன் மகிழ்ச்சிக் கண்ணீர் துளும்பியது......அப்பெரும் புலவர்க்கு முன் காட்டுப் புறத்திலே தமிழறிவைத் திரட்டிக் கொண்ட நான் எவ்வளவு சிறியவன்'' என்றெழுதுகின்றார்.

மாயூரம் மீனாட்சிசுந்தரனார்பால் அவர் வேட்கை தீருமட்டும் தமிழ்க் கல்வி மாந்தினார். ''பிறரெல்லாம் தம்மிடம் ஒரு குறிப்பிட்ட அளவு செல்வத்தைப் பாதுகாத்து வைத்திருப்பவர்களைப் போல் இருந்தனர்; யாருக்கேனும் பணம் கொடுக்கும்போது ஒவ்வொரு காசையும் எடுத்துத் தட்டிக்காட்டிக் கையிலே கொடுப்பார்கள். என் ஆசிரியரோ பொற்குவியலை வாரிவாரிவழங்குவார் போல் இருந்தார்'' என்று அவர் பேரறிவுத் திறம்பற்றிச் சாமிநாதர் எழுதுகின்றார். மாயூரத்தில் இருந்த காலை 'நந்தனார் கீர்த்தனைகளை' இயற்றிய கோபாலகிருட்டிண பாரதியாரிடம் இசை நுணுக்கங்களையும் சிறிது காலம் சாமிநாதர் கற்றுவந்தார்.

பெரும் பேராசிரியரிடம் மாணாக்கராகவிருந்து கல்விகற்ற ஆறு ஆண்டுகளிலும் சாமிநாதர் நல்ல தமிழறிவு பெற்றார். கழகக் கால நூல்கள் தவிர மற்ற இடைக்காலநூற்களில் பெரும்பகுதியை அப்புலவர் பெருமான்பால் மிக்க நாட்டத்துடன் கற்றுத் தேர்ந்தார். ஆசிரியரின் பெருங்கல்வித் திறத்திற்கும் பாவன்மைக்கும் அக்காலத்தில் சிற்றரசர்கள்பாலும் பெரிய நிலக்கிழார்கள்பாலும் பெருமதிப்பிருந்தது. அவர் அடிக்கடி திருவாவடுதுறை, திருப்பனந்தாள் முதலிய சைவத் திருமடங்கட்கும் வேறு பல ஊர்கட்கும் போய்த் தங்கி மீள்வர். அக்காலங்களிலெல்லாம் சாமிநாதர் அவர் நிழலெனவே இருந்து பாடங்கேட்டு வந்தார். ஆசிரியர்க்கு உள்ள பாத்திறத்தை அறிந்து வியந்தார். உண்ணல் உறங்கல் முதலிய நேரங்கள் தவிர ஆசிரியர்பால் அவர் கற்ற கல்வி அவர் அறிவுப் பசியைத் தணித்தது.

1876-இல் பெரும் புலவர் மீனாட்சிசுந்தரனார் மறைந்த போது இவர் தாயிழந்த சேயாகித் தவித்தார். ஆசிரியர் தம்

பருவுடலைக்கண்டு உளங்கசிந்தார். "நான் ஒன்றுந் தோன்ருமல் என் ஆசிரியரின் புனித உடலையும் அமைதி வாய்ந்த முகத்தையும், எனக்கு அன்போடு பாடஞ் சொல்லிய திருவாயையும், அன்புப் பார்வையில் என்னைத் தழுவிய கண்களையும் பார்த்துப் பார்த்து விம்மினேன்" என்று அவர் பிரிவாற்ருமையைச் சாமிநாதர் குறிக்கின்ருர்.

சாமிநாதர் தம் ஆசிரியர் மறைந்த பின்னைத் திருவாவடுதுறையிலேயே சிறிது காலம் சுப்பிரமணிய தேசிகர் துணையில் இருந்தார். 1877–இல் தேசிகர் ஒரு வீட்டைக் கட்டிக்கொடுத்து இவர் குடும்பத்தை வரவழைத்துக் குடிவைத்துப் புரந்தார். தேசிகர் தென் மண்டிலப் பயணஞ் செய்யுங்கால் சாமிநாதரும் அவருடன் சோழ நாடு பாண்டி நாடு முதலிய செந்தமிழ் நாடுகளைப் பார்வையிட்டு ஆங்காங்குள்ள புலவர்களையும் புரவலர்களையும் கண்டு அளவளாவினர் இப்பழக்கம் பிற்காலத்தே அவர் நூல் வெளியீட்டில் ஈடுபட்டுச் சுவடிகள் தேடப் புறப்பட்டபோது மிகுந்த பயன் அளித்தது. ஆங்காங்கு இவர் தேசிகர் முன்னிலையில் இசை, கதைப்பொழிவு முதலியனசெய்து பாராட்டப் பெற்ருர். ஆங்காங்குள்ள புலவர்களின் பாடல்களையெல்லாம் ஒன்றுதிரட்டிச் சிறு நூல் ஒன்றை வெளியிட்டார். இவ்வெளியீடே இவரின் முதல் வெளியீடாகும்.

1880-இல் குடந்தைக் கல்லூரியில் இருந்த தமிழாசிரியர் தியாகராசர் ஓய்வு பெற விருந்தமையால், சாமிநாதரைத் தம்மிடத்துக் கொணர்ந்து ஆசிரியராக்கப் பெரு முயற்சி செய்தார். சாமிநாதரால் திருவாவடுதுறை மடத்திற்கு ஏற்பட்ட பெருமை கருதியும் அவர் அன்பின் அருமை கருதியும் தேசிகர் அவரைப் பிரிய மனமின்றி யிருந்தாலும், தியாகராசரின் பெரு முயற்சியால் சாமிநாதர் குடந்தைக் கல்லூரி ஆசிரியப் பணியை மேற்கொண்டார். இவர் முதன் முதல் பாடஞ் சொல்லப் புகுந்த வகுப்பில் இவரினும் முதிய மாணவரும் இருந்தனராம்; அவர்க்கு அக்கால் ஊதியம் ஐம்பது உருபாக்களே. முதல் ஊதியம் பெற்றுச் சாமிநாதர் தேசிகரைக் கண்டு தம்மை நெடுநாள் புரந்து காத்தமைக்கு அவர்க்கு நன்றி கூறினர். நன்றி உணர்வு பாட்டாக முகிழ்த்தது. அப்பாட்டு அவர் பாத்திறமைக்கு ஒரு சான்று. அது வருமாறு:

அற்ருர்க்குத் தாயனைய துறைசையில்சுப் பிரமணிய
அமலன் தன்பால்
கற்ருர்க்குக் குறையுளதோ? மற்றவன்தன் திருமுகத்தைக்
கண்ணிற் காணப்

**பெற்றூர்க்குத் துயருளதோ? உரைப்பமிக இனிக்குமவன்
பெயரை வாயால்
சொற்றூர்க்குத் துயருளதோ? இரும்புவியின் நாவலர்காள்
சொல்லு வீரே!**

இவர் குடந்தையிலிருந்தகாலையில் சேலத்திலிருந்து இராம சாமி என்பார் ஊராண்மை நடுவராக மாற்றலாகிக் குடந்தைக்கு வந்தார். அவரே பழநூற்களைப் பதிப்பிக்க ஒரு பெருந் தூண்டு கோலாய் இருந்தார். அவர் சிந்தாமணி என்னுங் காப்பியத்தை வெளியிட வேண்டினூர். சாமிநாதர் ஆசிரியர் வேலையிலிருந்து கொண்டே பல சுவடிகளைத் தேடித் தொகுத்தார். விடுமுறை நாட்களெல்லாம் பல ஊர்கட்கும் பலர் வீடுகட்கும் சென்று சுவடிகள் தேடினூர். எளிதாகத் தொடங்கிய பதிப்பு வேலை மிகக் கடினமானதாகப்பட்டதெனினும் சாமிநாதர் துணிவிழக்க வில்லை. சுவடி ஆராய்ச்சியில் ஒரு புதிய இன்பம் இருப்பதாகப் பட்டது அவர் அரும்பாடுபட்டுத் தேடிய 24 சிந்தாமணிச் சுவடிகளையும் ஆழ்ந்து ஒவ்வொரு வரியாகப் பொறுமையுடன் படித்து அவற்றுள் கண்ட வேறுபாடுகளை உணர்ந்தார். அக்கால் அவர்க்குற்ற தொல்லைகளைப்பற்றிச் சாமிநாதர் இவ்வாறு எழுது கின்றூர். "பாட வேறுபாட்டுக்குக் கரை காணமுடியவில்லை. மனம்போன போக்கிலே எழுதியவர்களால் நேர்ந்த தொல்லைகள் எவ்வளவோ உண்டு. இது கொம்பு, இது சுழி என்று பிரித்தறிய முடியாது. மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியே இராது. ரகரத் துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. இடையின ரகரத் திற்கும் வல்லின றகரத்துக்கும் வேறுபாடு தெரியாமல் தடுக்கி நின்ற இடங்கள் பல. உரை இது, மூலம் இது, மேற்கோள் இது என்று வேறுபாடு தெரியாமல் முட்டுப்பட்ட சூழல்கள் பல. நச்சினூர்க்கினியருடைய பொழிப்பிலே வரும் பாடற் பகுதி களைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல்மயங்கிய நேரங்கள்பல; ஓர் ஏட்டுக்கும் மற்றோர் ஏட்டுக்கும் இடையே உள்ள பாட வேறுபாடுகளால் அடைந்த கலக்கத்திலிருந்து மீள வழியின்றி மயங்கிய நிகழ்ச்சிகள் பல; உரைக்கு மூலமும் மூலத்திற்கு உரையும் கிடைக்காமல் பல முறை இடர்ப்பட்டேன். சமண சமய நுணுக்கமான செய்திகள் விளங்காமையால் பலகால் தடு மாறி நின்றேன். இலக்கணச் செய்திகளை அமைத்துக்கொள்ள வகையறியாமல் பலபொழுது குழம்பினேன். ஆனுல் இப்படித் தடுமாறித் தடுமாறித் தொல்லையுற்றதில் எனக்கு அலுப்பே தோன்றவில்லை மேலும் மேலும் ஊக்கமே உண்டாயிற்று."

நூற்பதிப்பால் இவர் பல தொல்லைகள் உற்றூர். கடன்பட் டார்; கையேந்திஞர்; மதியாதார் மனைவாயில்சென்று மிதித்தார்; உண்ணூர்; உறங்கார்; உற்றூர் உறவினரை எண்ணூர்; இடர்ப்

பட்டார். இவர் இளமை கண்டு எள்ளினர் சிலர்; ஏசினர் சிலர்; வெகுண்டனர் சிலர்; வேண்டாத வேலை யென்று சிலர் புறக் கணித்தனர். இவற்றிற்கெல்லாம் துளியும் தளராது நூற்பதிப் பிலேயே ஈடுபட்டு 1887-இல் ஓலைச் சுவடியில் தூங்கிக் கிடந்த சிந்தாமணியை அச்சிட்டு வெளியிட்டு என்றும் நந்தாமணி யாக் கினர். உரையும், முகவுரையும், கதைச் சுருக்கமும், அரும் பொருள் அகரமுதலியும் தெளிவுறச் சேர்த்திருந்தார். வெளிநாடு களிலும் அவர் பதிப்பைப் பாராட்டினர். ''தமிழுலகில் அந்நூல் உண்டாக்கிய இன்பக் கிளர்ச்சிக்கு அடையாளமாகப் பல மடல் கள் வந்தன. அவற்றால் எனக்குத் தமிழ் ஆராய்ச்சியில் மிகுந்த ஊக்கம் உண்டாயிற்று.'' என்று சாமிநாதர் எழுதுகின்றார்.

அதன்பின் தம் வாழ்நாள் முற்றும் பழஞ்சுவடிகளைத் தேடு வதிலும் அவற்றை அச்சியற்றிப் பெரும் ஆராய்ச்சிக்குறிப்புகளு டன் வெயிடுவதுமாகவே அலைந்து திரிந்தார். சீவக சிந்தாமணி வெளிவந்தபின் இவர் பதிப்புக்குச் ''சீவக சிந்தாமணி பிரகடன வழுப் பிரகரணம்'' என்ற கண்டன நூலும் எழுந்தது. பலர் நேரிடையாகவும் மறைமுகமாகவும் தூற்றினர். இத்தகைய எதிர்ப்புகளைப் பற்றிச் சிறிதும் கவலுறாது 1889-இல் பத்துப் பாட்டையும், 1892-இல் சிலப்பதிகாரத்தையும், 1894-இல் புறநானூற்றையும் வெளியிட்டார். இரண்டாண்டுகட்கு ஒரு

தமிழ்மொழியின் சொல்வளம்.

கொடை.

ஐயம்	— இரப்போர்க்கிடுவது.
கைந்நீட்டல்	— வேலைக்காரர்க்கு விழா நாளிற் கொடுப்பது.
ஈவு	— இறைவன் பிறப்பில் ஒருவனுக்களித்த பேறு
பரிசு	— திறமை கண்டளிப்பது.
கொடை	— உயர்ந்தோர்க்கும் சிறு தெய்வங்கட்கும் கொடுப்பது.
நன்கொடை	— முழுவுரிமையாகக் கொடுக்கும் கொடை.
கட்டளை	— கோயிலில் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு விடும் 'நிபந்தம்'
உருவரை அல்லது முற்றூட்டு	— முழுவுரிமையாக அளிக்கும் நிலம்.
இறையிலி	— அறத்திற்கு வரியில்லாது விடப்பட்ட நிலம்.
பரிசம்	— மணப் பெண்ணுக் களிப்பது.
வண்மை	— வரையாதளிப்பது.

— ஞா. தே.

முறை ஒரு பழைய நூலைத் தேடி ஆராய்ந்து பதிப்பித்து வெளி யிடுமாறு தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அவர் எத்துணை இன்னல்களுக்கு ஆளாகியிருக்க வேண்டுமென்று அவர் போல் நூல் வெளியீட்டில் ஈடுபட்டவரே உணர்தல்முடியும். 1893இல் தந்தையாரைப்பிரிந்து மிகவும் துயருற்றார். தம் நூலாராய்ச் சிக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டபோதெல்லாம் தம் தந்தை யார் குடும்பப் பொறுப்பை மேற்கொண்டு இவர்க்கு ஒரு துயரும் ஓரிடரும் வந்துறாமல் காத்ததை எண்ணி எண்ணி மருகினார். தந்தையார் தாம் தமிழ்க் கல்வி கற்க விரும்புகையில் இசைந்த தும், நல்லாசிரியர் ஒருவரைத் தேடி அவர்பால் தம்மைக் கொண்டு சேர்த்ததும், நூல் வெளியீட்டில் தாம் குடும்பத்தை மறந்து ஈடுபட்டகாலை தம்மைக் குடும்பத் துயர் மேவாமல் காத்த துமான அவர் பேரன்பு பாட்டாக முகிழ்த்தது. அப்பாடல் இது:

''பற்றலெங்கே செந்தமிழைப் பற்றிக்கற் றோர்பலர்பால்
துற்றலெங்கே மீனாட்சி சுந்தரநல் லாரியன்பால்
கற்றலெங்கே கற்றுக் கவலையொரீஇ யந்நிலையே
நிற்றலெங்கே இன்றுவரை நீயருள்செய் யாவிடினே!

1895-இல் மணிமேகலையும் அவர்தம் அரிய முயற்சியால் வெளிவந்தது. அதன் பின்னர் ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, குறுந்தொகை, பரிபாடல், பெருங் கதை, உதயண குமார காவி யம், திருவிளையாடற் புராணம் முதலியன தொடர்ந்து வெளி வந்த வண்ணமிருந்தன. மற்றும் பிற்காலத்துப் பிரபந்தங்கள், பெரும் பேராசிரியர் மீனாட்சிசுந்தரனார் பாடிய நூல்கள் முதலிய வற்றையும் அச்சிட்டு வெளியிட்டார். அவர் வெளியீடுகள் தனிப்பெருமை வாய்ந்தன. புலவர்க்கும் ஆராச்சியாளர்க்கும் அவர் வெளியீடுகள் போற் பயன்படும் வேறு பதிப்புகள் இல்லை. தம் இறுதிக் காலம் வரை நூல் ஆராய்ச்சியிலும் வெளியீட்டி லுமே தம் வாழ்வைச் செலவிட்டுத் தமிழன்னைக்கு மறைந்து போன இலக்கிய மணிகளைப் பூட்டிப் பெருமை செய்தனர். இலக்கிய நூல்கள் வெளியிட்டதுடன் அவற்றை உரைநடை யாகவும் எழுதி மாணவரும் பொதுமக்களும் பயனடையுமாறு செய்தார்.

இவரின் அருந்தமிழ்த் தொண்டினைப் பாராட்டிச் சென்னை அரசினர் 1905-இல் ஆயிர உருபா பொருளுதவியும், 1906-இல் பெரும் பேராசிரியப் பட்டமும் வழங்கினர். 1917-இல் திரவி டக் கல்வி அணிகலன் (திராவிட-வித்யா பூஷணம்) என்றும், 1925-இல் தென்னிந்தியக் கலைக்குவை (தாக்ஷிணாத்ய கலா நிதி) என்றும், 1932-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் இலக்கியப் பண்டாரகர் (Doctor of Literature) என்றும் பட்டங்கள் பெற்றார்.

தமிழுக்கே பிறந்து தமிழ் நூற்களுக்காகவே அலைந்து, மறைந்த தமிழ் இலக்கியங்களை அழியாது காத்த பெரும் பேரா சிரியர், பண்டாரகர். சாமிநாதர் 1943-இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். தமிழ் நூல்களுக்காக ஊர் ஊராய் அலைந்த அவர் கால்களும், அவற்றைப் பதிப்பித்த கைககளும் ஓய்ந்தன. தமிழ் மறுமலர்ச்சிக்கும் தமிழர் மறுமலர்ச்சிக்கும் அவர் ஒரு விடி வெள்ளியாகவிருந்தார் என்றால் அது வெறும் புகழுரையாகமட் டும் அமையாது. அவர் பதிப்பித்த நூல்கள் அவர் அரும் பெரும் உழைப்பை என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமே இல்லை. *

தீண்டாமையும், கோடி உருபாக்களும்.

1921-இல் காந்தியடிகளின் பாழி (ஆசிரம) மேற்பார்வை யில் குசராத் கல்விச் சாலை யொன்று நிறுவப் பெற்றது. சாதி சமய வேறுபாடுகளின்றி எல்லா இன மாணவர்களையும் அதில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று காந்தியடிகள் பள்ளி மேலாளர்கட்குக் கட்டளையிட்டிருந்தார். இதை மேலாளர்கள் சிலரும் பொதுமக்களும் விரும்பவில்லை.

அக்கால் பொதுமக்களில் பெரிய வாணிகர்கள் சிலர் பெருந் தொகைகளுடன் காந்தியடிகளை அணுகினர். அவர்கள் அடி களிடம், "நாங்கள் இக்கல்விச்சாலையை விரிவு செய்ய நூருயிர உருபா நன்கொடை கொண்டுவந்துள்ளோம்; இதோ கையிலிருக் கின்றது. நீங்கள் தீண்டத் தகாதவர்களைமட்டும் அக்கல்விச் சாலையில் சேர்த்துக் கொள்ளவேண்டாம் என்று கட்டளையிடுவீர் களாயின் இந்தப்பணத்தை உங்களிடம் இப்பொழுதே கொடுத்து விடுவதன்றி மேலும் இருநூருயிர உருபாக்களை விரைவில் திரட் டிக் கொடுப்போம்" என்று வேண்டினர்.

உடனே அடிகள், "கல்விச் சாலையின் வளர்ச்சிக்கு நன் கொடை திரட்டும் பொறுப்பு என்னைச் சார்ந்தது. நீங்கள் கோடி உருபாக்கள் கொடுப்பதானாலும் என்னால் நீங்கள் சொல் வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அல்லது வெள்ளைக்காரர்கள் தாம் ஆகட்டும், "தீண்டத்தகாதவர்கள் ஒதுங்கியே வாழட்டும்; உனக்குத் தன்னரசுரிமை கொடுத்து விடுகின்றோம் என்றாலும், நான் அத்தகைய தன்னரசுரிமைவேண்டாம் என்றே கூறுவேன். தீண்டாமையை யொழித்து, எல்லாரையும் ஒற்றுமையுடன் வாழச்செய்வதே என் முதல் வேலை" என்று குறிப்பிட்டார். *

தமிழ் மொழியின் சொற்பெருக்கம்.

மனச் செயல்கள்.

—:—

முன்னுதல்	கருத்தோடும் கருத்தில்லாமலும் ஒன்றை உளத்திற்கொள்ளுதல் (to think).
உள்ளுதல்	ஒன்றை ஊக்கத்தோடு முன்னுதல்.
உன்னித்தல்	ஒன்றை முன்னிக் கண்டு பிடிக்க முயலுதல். (to guess).
உணர்தல்	புலன் வழியாலன்றி நேரடியாக உள்ளத்தால் அறிதல்.
அறிதல்	புலன் வழியாக உள்ளத்தாற் காணுதல்.
உகத்தல்	ஒன்றைச் சிறப்பாக விரும்புதல் (to choose).
ஊகித்தல்	காரண கருமங்களில் ஒன்றை யொன்றாலறிதல் (to infer).
எண்ணுதல்	ஆழ நினைத்தல்.
ஓர்தல்	ஒன்றி அல்லது பொருந்த வுணர்தல்.
ஓய்தல்	நுணுகி ஆய்தல்.
உன்னுதல்	'தியானித்தல்'
கண்ணுதல்	கவனமாய் முன்னிப் பார்த்தல் (to consider).
கணித்தல்	கணக்கிட்டுக் கண்டு பிடித்தல் (to calculate).
கருதுதல்	சற்று விருப்பத்தோடு முன்னுதல் (to intend).
சூழ்தல்	'ஆலோசித்தல்'
தெரிதல்	ஒன்றன் தன்மையறிதல்.
தெரித்தல்	தெரிந்தெடுத்தல் (to select).
தெளிதல்	ஐயம் அகலுதல் அல்லது கலக்கம் நீங்குதல்.
தேறுதல்	உறுதி கொள்ளுதல்; நம்புதல்.
தேர்தல்	ஆய்ந்தெடுத்தல் 'பரீட்சித்தல்'
நினைத்தல்	'ஞாபகங்' கொள்ளுதல் (to remember).
மதித்தல்	'நிதானி'த்தல்.
மானித்தல்	முன்னியளத்தல்.
தீர்மானித்தல்	முன்னியளந்து முடிவு செய்தல்.
உசாவுதல்	உரையாடி 'ஆலோசி'த்தல் (Discussion).
கொள்ளுதல்	ஒன்றை நம்புதல்.
உட்கொள்ளுதல்	உள்ளத்திற் கொள்ளுதல்

— ஞா. தே.

இங்கர்சால்.
1833-1899.

முன்னிதழ்த் தொடர்ச்சி
வாழ்வியல்.

நூற்சுருக்கம்

உரிமை.

(THE LIBERTY.)

நகரங்களில் வாழ்பவர் மிகப் பலருள் ஒரு சிலர் ஆயிரக் கணக்கிலும் இலக்கக் கணக்கிலும் உருபாக்களைத் திரட்டிச் சேர்த்துக்கொண்டு, பல்லாயிரக் கணக்கான ஏழைகள் சோர்ந்த முகங்களுடனும் வெளிர்ந்து காய்ந்த உதடுகளுடனும் ஒன்று மில்லாமல் அன்றாட உணவுக்குப் பலவாறு தொல்லையுறுவதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களைச் சரி செய்யக் கூடிய சட்ட திட்டங்கள் இருக்கட்டும்; இவர்களுக்குள்ள மாந்தத் தன்மை எங்கே போயிற்று! கோடிக்கணக்கானவர்கள் பசித்திருக்க இவர்கள் மட்டும் மீமிசை நுகர்வுகளில் திளைத்துக் கிடக்கின்றனரே! இத்தகைய உள்ளங்களை நினைக்க எனக்கு வியப்பாக விருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் கடலில் மூழ்கிச் சாவுக்குப் போராடிக் கொண்டிருக்கையில் கடற்கரையில் நின்று கொண்டு தட்டு முட்டுப் பொருள்களைத் தம்முடைமை என்று பொறுக்கி மூட்டைகட்டும் ஓர் அறிவில்லாப் பேதையின் செயலைப் போன்றது இச் செல்வர்களின் செயலும்.

இன்னுஞ் சிலர் இருக்கின்றனர். இவர்கள் தங்கள் மனைவியிடம் தங்களின் உள்ளம், பெருமை, உடல் நலம் இவற்றை ஒப்புக் கொடுத்துவிடுவார்கள். ஆனால் ஒரு செல்லாத காசைக் கூட அவர்களிடம் கொடுக்கமாட்டார்கள்; வரவு செலவுக் கணக்குப் பேரேட்டைத் தம்மிடமே வைத்துக் கொள்வார்கள். இவர்களுக்கு ஒரு சொல்: உங்கள் மனைவியைப் பாருங்கள். அவள் அன்றாடம் இரந்துண்ணும் ஏழை போலிருப்பதையும், நாளும் அவள் உங்கள் எதிரில் வந்து அச்சத்தோடும் தயக்கத் தோடும் 'ஓரணா கொடுங்கள், ஓர் உருபா கொடுங்கள்' என்று கேட்டுப் பெறுவதையும், நீங்கள் பெருமிதத்துடனும் வலிந்த குரலோடும், சென்ற கிழமை ஓர் உருபா கொடுத்தேனே; அதை

என்ன செய்தாய்? என்று கேட்பதையும், அவள் நடுக்கத்தோடு விடை அளிப்பதையும் எண்ணிப் பாருங்கள். இத்தகைய பெண்களுக்கும் ஆண்களுக்கும் எத்தகைய குழந்தைகள் பிறக்கும் என்பதைக் கருதுங்கள். இந்த உலகத்தில் உங்களுக்கிருக்கும் சொத்து எல்லாம் ஓர் உருபாதானு? என்ருலும் அதை ஓர் அரசனைப்போல் செலவழியுங்கள். அதனை உலர்ந்து போன ஒரு சருகு என்றும், நீங்கள் பரந்து படர்ந்த நெடுங்காடுகளுக்கு உரிமையாளன் என்றும் எண்ணிக்கொண்டு அதை வீசியெறியுங்கள். ஓர் ஏழையாகவிருந்தாலும் உங்களிடமிருக்கும் இறுதியான நாணயத்தைக்கூட அரசனைப்போல் செலவிடுங்கள். அரசனுகவிருந்து ஏழையைப் போல் நடக்காதீர்கள்.

நீங்கள் எதைச் சிறந்ததென்று கருதுகின்றீர்களோ அதை உங்கள் குடும்பத்திற்குக் கொடுங்கள். நீங்கள் எப்படிப் பிறர்கண்கட்கு எழிலோடும் பெருமையோடும் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றீர்களோ, அப்படியே உங்கள் மனைவி மக்களையும் இருக்கச் செய்யுங்கள். முன்பு திருமணத்தின் பொழுது உங்கள் மனைவியிடம் ஆராக் காதலொடு பேசுகையில் ஆ! உங்கள் இரு கண்களும் எவ்வளவு ஒளி பெற்றுத் திகழ்ந்தன! உங்கள் நடையில் எத்தனை எடுப்பு! ஓர் இளவரசன்போல் காணப்பட்டீர்களே!ஆனுல் இப்பொழுது நீங்கள் எத்துணையளவு கீழ்ப்பட்டவராகவும் சிடுசிடுப்புள்ளவராகவும் நடந்தாலும், அவள் மட்டும் உங்களை முன்போலவே அன்புடன் நெருங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களே! உங்கள் செருக்குத் தான் என்ன? உங்கள் இறுமாப்புக்கென்ன பொருள்?

இவ்வுலகில் பிறந்த எத்துணைக் கீழ்ப்பட்ட ஒருபெண்ணும் தன்னிடம் உண்மையான அன்புள்ளத்தோடு நலஞ்செய்பவரிடம் உண்மையாகவே நடந்துகொள்வாள் என்று உங்கட்குச் சொல்கின்றேன்.

''நீங்கள் காணுகின்ற உண்மைகள், மனைவி மக்களைப் பற்றிய உரிமை முழக்கங்கள் முதலியனவெல்லாம் பணக்காரர்களுக்குத் தாம் பொருந்துமே யொழிய ஏழைகளால் கடைப்பிடிக்கக் கூடியனவன்று'' என்று சிலர் கூறலாம். பணக்காரர்களின் வளமனைகளின் நிலவு மாடங்களைவிட, ஏழைகளின் பொத்தல் குடிசைகளிலேயே உண்மையான அன்பு தவழ்கின்றது என்று நான் திட்டமாகச் சொல்வேன். புறத்தே எளிமையானதும் பகட்டில்லாததும், ஆனுல் அகத்தே அன்பு நிறைந்ததும் இன்பம் பொழிவதுமான ஏழைகளின் குச்சுகளைத் தாம் இறைவன் தங்கியுள்ள கோயில்களாக நான் கருதுகின்றேன்.

ஒருவர்க்கும் உதவமுடியாதவாறு நீங்கள் அத்துணை ஏழை யாகவிருக்கமுடியாது. இவ்வுலகமெங்கும் மிகவும் மலிவான கொள் முதல், ஆனால் உயர்ந்த சரக்கு அன்பு ஒன்றே! வாங்கு பவனுக்கும் விற்பனை செய்பவனுக்கும் இழப்பில்லாமல், ஆனால் இ ரு வ ரு க் கு ம் மிக ஊதியந் தருகின்ற ஒரேவொரு பொருள் அன்பே!

ஒருவனை அவனுக்குள்ள செல்வப் பரப்பைக் கொண்டும், அவனுக்குள்ள பெயர்ப் பரவலைக் கொண்டும் பெரியவன் என்று கூறுவதில் ஒரு பொருளுமில்லை. உள்ளம் துளும்பிய அன்புள்ள வனாகவும், அதனால் மகிழ்வுள்ளவனாகவும் ஒருவன் இருக்கின் றானா என்று பாருங்கள்; அவனே மக்களுள் பெரியவன். மகிழ்ச் சிக்கு ஏழ்மை தடையுமன்று; செல்வம் உடைமையுமன்று. மகிழ்வே ஒருவனுடைய வாழ்வின் நெடுமை முழுதும் துணை யுள்ள அழியாத சொத்து! அதன் கொள் முதல் அன்பு.

ஒருகால், உலகின் மாபெரும் மறவனான நெப்போலியனின் கல்லறைக்குச் சென்றேன். இறைவன் திருமன்றுபோல் பொன் னாலும் பூவாலும் பொலிவுற நின்ற தூய வெண் பளிங்கால் ஆன அக்கல்லறைமேல் நொடிப்பொழுது சாய்ந்து நின்றேன். மறம் பொதிந்த அவனதுவல்லுடலின் சாம்பல் அக்கல்லறையுள் அடக் கம் செய்யப்பட்டிருந்தது. சில இமைப்பொழுது அக்கல்லறை யின் அழகையும் எடுப்பையும் மறந்து அங்கு நினைவூட்டிக் கொண்டிருக்கும் அம்மாபெரும் மறவனின் வ ா ழ் க் கை யை நினைத்தேன்.

அவன் தற்கொலை செய்து கொள்ளும் மனத்துடிப்புடன் சீன ஆற்றங்கரையில் உலவுவதையும், பிறகு உடுலோன் நகரத் திலிருப்பதையும், பிறிதொருகால் பாரிசு நகரத்தில் ஆர்த்தெழும் மக்கள் கூட்டத்தை அடக்கியொடுக்குவதையும், மற்றொருகால் இத்தாலியப் போர் மறவர்களுக்கு ஆணையிட்டு ஏவல் செய்வ தையும், வேறொருகால் மூவண்ணக் கொடியைக் கையிற் பிடித்த வாறு 'உலோடிப்' பாலத்தில் ஆரவாரத்துடன் நடந்து செல்வ தையும், இன்னொரு பொழுதில் எகிப்தில் உள்ள பிரமிடுகளின் நீண்டு விரிந்த நிழலில் இங்குமங்குமலைவதையும், ஒருகால் ஆல்ப்சு மலையைக் கடந்து பிரான்சு நாட்டின் கொடியை நடுவ தையும், மாரெங்கோவிலும், உல்மிலும், மாறி மாறிக் காட்சி தருவதையும் மனக் கண்களால் காண்கின்றேன். அவன் படைகள் உருசியாவில் சருகுகள் போல் விரட்டப்படுகின்றன ஒரு புறம்; ஆயிரக்கணக்கான போர் மறவர்களால் துரத்தியடிக் கப்பட்டுப் பாரிசுக்கு ஓடிவருகின்றான் மறுபுறம்; பின் எல்பா திட்டிற்கு நாடு கடத்தப்படுகின்றான்; அவனின் முழு வல் லாண்மை ஆட்சி! கொடூரமான வாட்டர்லூ போர்! அப்பப்பா!

இறுதியாக, செயிண்ட்எலீனு திட்டில் தன்னிரு கைகளையும் பின் புறமாகக் கட்டியவாறு, துயர் மூங்கிய முகத்துடன் கடலைப் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சியைக் காண்கின்றேன்.

அவனைப் பார்த்தயர்ந்த விழிகளால் அவன் காலடிபட்டுச் சிதைந்த பிணங்கள், ஏதும் எவருமற்ற துணையிலிகள், கணவன் மாரைச் சாக்கொடுத்த கைம்பெண்டிர்தம் கண்ணீர் முதலியவற்றையும் காண்கின்றேன். அவன் தன் புகழையும் செருக்கையும் நிலைநாட்ட எத்தனை ஏழையுள்ளங்களின்மேல் நடையிட்டிருக்கின்றுன்! அவனை விரும்பிக் காதலித்த அந்த ஒரே யொருத்தி-பேதைப்பெண்-சோசப்பைன்-எப்படி அவனுல் இகழப்பெற்றுக் கைநெகிழ்க்கப்பட்டாள்! கொடுமை! ஒரே கொடுமை! எங்கும் அவலப்புகையின் நடுவில் கடுமையான சிவந்த நாக்குகளுடன் ஊரைக்கொளுத்தப் புறப்பட்ட அக்கொடுமை நெருப்பின் வாழ்க்கை இப்பொழுது எங்கே? தனி ஒருவனின் வலுகட்டாயமும் வல்லாண்மையும் சேர்ந்து அன்பும் அமைதியும் கொண்ட ஒன்றுமறியா உள்ளங்களை அலைக்கழிப்பதா?

ஆணை வெறியேறி மக்களை மதிக்கத் தவறிய அந்தப்பெரிய மன்னனைக் காட்டிலும், கிழிந்துபோன மிதியடிகளுடனும் அமைதியான முகத்தில் புன்னகையுடனும் நடமிடும் ஓர் ஏழைக் குடியானவனுகவே நான் இருக்க விரும்புகின்றேன். கொடி முந்திரியின் அகன்ற இலைகளால் மூடப்பட்டுக் குளிர்ச்சியான நிழல் சூழ்ந்த ஓலைக்குடிலில், மனைவி, அவனருகில் அமர்ந்து நூல் நூற்றுக் கொண்டிருக்க, கள்ளங் கவடற்ற அவன் செல்வக் குழந்தைகள் அவன் தொடையிலும் தோளிலும் புரள, தன் எளிய முயற்சியால் ஈட்டிய நீர் அளைந்த பருக்கைச் சோற்றை அள்ளிக் குடித்துக் குளிர்ந்த வயிற்றுடனும் வாயுடனும் மகிழ்ச்சியே செல்வம், அன்பே வாழ்க்கையாய்த் தன்னுயிரை நடத்திக் கொண்டு இருக்கின்றுனே, அந்த உழவனுகவிருக்கவே நான் பெரிதும் விரும்புகின்றேன். புலையும் கொலையும் சுற்றிச் சூழ்ந்த வளமனைகளில் வாழ்வதைக் காட்டிலும், அலைவும், உலைவும் அற்ற புழுதி மண்ணில் குப்புறப்படுத்து அமைதியாக உறங்கவே விரும்புகின்றேன்.

நீங்கள் ஏழையாயிருப்பினும் செல்வராயிருப்பினும் உங்கள் மனைவியை நறுமணமுள்ள ஒரு மலரைப்போல் பாராட்டுங்கள். அவளையும் மணக்கச் செய்யுங்கள்! உங்கட்கும் மகிழ்வு செய்து கொள்ளுங்கள்!

உங்களால், உள்ள முழுமையோடு விரும்பப்பெற்ற உங்கள் மனைவி பூப்படைந்த பொழுது உங்கள் கண்களுக்கு எழிலாயிருந்த வகையாகவே மூப்படைந்த பொழுதும் இளமையாகவே

குறள்நெறிக் கதைகள்-2. -மாரி-அறவாழி.

புறத்தாறு!

''அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்'' (குறள்: 46)

அவன் அதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை! ஒரு பேதைப் பெண், அதுவும் அவனுக்கடங்கிய மனைவி அவனை முகத்தில் அறைவதுபோல் எதிர்த்து வாயாடுவதா? ...... இதைவிட வேறென்ன தலைகுனிவு வேண்டும் ஓர் ஆண்மகனுக்கு?

செயலற்றுச் சாய்வு நாற்காலியில் வீழ்ந்தான் அருள். மனம் கனன்று கொண்டிருந்தது.

சுவர்க்கப்பால் விம்மல் ஒலி. ஆம்; அவள்தான் அழுது கொண்டிருக்கிறாள்!

''ம்!...எல்லாம் போலி!...மிகவும் அமைதியானவள்போல் ஏழு ஆண்டுகளாய் நடித்து வந்திருக்கிறாள். இப்பொழுதல்லவா உண்மை உருத் தெரிகிறது ...ச்சே! என்ன வாழ்க்கை .....! என்ன குடும்பம் .... !''

கண்களை மூடிக்கொண்டான் அவன்.

அருளைத் தீயவன் என்று கூற முடியாது. மனைவியிடத்தில் அன்பும், குடும்பத்தில் பற்றும் நிறையப் பெற்றவன்தான் என்றா லும் ஒரு சிறுகுறை! எல்லாரையும் விட, தானே பெரியவன், தன்னையறியாமல் வீட்டில் எதுவும் நடக்கக்கூடாது என்ற இறு மாப்பு அவனுக்குண்டு. அதில் தவறில்லையென்றாலும் எதற்கும் ஓர் அளவு இருக்க வேண்டுமல்லவா!

குடும்பம் என்பது ஆண் மகன் ஒருவனைமட்டும் கொண் டதோ, அவன் ஒருவனுடைய நலத்திற்காக ஏற்பட்டதோ

[முன் பக்கத் தொடர்ச்சி]

இருப்பாள். காலம் அவள் உடலை முதுமையாக்குமேயன்றி அழகற்றவளாக ஆக்குவது முடியாது. அவளும் உங்கள்பால் முதுமையைக் காண்பதில்லை. அடுப்படியில் உரிமை முகிழ்க்க வீட்டில் ஆட்சி செய்ய விரும்புகின்றவன் நான். வீடு உரிமை யால் பெருமையுறும் பொழுதே நாடும் உரிமையால் சிறப்புறும். உண்மையன்பு, உண்மையுரிமை எங்குளதோ அங்கேயே நான் வாழ விரும்புகின்றேன்.

(தொடரும்)

அன்றே! அவனுடன் துணை கொள்ள மனைவி என்று ஒருத்தி இருக்கும்பொழுது அவளுக்கும் சில உரிமைகளை விட்டுக் கொடுக்கத்தானே வேண்டும்!

ஏனோ இதை அவன் புரிந்து கொண்டானில்லை. அதன் பயனாகச் சிறு சிறு பூசல்கள் அன்றாட வாழ்க்கையில் இடம் பெற்றன.

எங்கெங்கிருந்தோ வரும் நீரோட்டங்களையெல்லாம் மறுக்காது ஏற்றுத் தேக்கிக் கொள்ளும் பரந்து ஆழ்ந்த நீர்ப்பரப்பைப் போல, அமைதியும் குடும்பப் பொறுப்புமே உருவான பவளமும் அவற்றையெல்லாம் பொறுமையோடு தாங்கி வந்தாள். ஆனால் அத்தேக்கம் ஒருநாள் திடீரென்று பொங்கிக் கரைகளையும் கடந்து வழியும் என்று எவர்தான் எதிர்பார்த்திருக்க முடியும்?

நடந்தது இவ்வளவுதான்.

அவர்கள் வாழ்வில் பூத்த ஒரே மலர் அருமை மகன் முருகன்! அவனுடைய இரண்டாவது பிறந்த நாளைச் சிறப்பாகக்கொண்டாட வேண்டுமென்று பவளத்திற்குத் தணியா ஆவல்! ஏழு நாட்களுக்கு முன்பே பிறந்த நாள் பற்றிக் கணவனிடம் குறிப்பிட்டுத் தனது நோக்கத்தையும் வெளியிட்டிருந்தாள் அவள். ஆனால் அருளோ பிறந்த நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன் திடீரென்று அலுவல் காரணமாக வேலையாளிடம் வீட்டுக்குச் சொல்லியனுப்பிவிட்டு வெளியூர் சென்றுவிட்டான்.

பவளத்திற்கு ஏமாற்றம்! மகன் பிறந்தநாளைப்பற்றி எவ்வளவோ கூறியிருந்தும், ஒன்றும்கூறாமல் வெளியூர் சென்றுவிட்ட கணவனை எண்ணி வருந்தினாள்.

மறுநாள் பையன் பிறந்த நாள்! அவனுக்கொரு புத்தாடை கூட இல்லை. செய்வதறியாது உட்கார்ந்திருந்தவள் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவளாய் எழுந்தாள். அருகிலிருந்த துணிக் கடை ஒன்றிற்குச் சென்று பையனுக்கு ஒரு மேற்சட்டையும், காற்சட்டையும் தைப்பதற்குத் தேவையான துணியைக் கடனாக வாங்கி அங்கிருந்த தையற்காரனிடம் கொடுத்துவிட்டு வீடு திரும்பினாள். கடைக்காரன் அவள் குடும்பத்திற்கு அறிமுகமானவன் அல்லன். எனினும் அவளிருக்கும் தெருவிலேயே அவனும் குடியிருந்தவனாதலால் நம்பிக் கொடுத்தான்.

விடிந்தது. தையற்கடைச் சிறுவன் துணிகளைக்கொணர்ந்து தந்துவிட்டுப் பவளத்திடம் கூலிகேட்க, அவள் மறுநாள் தருவதாகக் கூறி அவனை அனுப்பினாள்.

முணுமுணுத்த வண்ணம் சிறுவன் வீட்டைவிட்டு நகர்வதற்கும், வெளியூரிலிருந்து திரும்பிய அருள் வீட்டை அடைவதற்கும் சரியாக இருந்தது. இரவு முழுவதும் வண்டியில் தூக்கமின்மையால் உண்டாகியிருந்த களைப்புடன், காசில்லா நிலையும், தன்னைக்கேட்காமல்செய்த மனைவியின் 'தான்தோன்றித்தனமும்' சேரவே அவனுக்கு எரிச்சல் மிகுந்தது.

தன்னைக் கேட்காமல் செயலாற்றிய பவளத்தைக் கடிந்து திட்டினான். தான் செய்ததில் நேர்மையிருப்பதாக எண்ணிய அவளும் அவனிடம் வழக்காடினாள். தடித்த சில சொற்கள் பவளத்தின் வாயிலிருந்து வெளிப்பட்டன. அவை அப்படியொன்றும் கொடியவையல்ல எனினும் மிகவும் நுண்ணிய உணர்வினனான அருளுக்கு நெருப்புக் கணைகளாகப்பட்டன.

பேரதிர்ச்சியால் அவன் புழுங்கினான். அவளுடன் சொல்லாடாது அடங்கினான். மனமுடைந்து நைந்தான். பவளத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் விரும்பாது உட்கார்ந்துவிட்டான்

உட்கார்ந்த நிலையிலேயே கண்ணயர்ந்துவிட்ட பவளம் திடுக்கிட்டு விழித்தபொழுது நள்ளிரவாகியிருந்தது. எழுந்து கணவன் படுக்கையை எட்டிப்பார்த்தாள்; அவன் அங்குக் காணப்படவில்லை. மாறாக ஒரு சுவடி கிடந்தது. திக்கென்ற நெஞ்சுடன் அதைக் கையிலெடுத்தாள். உள்ளே வைக்கப்பட்டிருந்த ஒரு துண்டுத் தாளைக் கண்டு பரபரப்புடன் படித்தாள். அது அருள் எழுதிவிட்டுச் சென்ற சீட்டு.

''......நடந்ததை எண்ணி மனம் புழுங்குகிறேன்; எனக்கு வாழ்வு கசந்துவிட்டது. அமைதியை நாடிப்போகின்றேன். உரிமைக்காசுத் துடித்த உனக்கு இனி முழு உரிமை வழங்குகின்றேன். என்னைத் தேடவேண்டாம். நான் சேர்த்துவைத்திருக்கும் ''வாழ்வுக் காப்புத் தொகை'' விரைவில் உனக்குக் கிடைக்கும். இனி உன் விருப்பப்படி உரிமைப்படி வாழ்ந்துகொள்; அதை யாரும் தடை செய்யமாட்டார்கள்........''

மடலை முடித்த பவளம் அலறி வீழ்ந்தாள்.

வீட்டினின்றும் வெளியேறிய அருள் கடற்கரையை அடைந்தபொழுது நள்ளிரவு மணி இரண்டிருக்கலாம். அவன் உள்ளத்தைப் போலவே எங்கும் காரிருள்! அச்சம் விரவிய பேரமைதி! அதைக் கலைத்து ஓலமிட்டுக் கொண்டிருந்தது கருங்கடல். அவனை விருப்போடு ஏற்கத் துடிக்கும் கடைசி உறவு அதுதான்!

மணலில் உடலைச் சற்றே சாய்த்தவாறு வானத்தைப் பார்த்தான்; கையில் குழந்தையுடன் கைம்மைக் கோலம்பூண்டு அலையும் பெண்ணொருத்தியின் எண்ணற்ற உருவங்கள் தன்னைச் சூழ்ந்து நிற்பது போன்ற ஒரு மனக்காட்சி உள்ளும் புறமும் ஆரவாரித்தது.

தன்னை மறந்து கண்களை மூடினான் அருள். மீண்டும் அவன் கண் விழித்தபோது அடிவானம் வெளுத்துக் கொண்டிருந்தது. தன்னுள் இழைந்துகொண்டிருந்த ஏதோ ஒரு மயக்க உணர்வு சிறிது சிறிதாக மறைந்து ஒருவகைப் புத்தொளி பிறந்தது போலிருந்தது அவனுக்கு.

வீட்டைப் பற்றிய நினைவு மெல்ல தோன்றியது....தன்னை நம்பியுள்ள ஒரு பேதைப் பெண்ணையும் அவள் குழந்தையையும் துறப்பதா?......சே!......என்ன மடமை!......

அவன் கால்கள் அவனையறியாமலேயே ஊரை நோக்கி நடந்தன.

வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டுக்காரர் பவளம் கொடுக்கச் சொன்னதாகக் கூறித் திறவு கோலைத் தந்தார். வாங்கித் திறந்து உள்ளே நுழைந்தான் அருள்.

இரவு ஏற்றிய விளக்கு எண்ணெய் குறைந்து மெல்ல மங்கிக் கொண்டிருந்தது. அதனருகே ஒரு சீட்டு. எடுத்துப் பார்த்தான். பவளத்தின் எழுத்துகள்.

“......அத்தான்,

எங்களை விட்டு நீங்கள் பிரியமாட்டீர்கள் என்றே நினைத்திருந்தேன். உங்கள் அன்பு அத்தகையது. அதனால் ஒருவேளை நீங்கள் திரும்பி வரலாம் என்ற நம்பிக்கையுடன் இதை எழுதுகின்றேன். உரிமைக்காக நான் போராடியதாக எண்ணவேண்டாம். உங்களைக் கேளாமல் எதையும் செய்யவேண்டும் என்ற விருப்புடையவளும் அல்லள்! இதைமட்டும் உங்களைக் கேளாமல் செய்கின்றேன். குழந்தையுடன் நான் போகின்றேன். இனி உங்களுடன் போராட நான் இருக்கமாட்டேன்......இறுதியாக இவ்வொரு முறையும் என்னை மன்னித்து விடுங்கள்...”

உதிர்ந்த கண்ணீர்த்துளிகள் மடலை நனைத்தன. வீட்டின் உட்புறத்தில் அவன் பார்வை சென்றது.

பவளத்தின் புடவையினால் குழந்தைக்காகக் கட்டப்பட்ட தொட்டில் அந்த மங்கிய ஒளியில் மெல்ல அசைந்து கொண்டிருந்தது.

பாலுண்ணிகளின் கருக்காலம்.

(THE GESTATION PERIOD OF MAMMALS)

(ஒவ்வோர் உயிரும் கருப்பையுள் இருந்து வளர்கின்ற காலங்கள் பல்வாறு உள. கீழே பாலுண்ணிகள் (Mammals) சிலவற்றின் கருக்காலங்கள் தரப்பட்டுள்ளன)

1)	வீட்டுச் சுண்டெலி (Mouse)	20—21 நாட்கள்.
2)	வீட்டு எலி (Rat)	21—25 ,,
3)	முள்ளெலி (Hedgehog)	30 ,,
4)	காட்டு முயல் (Hare)	30—34 ,,
5)	முயல் (Rabbit)	30—34 ,,
6)	நரி (Fox)	60 ,,
7)	பூனை (Domestic)	60—63 ,,
8)	நாய் (Domestic)	58—65 ,,
9)	சீமை எலி (Guineapig)	68—71 ,,
10)	அரிமா (Lion)	106 ,,
11)	பன்றி (Pig)	115—120 ,,
12)	வெள்ளாடு (Goat)	140—160 ,,
13)	செம்மறியாடு (Sheep)	144—160 ,,
14)	புலி (Tiger)	155 ,,
15)	குரங்கு (Monkey-Macaca)	160—179 ,,
16)	கரடி (Black-Bear)	210 ,,
17)	ஆ (மாடு) (Cow)	270 ,,
18)	மாந்தன் (Man)	280 ,,
19)	குதிரை (Horse)	330—380 ,,
20)	வரிக் குதிரை (Zebra)	333—335 ,,
21)	திமிங்கிலம் (Whale)	334—365 ,,
22)	கழுதை (Donkey)	365—380 ,,
23)	ஒட்டகம் (Camel)	390 ,,
24)	கொம்புமூக்கி (Rhinoceros)	540 ,,
25)	யானை (Elephant)	600—630 ,,

——

உடல்பற்றிய உண்மைகள் சில.

- நெஞ்சாங்குலையில் உள்ள தாமரைக்காய் ஒரு நிமையத்திற்கு 65-இலிருந்து 90 முறைகள் விரிந்து சுருங்குகின்றது.

- நெஞ்சாங்குலையினின்று உடல் முழுதும் குருதியைப் பாய்ச்சுகின்ற குழல்களுக்கு நாடி என்றும், குருதியை வடிக்கின்ற குழல்களுக்கு நாளம் என்றும் பெயர்.

- உடலில் உள்ள லிம்போசைட்டிசு என்ற நிணநீர் அணுக்கள், உடலின் எப்பகுதியில் ஊறு நேரிட்டாலும் உடனே அப்பகுதியைச் சூழ்ந்துகொண்டு, உட்புகுந்து ஊறுசெய்யும் நோயணுக்களுக்கு எதிரான அணுக்களைத் தோற்றுவிக்கின்றன. ஊறுபட்ட பகுதி வீங்குவது, இந் நிணநீர் அணுக்கள் அவ்விடத்து வந்து நிறைவதால் ஏற்படுவதே

- உணவை உட்கொள்ளாமல் நாம் பல கிழமைகள் உயிர் வாழல் கூடும். செரிமானப் பொருள்கள் உடலின் உள்ளுறுப்புகள் பலவற்றிலும் சேர்த்து வைக்கப் பெறுவதே இதற்குக் காரணமாகும்.

- தொண்டையில் உள்ள உள்நாக்கு, உணவு முன் தொண்டைக்குப் போகுங்கால் மூக்குத் துளைகளின் வழி மேல் நோக்கிப் போகா வண்ணம், அவ்வழியை அடைத்துக் கொள்ள உதவுகின்றது.

- வயிற்றின் பெரும்பகுதியைச் சிறுகுடலே அடைத்துக் கொள்கின்றது. இச் சிறுகுடல் புழுக்கள் துடிப்பதுபோல் அலையலையாக எப்பொழுதும் தொடர்ந்து நெளிந்து கொண்டே இருக்கின்றது.

- சிறு குடல் ஏறத்தாழ 24 அடி நீளம் உள்ளது.

- சிறு குடலின் முடிவிலும் பெருங் குடலிலும் ஏராளமான நோயணுக்கள் (பாக்டீரியாக்கள்) உள்ளன.

- மாப்பொருள்கள், சருக்கரைப் பொருள்கள் போன்றவை தாம் மாந்த உடலுக்கு ஆற்றல்தரும் தலையாய உணவுப் பொருள்கள்.

- உடலின்கண் உள்ள அணுக்கள் எல்லாவற்றிலும் மிகவும் சிறியவை உயிர்த் தோற்ற அணுக்களே!

- மூளையிலிருந்து அவ்வப்பொழுது தோன்றுகின்ற செய்திகளைப் பரப்பவும், பிறவிடங்களிலிருந்து வரும் செய்திகளை மூளையகத்திற்கு உணர்த்தவும் இடை நிலையமாகவிருப்பது முதுகின் நடுநரம்பே

- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்கால நிகழ்வுகளை ஒன்றன் பின் ஒன்ருக அறியச் செய்வதும், தம் இயக்கங்களை ஒழுங்காகவும் சீராகவும் அமைப்பதும் சிறு மூளையே ஆகும்! சிறுமூளை இல்லாவிடில் நம் இயக்கங்கள் அருவருப்பாகவும், தொடர்பற்றுத் தாறுமாருகவும் இருக்கும். *

தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

கையொப்பம்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்.	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஒன்றரை உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

நமது பண்பாடு.

[புதுவை சுப்பிரமணியன்]

உடல்நிலைக்க நல்லுணா வேண்டும் ஒளிருஞ்
சுடர்நிலைக்க நெய்யொன்று வேண்டும் – இடர்நிலைக்கப்
பாராத நாட்டுக்கும் பண்பாடு வேண்டுமே
சீராக வாழுதற்குச் செப்பு. (1)

நாடென்றால் நல்லதமிழ் நாடென்போம் ஏனென்றால்
பீடொன்றும் பண்பாடு பெற்றதென்போம் – ஈடொன்றா
ஏடொன்று முப்பாலாய் ஈந்ததப் பண்பாடு
வீடொன்று நாமடைய வென்று. (2)

வெள்ளெருக்கின் கூட்டத்து வீழ்ந்த நறுமுல்லை
எள்ளளவும் நாற்றம் இழக்குமோ – தெள்ளுதமிழ்
நாட்டார் உறைவதெந் நாடெனினுந் தம்முயர்பண்
பாட்டை மறப்பரோ பார். (3)

எத்துறையின் நீர்வந் திணைந்தாலுந் தன்னியல்பில்
எத்துணையுங் குன்றா உவர்க்கடல்போல் – எத்திசையோர்
வந்து கலந்தாலும் மாறாது செந்தமிழர்
சொந்தப்பண் பாடென்று சொல். (4)

பண்டைத் தமிழர் படைத்தளித்த பண்பாடு
கண்கள் இரண்டாற் கவின்பெறுமே – உண்டவற்றுள்
பாவேந்தர் போற்றுமெய்க் காதலொன்று மற்றொன்று
மாவேந்தர் போற்றும் மறம். (5)

வாகைச் சிறப்பொன்றோ வண்டமிழர்ப் பண்பாட்டுக்
கீகைச் சிறப்பும் இயல்பாமே – தோகை
மயிலும் மலர்க்கொடியும் மண்ணுள் ளளவும்
பயிலுந் தமிழ்க்கொடையின் பாங்கு. (6)

அறத்தாற் பொருள்சேர்த்தல் அஃதும் வறுமை
குறித்தார்க் குவக்கக் கொடுத்தல் – நிறைத்த
புகழ்சேர்த்தல் இஃதளிக்கும் பூரிப்பில் என்றும்
மகிழ்தல்நம் பண்பாட்டின் மாண்பு. (7)

பொது அறிவு.

கடல் படு செல்வம்

முத்து, பவளம் முதலிய மணிப் பொருள்களையும், மீன், யாமை, நண்டு முதலிய உணவுப் பொருள்களையுமே கடலிலிருந்து கிடைக்கின்ற செல்வமாகப் பண்டையோர் கருதினர். ஆனால் இக்காலத்தே அறிவியல் முறைப்படி கடல் நீரிற் கரைந்துள்ள செல்வத்தை அறிவியலறிஞர் பலவாறு கணக்கிட்டுள்ளனர்; அச்செய்தி வியத்தற்குரியதாம்.

ஒரு கற்பரும (Cubic Mile) அளவுள்ள கடல் நீரில் ஏறத்தாழ 22,000 பவுண்டு பொன் கலந்திருப்பதாகவும், அதன் மதிப்பு ஏறத்தாழ 32 கோடி உருபாக்கள் என்றும் கணக்கிடப் பெற்றுள்ளது. அதே அளவுள்ள அந்நீரில் ஏறத்தாழ 30 கோடி உருபா பெறுமானமுள்ள வெள்ளி கலந்திருப்பதாகவும் கூறப் பெறுகின்றது.

உலகின் கடல்நீர் முழுமையிலுமுள்ள பொன்னையும், வெள்ளியையும் அறிவியல் அறிஞர் பிரித்தெடுப்பாராயின், உலகிலுள்ள ஒவ்வொருவர்க்கும் ஒரு டன் எடையுள்ள பொன்னும் அதனினும் மிக்க வெள்ளியும் கிடைத்துவிடும்.

[முன்பக்கத் தொடர்ச்சி]

மொழிக்கோ ரிலக்கண முண்டென்றால் வாழும்
வழிக்கோ ரிலக்கணமும் உண்டே! – விழிக்கோர்
இமையென்ன எந்தமிழ்ப் பண்பாட்டைக் காக்க
அமைந்த அரணும் அவை. (8)

இயற்கையோ டொன்றிய வாழ்வில் எளிமை
பயக்குநல் இன்பம் பருகி - மயக்குநிறை
வெற்றுர வாரம் விலக்கி நலம்பெறுதல்
அற்றேநம் பண்பா டறி. (9)

ஒன்றே குலமிங் கொருவனே தேவனென
அன்றே உலகுக் கறிவித்த - தன்றியும்
யாதும்ஊ ரேமற்றி யாவருமே கேளிரென
ஓதும்நம் பண்பா டுணர். (10)

இரண்டு கோடி டன் அளவுள்ள கடல் நீரில் ஒரு டன் ''அயோடின்'' என்ற மூலகமும், புகைப் படங்கள் திரைப் படங்கள் முதலியவற்றிற்கு மிகத் தேவையான புரோமைன் என்ற மூலகமும் கிடைக்கின்றன. பத்து இலக்கம் டன் எடையுள்ள நீரில் 1272 டன் மக்னீசியம் என்ற மூலகம் கிடைப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். செம்பும் இரும்புங்கூட சிறிய அளவில் அந் நீரில் கலந்துள்ளன. இவையன்றி மாழை (உலோக) உப்புகளில் குளோரின், சோடியம், சல்பேட்டுகள், கார்பனேட்டுகள், சுண்ணச் சாரங்கள் முதலியவை சிறுசிறு அளவுகளில் கலந்திருக்கின்றன. இந்த உப்புகள் ஒரு கற்பரும அளவு நீரில் 16 கோடி டன் வரை கலந்திருக்கின்றன எனக் கணக்கிட்டுள்ளனர். கடல் நீரின் முக்கால் பங்குக்குமேல் நாம் உண்ணும் உப்பு கலந்திருக்கின்றது.

மேலே கூறிய செல்வங்களன்றிக் கடலில் விளையும் செடி கொடிகளிலும் ஏராளமாகப் பயன் கிடைக்கின்றது. கடற்பாசிகளை ஐரோப்பியரும், கெல்ப் என்ற கடற் பூண்டைச் சப்பானியரும் உண்கின்றனர். பனிப் பாலடை (Ice cream) யில் கலக்கும் அல்சின் என்னும் பொருள் மேற்கூறிய கெல்ப் எனும் பூண்டிலிருந்தே கிடைக்கின்றது. அங்குக் கிடைக்கும் அகர் எனும் பிறிதொரு வகைப் பூண்டு தாள் (Paper) செய்யவும், நுண்ணுயிர் ஆய்வுக்கும் பயன்படுகின்றது. கடலிலிருந்து கிடைக்கும் இன்னொரு வகைப் பூண்டினின்று பீர் என்னும் வெறிநீர் எடுக்கப்படுகின்றது.

கடலிலுள்ள திமிங்கிலத்தின் நெய், மெழுகுத் திரிகளும், கிளிசரைனும் செய்யப் பயன்படுகின்றது. அதன் குடலிலுள்ள அம்பர் நெய்யால் அம்பர் என்ற மணப்பொருள் செய்கின்றனர். சுறு, காட் என்னும் மீன்களினின்று உணவுச் சாரமுள்ள நெய்கள் எடுபடுகின்றன. சுறு மீன் நெய், தோல் மெருகிடப் பயன்படுகின்றது.

இங்குக் கூறப்பட்டனவன்றிக் மணக்கற்ற செல்வங்களையும் அவற்றால் நிறைந்த பயன்களையும் நாம் கடலிலிருந்து பெறுகின்றோம்.

———

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந்துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்றனர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

புகழ்.

திருவள்ளுவரால் 'புகழ்' என்னும் தலைப்பில் கூறப்பெற்ற புகழின் தன்மையை இங்குச் சிறிது காண்போம்.

பொதுவாகப் புகழைப் விரும்புவது மாந்த வியல்பு. புகழைப் போல் தெவிட்டாத பொருள் வேறில்லை என்றுகூடச் சொல்லி விடலாம். அம்மம்மா! சிறு குழந்தைகளுக்கு மட்டும் புகழ் *தெவிட்டுகின்றதா என்ன? தன் தம்பி தமையனைவிட,* தங்கை தமக்கையைவிட, எதையும் தானே நன்றாகச் செய்ததாக இருக்கவேண்டும்-எதையும் தானே முதலில் பெற்றதாக இருக்க *வேண்டும்-எல்லாரும் தன்னைப் பாராட்டி* மதிக்க வேண்டும்-என்பன போன்ற புகழ் நோக்கில் குழந்தைகளுக்கு எத்துணை விருப்பம்! இத்தகு புகழ் வேட்டை அகவை முதிர முதிர, தெரு *வில் விளையாடும் போதாகட்டும்-பள்ளி வாழ்க்கையிலாகட்டும்-* உலக அரங்கிலாகட்டும்-நீடித்துப் பல்வகை உருவங்கொள் கிறது.

புலவர்--சுந்தர சண்முகனார்.

உலகில் ஒரு *சிலர்* தங்களை எவராவது புகழமாட்டார்களா என்று ஏங்கிப் பாடு கிடக்கின்றனர்; புகழ்பவரைத் தேடி அலை *கின்றனர்; புகழ்மாலை சூட்டுபவருக்கு வேண்டிய நலங்கள்* செய்து தருகின்றனர். தங்களை எவரும் புகழவில்லையென்றால், தாங்களாகவே தங்களை மணிக்கணக்கில் புகழ்ந்து கொள்கின்ற *னர்; அப்புகழைப் பொறுமையுடன்* கேட்பதற்கு ஆட்களைத் தேடியலைகின்றனர்; அவர்கட்கு வேண்டிய நலனையும் செய் கின்றனர். எத்துணைப் புகழ்ப் பித்து!

இவ்வளவுக்கும் இப் புகழ்ப் பித்தர்கள் ஆற்றியுள்ள அருஞ் செயல்கள் என்னென்னவாக இருக்கக் கூடும்? பிறரை மிகுதி *யாகத் திட்டியிருப்பார்கள்; அடித்திருப்பார்கள்;* அடி தடி வழக் கில் வெற்றி பெற்றிருப்பார்கள்; அல்லது, கல்வியிலோ விளையாட் டிலோ திறமை காட்டியிருப்பர். பல்வகைப் போட்டிகளில் *பரிசு பெற்றிருப்பார்கள்.* அல்லது, மிகுதியாகப் பணம் சேர்த் திருப்பார்கள்; பலருக்குத் தலைமை தாங்கியிருப்பார்கள்; அல்லது மிடுக்காக உண்டு உடுத்துச் செலவு செய்வார்கள்; எப்போதும்

அரச குடும்பத்தினர்போல் காட்சியளிப்பார்கள். இவர்தம் அருஞ் செயல்கள் இத்தகையனவே. அப்பப்பா! இவற்றுக்கா இத்துணைப் புகழ் வேட்டை!

இவற்றால் கிடைப்பது உண்மைப் புகழாகாது; வெறும் போலியே! இந்தப் போலிப் புகழுக்குத் தமிழ் மொழியில் 'ஒளி' என்று பெயராம். தோன்றிச் சிறிது நேரம் இருந்து மறையும் மின் ஒளியைப் போன்றதே இந்தப் போலிப் புகழும்! செயல் செய்த அப்போதுமட்டும் சிலருக்குச் சிலரால் பாராட்டுக் கிடைக்கும் சிலர் மேலும் சிறிது காலம் பாராட்டப் பெறுவர். ஒரு சிலர் வேண்டுமானால் இறக்கும் வரையும் பலரால் பாராட்டப் பெறலாம். அவ்வளவுதான்.

ஆனால், புகழ் என்பது இத்தகையதன்று. அது எப்போதும் எல்லாராலும் பாராட்டப் பெறுவதாகும்.

ஆம், முற்கூறிய பல்வகைச் செயல்களும், செய்தவர்களின் உடல் வன்மை, உழைக்கும் ஆற்றல், அறிவுத் திறன், ஆரவாரம் முதலியவற்றை அறிவிக்கின்றனவே தவிர, அவற்றால் மன்பதைக்குக் கிடைக்கக்கூடிய நேரடியான பெரு நன்மைகள் யாவை? இல்லையாதலின், அவர்கள் சிலபோதுமட்டும்-சிலரால் மட்டும் சிறிதளவு மட்டும் பாராட்டப் பெறுவர். ஆனால், தம்மைப் பற்றிக் கவலைப்படாமல், தம் உடல் பொருள் உயிர் அனைத்தையும் மக்கள் கூட்டத்திற்குப் பயன் படுத்துபவர் எவரோ அவரே எப்போதும் எல்லோராலும் பெரிய அளவில் பாராட்டப் பெறுவார். அவருக்குக் கிடைக்கும் அழியாப் பாராட்டுக்கே புகழ் என்று பெயராம்.

உலகிற்கு உதவவேண்டும் என்றால், அந்த உதவி எந்த வகையிலும் இருக்கலாம்—அந்த ஈகை எந்த உருவத்திலும் இருக்கலாம். அதனால் ஒருவர்க்கும் தீமையின்றிப் பலர்க்கும் பயன் கிடைக்கவேண்டும். அத்தகைய ஈகையால்தான் நிலைத்த புகழ் கிடைக்கும். பிறர்க்கு ஈபவரைப் பற்றித்தான் மக்கள் அக்கறை கொள்வர்-எப்போதும் அவர் புகழே உரைப்பர். இத்தகைய புகழைவிட ஒருவருக்குச் சிறந்த ஊதியம் இப்பிறவியில் வேறு என்ன இருக்கமுடியும்? இவ்வுலகில் ஒருவருடைய உடல் உடைமைகள் எல்லாம் அழிந்துவிடும்; ஆனால் அவரது உயர்ந்த புகழ்மட்டும் என்றும் அழியவே அழியாது. இக்கருத்துகளை வள்ளுவர் வாயிலாய்க் கேட்போம்:-

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

''உரைப்பார் உரைப்பவை எல்லாம்இரப்பார்க்கு ஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்''

''ஒன்ரு உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்ருது நிற்பதொன்று இல்''

இவ்வகையாக, அழியும் பொருளைப் பலர்க்கும் பயன்படுத்து வதால் அழியாப் புகழ் உண்டாகும் என்ற நுட்பத்தைப் புரிந்து கொள்ளும் அறிவு எல்லார்க்கும் இருப்பதில்லை; இருந்தால், பொருளைப் பூட்டி வைத்துவிட்டுப் புகழைக் கோட்டை விடுவார் களா? பொருளைப் பிறர்க்கு உதவுவதால் நமக்கு இழப்பு ஏற்படு வதுபோல் தோன்றினும். அஃது உண்மையான இழப்பாகாது. அதில் நன்மை இருக்கிறது-அதாவது அந்த இழப்பில் புகழாகிய ஆக்கம் (செல்வம்) அடங்கியிருக்கிறது. இப் புகழைப் பெற்ற வர்கள் இறந்துவிட்டாலும் உண்மையில் இறந்தவராகக் கருதப் படமாட்டார்கள். என்றும் உள்ளவராகவே மதிக்கப் பெறு வார்கள். அதாவது, அவர்தம் ஊன் உடம்பு மறையினும் புக ழுடம்பு மறைவதில்லை யன்ரே? இவ்வாறு ஆக்கத்தைத் தரும் இழப்பையும், என்றும் நிலைக்கச் செய்யும் இறப்பையும் கைவரப் பெறுபவரே உயர்ந்த சான்ருேராவர்.

உலகில் சிலர் புகழ்தரும் செயல்களின் அருகிலும் அணுகா மல், இழிவான செயல்களிலேயே இறங்கிவிடுகின்றனர். அதனுல் இவர்களை உலகினர் இகழ்கின்றனர். அதற்காக இவர்கள் தம்மை இகழ்கின்றவரை நோகின்ருர்கள். இது தேவையில்லையே! புகழ்ச்செயல் புரிபவரை உலகம் புகழத் தவருது. அதுபோலவே இகழ்ச் செயல் புரிபவரையும் உலகம் இகழத் தவறவே தவருது. இந்த உலகியற்கையை ஒவ்வொருவரும் உணரவேண்டும். எனவே இழிசெயல் புரிபவர்கள் தம்மை இகழ்பவரை நோகாமல் இவ்விகழுக்குப் பொருட்டான தங்களைத் தாங்களே நொந்து கொள்ளவேண்டும். ''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'' (உரை கல்) அன்ருே? ''பெருமையும் சிறுமையும் தான்தர வருமே'' என்பது பட்டறிந்த முதுமொழி யாயிற்றே!

சிலர், ''நாங்கள் என்ன இழிசெயல் செய்தோம்? கள், களவு, காமம், கவறு, பொய், கொலை, கொள்ளை முதலிய குற்றங் களுள் எக்குற்றம் புரிந்தோம்? ஒன்றும் இல்லையே! யாருக்கும் எத்தீங்கும் செய்யவில்லையே! நாங்கள் உண்டு-எங்கள் செயல் உண்டு என்றுதானே இருக்கிரும்! அப்படியிருக்கவும் எங்க

ளைப் பலர் இகழ்ந்து பழிக்கின்றார்களே! இது ஏன் ?'' என்று கேட்கலாம். இவர்கள் இழிசெயல் ஒன்றும் செய்யவேண்டிய தில்லை; புகழான செயல் செய்யாதிருப்பதே - பெருங்குற்றமாயிற்றே! இஃது ஒன்றே போதுமே உலகம் இவர்களைப் பழிப்பதற்கு! உடலாற்றலும் அறிவு நலனும் பொருள் வாய்ப்பும் பெற்றிருப்பவர்கள் உலகிற்குப் பல நல்ல பணிகள் புரியவேண்டியது கடமையாயிற்றே! உலகத்தாரின் ஒத்துழைப்பால்-கூட்டுறவால் தானே இவர்கள் வாழ்கிறார்கள்! எனவே, இவர்கள் உலகிற்கு உதவாதிருப்பது, புகழை இழந்ததாகமட்டும் ஆகாது-இகழை வலியத் தேடிக் கொண்டதாகவும் ஆகும்.

''புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்''

''வசைஎன்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்''

வள்ளுவனார்க்கு இங்கே கசப்பு வந்துவிட்டது போலும்! புகழ் இல்லாதவரது உடம்பைச் சுமந்து கொண்டிருக்கும் மண்ணால் பயனில்லை என்கிறார்.

''வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்''

'புகழ் இல்லாதவரைப் பொறுத்த நிலம்'என்று ஆசிரியர் சொல்லவில்லை. 'இசையிலா யாக்கை பொறுத்த நிலம்' என்றே ஆசிரியர் கூறியுள்ளார். இசையிலா யாக்கை என்றால், புகழ் இல்லாத உடம்பு என்று பொருளாம். இதிலிருந்து, 'புகழ் இல்லாதவரது உடம்பில் உயிர் இல்லை-அது வெற்றுடம்பாகிய பிணமே' என்பது புலனாகிறதன்றோ? மேலும் உடம்புக்கு உண்மையான உயிர் புகழ்தான் என்பதும் புலனாகும்! எனவேதான், புகழ் பெற்றவர்களின் உடம்பு சுட்டெரிக்க, அல்லது புதைக்கப்பட்டுங்கூட, புகழ் என்னும் உயிர்ப்பொருள் உலகில் உலவிக் கொண்டிருக்கிறது போலும்! புகழ் இல்லாதவர்கள் இருப்பதைவிட இறப்பதே மேல்-அதனால் நிலத்தின் சுமை குறையும் என்னும் கருத்தையும் வள்ளுவர் இங்குக் கூறுகின்றார் சுமந்த நிலம் என்னாது 'பொறுத்த நிலம்' என்று அவர் கூறியிருப்பதிலிருந்து, போனால் போகிறதென்று இரக்கமுற்று நிலம் பொறுத்துக் கொண்டிருப்பதாகவும் ஒரு குறிப்புக் கிடைக்கின்றது. புகழில்லாதவர்களால் ஒரு பயனும் இல்லையாதலின், அவர்களைச் சுமந்துகொண்டிருக்கும் நிலப் பகுதியால் பயனில்லை என்றார் திருவள்ளுவனார். அந் நிலத்தால் பயன் இருக்குமாயினும், ஒன்றும் உதவாதவர்களையும் இழிசெயல்களே புரிபவர்களையும் சுமந்து கொண்டிருக்கிற

ஒரு வசையே போதுமே அந்நிலத்திற்கு! எனவே, வசை (பழி) யில்லாத முறையில் அந் நிலத்தால் வளப்பமான பயன் அளிக்க முடியாது என்னும் கருத்தில் 'வசையிலா வண்பயன் குன்றும்' என்றார் ஆசிரியர். ''எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்று ஔவையாரும் புற நானூற்றில் புகன்றுள்ளாரே!

உலகில் எண்ணற்ற உயிரினங்கள் தோன்றி மறைவதைப் போலவே மக்களும் தோன்றி மறைகின்றனர். என்ன பயன்! பலர் ஆடு மாடுகளைப்போல-ஏன் அவற்றினுங் கேடாக வாழ்க்கை நடத்துகின்றனர்; அந்தோ அளியர்! நேற்றுச் செய்த தையே இன்றும் செய்கின்றனர்-இன்று செய்வதே நாளையும் செய்வர்! என்ன வாழ்க்கை! புதிய புதிய குறிக்கோள்களும் திட்டங்களும் செயல்களும் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க் கையா? புதிய புதிய அருஞ் செயல்கள் புரிந்து—பெரும் பணிகள் ஆற்றிப் புகழுடன் வாழ்வதே குறிக்கோள் வாழ்க்கையாகும். இங்ஙனமின்றிச் செய்ததையே திரும்பத் திரும்பச் செய்வதில் கழியும் நாட்களை வாழ்நாளில் சேர்த்துக் கணக்கிட முடியாது. அதாவது, ஒருவன் ஒரு திங்களில் முதல் நாள் வீணே உண்டு உறங்கிக் காலங் கழித்ததுபோலவே மற்ற நாட்களிலும் இருப் பானேயானால், அவன் அத்திங்களில் ஒரு நாள் மட்டும் உயிர் வாழ்ந்ததாகவே பொருள். அதுபோலவே, ஓராண்டு முழுவதும் ஒரு நாளில் செய்ததுபோல் மட்டும் செய்து கொண்டிருப்பானே யாயின், அவ்வாண்டில் ஒருநாள்மட்டும் உயிர் வாழ்ந்ததாகவே பொருள். இப்படிப் பார்த்தால் அவன் வாழ்நாளின் அளவு என்ன? அவன் பல்லாண்டுகள் உயிர் வாழ்ந்தாலும், உண்மை யில் சின்னாட்களே உயிர் வாழ்கின்றான் அதாவது அவன் உயிரோடு பல ஆண்டுகளாக உலவிக்கொண் டிருந்தாலும், உண்மையில் அவன் எப்போதோ இறந்து விட்டதாகத்தான் கொள்ளவேண்டும். எனவே, வசையின்றி இசையுடன் வாழ்ப வரே உண்மையில் உயிர் வாழ்பவராவர்; இசையின்றி வசையு டன் வாழ்பவரோ உயிர் வாழ்பவராகக் கருதப்படமாட்டார்கள்.

இதனால்தான், பிறந்தால் புகழோடு பிறக்கவேண்டும்; இல்லையெனின் பிறவாதிருப்பதே நல்லது என்று வள்ளுவப் பெருந்தகை திருவாய் மலர்ந்துளார் பிறக்கும்போதே எப்படிப் புகழோடு பிறக்க முடியும்? உலகில் மக்களாய்ப் பிறந்தவர்கள் நற்பணிகள் புரிந்து புகழோடு வாழவேண்டும்; அங்ஙனம் வாழாதவர்கள் பிறந்தும் பிறவாதவராகவே கருதப்படுவார்கள்—என்பது பொருள்

''வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்''.

''தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''.

*

கவிதைக் கனிகள்.

தொகுத்தவர்: **தமிழ் ஊழியன். (கருணன் தம்பி)**

கிடைக்குமிடம்: அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கூட்டுறவுப் பண்டக சாலை, அண்ணாமலை நகர்.
விலை. உருபா 1–75.

பொது:

மலராத மொக்குகளை மலர்கள் என்றும், முதிர்ந்து பழுக்காத காய்களைக் கனிகளென்றும், நடைபயிலுங் குழந்தையை அறிவும், உள்ளமும், தெளிவும் சான்ற ஒரு மாந்தன் என்றும் நாம் கூறிவிடுவதில்லை. இனி, மலர்ந்தனவுள்ளும் எல்லா மலர்களுமே நன் மலர்களென்றும், முதிர்ந்து பழுத்தனவற்றுள் எல்லாக் கனிகளையுமே இன்சுவைக் கனிகளென்றும், வளர்ந்து நிறைந்த மாந்தருள் எல்லாரையுமே மக்கள் என்றும் நாம்ஒப்புவதில்லை. மலர்களில் எருக்கும் உன்மத்தையும் உண்டு; கனிகளில் எட்டியும் வேம்பும் உண்டு; மக்களுள் பதடியும் மாக்களும் உண்டு. புறத்துறைகளில் இத்துணை விழிப்புடன் உள்ள இன்றையத் தமிழ் மக்கள் அறிவுத் துறைகளில் ஒன்றான இலக்கியத் துறையில் மட்டும் ஏனோ தானோவென்று இருப்பதாலேயே, தமிழகத்தில் வேறொரு வள்ளுவரும், கபிலரும், பாணரும், இளங்கோவும் தோன்றுதற்கு வாய்ப்பில்லாமற் போய்விட்டது.

'பா'வின் தோற்றமும் ஓசையும் மட்டுமே உணர்ந்த எல்லாரும் பாவலர் என்று பெயர் சூட்டிக் கொள்வதாலோ, அன்றித் தான்தோன்றிகள் ஒரு சிலரால் பெயர் சூட்டப் பெறுவதாலோ உண்மையான பாவன்மை குன்றி ஆற்றல் மிக்க பாவலரும் இலராகிக் கழகக் காலத்து இலக்கியங்கள்போல் திண்மையும் நுண்மையும், பரப்பும் சிறப்பும், ஆழமும் அழகும் நிறைந்த பத்திலக்கியங்கள் தோன்றுதலே கூடாமற் போய்விட்டது. தமிழகம் இப்போலி நிலைகளையே வலிந்து பற்றிக் கொண்டிருக்குமானால் என்றும் நிலைத்து நிற்கும் இலக்கியம் என்று பேசப்படுவதற்குத் தமிழில் கழக நூற்களைத் தவிர வேறொன்றும் எழாமலே போகும் என்பது பனிமலையன்ன உறுதி.

நாகரிகத்துள் போலிநிலை எப்படி வெறுக்கத் தக்கதோ அவ்வாறே கல்வியிலும் புன்மைப் போலி நிலைகளை மாணவர் வெறுக்கக் கற்றுக் கொள்ளல் வேண்டும். கல்லான் ஒருவன் கற்றான்போல், மேனாட்டுக் காலுறையும், குப்பாயமும் அணிந்து கைகளில் தூவலும், நூற்கட்டும் வைத்துக்கொண்டு 'நீட்டோலை வாசியாமல்' நின்றிருப்பின் நாம் அவனை எள்ளி நகைப்பமா அல்லமா? அதுபோன்றே கற்று முதிரா முன்னரே தம்மைக் 'கவிஞர்' என்றும் 'கலைஞர்' என்றும் கூறித் தருக்கும் வெற்றுரை விரும்பிகளை என்னென்று இகழ்வோம்? அத்தகைய நிலைக்கு இக்காலத் தமிழ் மாணவர்கள் பெரிதும் நாணல் வேண்டும்!

இனிப் புதுமை என்ற பெயரால் இவற்றையெல்லாம் ஏற்கத் தான் வேண்டுமெனின், இன்றிருந்து நாளையழியும் பண்டங்கட்கும் பழக்கப் பொருள்கட்குமே புதுமை பழைமை பேசப்படுமே யன்றி, அறிவு, அன்பு, உள்ளவுணர்வு இவற்றால் மிளிருங் கலை முதலியவற்றிற்குப் பழைமையும் இல்லை; புதுமையும் இல்லை என்று கூறி விடுக்க முன்னைய கலைகளும் அறிவும் பின்னைய கலைகட்கும் அறிவுக்கும் வித்தாகவும் வேராகவும் அமையுமே யன்றிப் பழைமையாகா! இவற்றை விரிப்பின் பெருகும்.

— ஆசிரியர்.

சிறப்பு.

மேலே கூறிய முன்னுரைக்கு இலக்காயுள்ள 'கவிதைக் கனிகள்' என்ற பாடல் தொகுப்பு நூல் வரப்பெற்றோம். பத்து மாணவர்களால் யாக்கப்பெற்ற நாற்பத்து மூன்று பாக்களின் தொகுதி இது இதனைத் தமிழ் ஊழியன் (கருணன் தம்பி) என்பார் தொகுத்துள்ளார்.

ஆய்வுக்கள முறைப்படி அணுகினால் இப்பாடல்களில் சொற்றொடர் நயங்களும், வண்ணனைகளும், உவமையழகும், கற்பனை விரிவும், நற்கருத்துகளும் இருப்பதாகக் கூறலாம். ஒரு சிலர் அவற்றைக் கண்டுபிடித்து மகிழவுங் கூடும். ஆனால் உண்மைப் பாட்டுணர்வோடு அணுகுவார்க்கு நூல் ஏமாற்றத்தையே தருகின்றது. பாடல்களில் உயிர்த் துடிப்பு இல்லை. கை மின் விளக்கில் (Electric Torch) மின்கலத்தைப் (Cell) பொருத்திப் பார்த்தால் அஃது ஒளி உமிழ வேண்டும். ஒளி உமிழ்ந்தால்தான் மின்கலம் சரியானதாகக் கருதப்படும். சற்றும் சுடர்விடும் ஆற்றல் இல்லாத மின்கலத்தைப் பற்றி, அஃது உயர்ந்த பொருளால் செய்யப்பட்டுள்ளதென்றும், அழகியதோற்றமுடையதென்றும், அதன்மேல் பொன் எழுத்துகள் பொறிக்கப் பட்டுள்ளனவே என்றும் பேசுவதால் பயனில்லை. இப்பாடல் களில் காணப்பெறும் மேற்கூறிய திறங்களைப்பற்றி இங்குப் பேசப் புகுந்தால் அதுபோலத்தானிருக்கும்.

உண்மைப் பாடல், சொல்லையும் பொருளையும் கடந்து, பாவலனின் உணர்வு வெள்ளமாய் உள்ளொளித் தேக்கமாய்ப் பரந்து நிற்கும் தனிப் பேராற்றல் உடையது. அதனை எல்லாரும் எளிதில் அணுகிவிட முடியாது. இப் பாடல்கள் மாணவ இளைஞர்தம் தொடக்கநிலைப் பாடல்களே. ஆயினும் தொகுப்பாளர் அறிமுக வுரைகளில் ஒவ்வொருவரையும் வானளாவப் புகழ்ந்து விடுகின்றார். நம்பிக்கையோடு உள்ளே நுழைந்தால் ஏமாற்றமே கிட்டுகின்றது. 'ஊழ்', 'அருள்வாய் நீயே', 'மூன்று மடல்கள்' போன்ற ஒரு சில பாடல்கள் நன்றாயிருப்பதாகக் கூறலாம். ('மூன்று மடல்கள்' என்ற பாட்டு தென்மொழியில் வெளியிடப் பெறும்.)

ஒற்றுப் பிழைகளும் ஓசைப் பிழைகளும் (குற்றியலுகரப் புணர்ச்சியல் வந்தவை பல) வழுச் சொற்களும், (வீசுகின்ற குளிர்காற்று விசிலடிக்கும் நேரம்) வட சொற்களும் காணக் கிடக்கின்றன. திருத்தி வெளியிட்டிருந்தால் வடிவமாவது ஒழுங்காய் அமைந்திருக்கும். வரவரப் புளித்துப்போன அறுசீர் எண்சீர் 'விருத்த' வகைகளும், தாழிசை, கண்ணிகளும் 'சந்தப் பாடல்களுமே மலிய, அவற்றினும் சீரிய கூரிய யாப்பினங்கள் தமிழ் பயிலும் மாணுக்கராலும் தொடப்பெறுதிருக்கின்றனவே என்பது வருத்தம் தருகின்றது.

தொகுப்பாளரும், அணிந்துரை வழங்கிய பேராசிரியர்களும் வரப்போவது நூல் ஆயிற்றே என்று பொறுப்புடன் தம் பங்கினை ஆற்றியிருந்திருக்கலாம். தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று பெயர் பெறும் அண்ணாமலையினின்று வெளிவந்து அமெரிக்காவுக்கும் செல்லவிருக்கும் இந்நூல் எவ்வகையில் **தமிழுக்கு** அணியாக இருக்கும் என்பது புலப்படவில்லை.

மாணுக்கர் தம் எழுத்து முயற்சியைப் பாராட்டலாம். அவர்தம் உள்ளங்களில் நல்ல எண்ணங்கள் மலர்ந்துள்ளன. தீங்கினைக் கடிந்து வாழ்வை மேன்மேலும் உயர்த்திக் கொண்டே போதல் வேண்டும் என்ற ஆர்வம் முளைவிட்டுள்ளது. ஆயினும், அரைகுறை வளர்ச்சியோடு பொந்திகை அடைந்து, தம் வளர்ச்சிக்குத் தாமே அணையிட்டு ஏரியாகப் பரந்து தேங்கிவிடாமல், கருத்து நலத்துடன் பாநலமும் பின்னிப் பிணைய, பாட்டென்னும் இரும்பெருங் கடலை நோக்கி அவர்கள் ஆறுகப் பாய்ந்து செல்லல் வேண்டும். அவ்வாறு செல்வராயின் ஒரு சிலரேனும் உண்மைப் புலமையை எய்த முடியும். அப் பெருங் குறிக்கோட்கு மெய்யாகவே அடிகோலுமாயின் இத்தகைய நூல்கள் அச்சேறுவதில் தவறில்லை

''கல்லாடன்''

தமிழர் செய்யவேண்டிய தலையாய கடமைகள்.

1. எக்காலத்தும் எவ்விடத்தும் எவர் முன்னும் தம்மைத் தமிழர் என்றே குறித்தலும் கூறுதலும் வேண்டும். தம் பெயரினும், பிறர் பெயரைத் தாம் குறிக்க நேரினும் குலப் பெயர்களை விடுத்தே கூறுதல் வேண்டும். குல, சமயப் பாகுபாடுகளே இற்றைத் தமிழர் கீழ்நிலையுற்றமைக்கு முழுக் காரணமென்று திண்ணமாய் உணர்தலும் உணர்த்தலும் வேண்டும்.

2. தமிழல்லாத தம் பெயர்களை உடனே தூய தனித் தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். தம் மக்கட்கும் மனைகட்கும் கழகங்கட்கும் பெயர் சூட்டுங்காலும் தனித் தமிழ்ப் பெயர்களையே சூட்டுதல் வேண்டும்.

3. மொழியுணர்வு தமிழர்பால் குறைந்து போனமையே பிற மொழியாளர் தம் வெறியுணர்வுக்குக் காரணமாதலின் மொழியே நம்மை ஒருமைப்படுத்தும் வழியென்று கண்டு கடைப்பிடிக்கவேண்டும்.

4. கட்டுரை, பாட்டு, கதை முதலியன எழுதும் எழுத்தாளர்கள் எக்காரணம் பற்றியேனும் பிற சொற்களைக் கலவாமல் தனித் தமிழிலேயே எழுத முற்படுதல் வேண்டும். நல்ல தமிழாக்கச் சொற்களை அறியாவிடத்துத் தக்கார் வழி அவற்றை உணர்ந்து கைக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறின்றி நாகரிகம் என்ற பெயரால் தமிழைக் கெடுக்கும் கோடரிக் காம்புகளை எக்காரணம்பற்றியும் போற்றுதல் கூடாது.

5. புதுமுறைக் கலைகளையும், அறிவியல் ஆக்கங்களையும் அவ்வப்பொழுது பெயர்த்தும் விளக்கியும் ஆங்காங்குள்ள மாணவர்க்கும், அறியா மக்கட்கும் அறிவுணர்வும் தமிழுணர்வும் கூட்டுதல் வேண்டும்.

6. தனித் தமிழ்க்குக் கேடுசெய்யும் செய்தித் தாள்களையும் இலக்கிய, கலை இதழ்களையும் அறவே புறக்கணிக்கவேண்டும். அவ்வாறு அவ்விதழ்கள் புறக்கணிக்கப் பெறின் அவை தாமே காலப்போக்கில் மாறுபாடடைந்து வருதல் உறுதி என்றறிதல் வேண்டும்.

7. தமிழாய்ந்த தமிழ்ப் பெரும் புலவர்களையும் தமிழ் மாணவர்களையும் பேணிப் புரந்து காத்தல் வேண்டும். தனியொருவர் செய்யவியலாக் காலத்துப் பலருங் கூடியோ, தமிழ் மன்றங்கள் வழியோ அன்னார்க்குப் பொருளுதவி செய்தல் வேண்டும். தமிழ்ப் புரவலர்கள் குன்றியமையே தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் ஊக்கங் குறைந்து மனம் வெதும்பிப் போனமைக்குக் காரணம் என்றும், அங்ஙன் அவர் நிலை குன்றியதே தமிழுக்கும் தமிழகத்திற்கும் பகைவரால் கேடுவரப் பொருட்டாயமைந்தது என்றும் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

8. தமிழ்க்கும் தமிழறிஞர்க்கும் உதவி செய்ய முன்வருங்கால் போலியறிவுற்ற மேம்போக்கான பிழைப்புத் தமிழ்ப் பற்றுளரை இனங்கண்டு விலக்கி, உண்மைப் புலவர்களையே புரந்து போற்றல் வேண்டும்.

9. தமிழர் தம் மக்கட்குப் பிள்ளைமைப் பருவத்திருந்து தமிழறிவும் ஆங்கில அறிவும் ஊட்டுதல் இன்றியமையாக் கடன் ஆகும்.

10. எத்துறை அலுவலில் இருப்போராயினும் முத்தமிழ்ப்பற்றும் உணர்வும் இல்லாதவரை மதியாது புறக்கணிப்புச்செய்தல் வேண்டும்.

11. தமிழ் இன்றேல் தமிழரும் இலர் என்றும், தமிழர் இன்றேல் தமிழ் நாடும் தமிழ்ப் பண்பாடும் அறவே இல்லை என்றும் உறுதியாக எண்ணிக் கொள்ளல் வேண்டும். ○

தென்மொழித் தொகுப்பு.

பொங்கல் மலர் இடையிணைந்த, ஒன்று முதல் பதினாறு இசைகளின், முந்தைய தென்மொழித் தொகுப்பு விலைக்குக் கிடைக்கும். விலை 5–50 உருபா.

உருபா ஆறு அனுப்பின் பதிவஞ்சலில் அனுப்பப் பெறும்.

— அமைச்சர்.

மூளை ஆய்வு.

(இராபர்ட் ஓப்ரைன்.)

பல நூற்றாண்டுகளாக மாந்தனின் மூளை அறிவியல் ஆய்வு கட்கு எட்டாததாகவே இருந்துவந்தது. காரணம், இறந்தவர் தம் மூளையை வெட்டி ஆய்ந்து பார்த்ததில் ஏதும் கண்டுபிடிக்க முடியாமற் போனதேயாம். இன்றோ இயங்கிக் கொண்டிருக்கும் மூளையை ஆய்ந்து காண்டற்குரிய நுண்ணிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளிலேயே இவ் வியப்பூட்டும் முன் னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உயர்ந்த மயக்க மருந்துகளின் துணையால் உயிருள்ள மாந்தனின் தலை உணர்வை மழுக்கி மண்டை ஓட்டைத் திறந்து மூளையை நுண்கருவிகளால் இயக்கி இயக்கத்தின் விளைவுகளைக் கண்டறியப் புது வழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மின்னணுக் கருவி (Electronic Tool) ஒன்றால் மூளையின் ஆழத்தை உணர்ந்து பார்க்கவியலும். மண்டை ஓட்டில், இருவிரற்கடை அகல நீளத்தில் ஒரு துளை யிடப்படுகின்றது. சிறிய, கூர் மழுங்கிய மின் கருவிகள் (Electrodes) ஒரு குறிப்பிட்ட ஆழத்துக்குள் வேண்டிய இடம் வரை செலுத்தப்படுகின்றன. அவை சிறிதும் ஊறு விளைப்ப தில்லை. நரம்பு முடிச்சுகளை மெல்ல அசைக்கின்றன. மூளைக் குழைவுகட்கு உணர்வில்லையாதலால், கருவியின் இயக்கத்தால் மூளையில் வலி ஏற்படுவதில்லை. அம் மின்கருவியோடிணைக்கப் பெற்ற, மயிரினும் நுண்ணிய கம்பிகளின் வழியாக மூளையில் ஆய்வுபெற வேண்டிய குழைவுகளினூடே மின் அதிர்ச்சி (Electric Shock) ஏற்படுத்தப்படுகின்றது.

அவ்வதிர்ச்சிகள் மிக மெல்லியன. உடலின் மேல் தோலில் அவை செலுத்தப்படுமாயின் நாம் அவற்றை உணர்தல் இயலாது இயங்கும் மூளையினின்று புறப்பட்டுக் கோடிக்கணக்கான மெல் லிய நரம்புகளை நொடிதோறும் இயக்கிக் கொண்டிருக்கும் இயற்கையான மின்னதிர்ச்சிகளைப் போன்றனவே அவை.

மூளையின் மேல் மடிப்பில் மின்னதிர்ச்சியைச் செலுத்தும் போது இயக்கங்கள் விளைகின்றன என்பதை அறிவியலார் பல் லாண்டுகளாகவே அறிவர். ஆனால் அத்தகைய இயக்கங்கள் ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவையுமல்ல; நுண்ணியவையு மல்ல. விரலை அசைத்தல், காலை வலிந்திழுத்தல் போன்ற இயக்கங்களையே முன்பெல்லாம் ஏற்படுத்தல் முடிந்தது.

இக்கால் மூளையின் உட்புறத்தையே அதிர்ச்சிக்குட்படுத்த முடிவதால் இயற்கையான, ஒழுங்குக்குக் கட்டுப்பட்ட, நோக்கத்தோடு கூடிய இயக்கங்களை ஏற்படுத்த இயல்கின்றது.

இவ்வியக்கத்தால் ஒரு பூனையை மூன்று கால்களில் நிறுத்தக்கூடும். ஓர் ஆட்டினைப் படிக்கட்டுகளில் ஏறச் செய்யவியலும். ஓர் ஆளைத் தலையைத் திருப்புமாறு செய்யவுங்கூடும்.

இவற்றொடு நின்றுவிடாமல், மூளையின் நடுப் பகுதி வரைக்கும் சென்று, ஆங்கு உவகை, துன்பம், வலி, பசி, நீர்விடாய் போன்ற அடிப்படை உணர்வுகளைத் தூண்டுமாறு அவையவற்றுக்கென அமைந்த ஊசிமுனைத் தசைகள் இருப்பதையும் ஆய்வாளர் கண்டறிந்திருக்கின்றனர்.

இவ்வாறு மின்னதிர்ச்சி செலுத்தி அவற்றை இயங்கச் செய்வதன் வாயிலாய், அத்தசைகளின் பணியினையும் அவை எவ்வாறு நம்மைஇயக்குகின்றன என்பதையும் கண்டறிந்துள்ளனர். நெருக்கடி வேளையில் அவை செயல்படும் முறையினையும், நோய்களை அவை கட்டுப்படுத்தும் பாங்கினையும் அறிந்துள்ளனர். மூளைப் பகுதிகளுள் சிலவற்றைப் பிற பகுதிகட்கு ஊறு நேராமலேயே அழிந்து விடவுங் கூடும் என்றும் கண்டறிந்துள்ளனர்.

(READERS' DIGEST).

தென்மொழி அன்பர்தம் நலங்கருதி

விலையைக் குறைத்துள்ளோம்.

துரை. மாணிக்கம் எழுதிய

இனிய, எளிய செந்தமிழ்க் காப்பியம்

கொய்யாக்கனி

பாவாணர் தம் அணிந்துரையும் புரட்சிப் பாவலர் தம் மதிப்புரையும் நூலின் பெருமையை உணர்த்தும்.

பிறர்க்கு: 2-25 தென்மொழி உறுப்பினர்க்கு: 1-50.

இன்றே எழுதிப் பெறுங்கள்.

தென்மொழி,

திருப்பாதிரிப்புலியூர்.

"தமிழும் ஆங்கிலமும்."

(புலவர். வி. பொ. பழனிவேலன் பி. ஓ. எல்.)

நம் பெருமதிப்பிற்குரிய தந்தை, பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் 15—10—62ல் வெளியான விடுதலை, இதழில் ஆசிரியர் பகுதியில் எழுதிய மேற்குறித்த தலைப்புள்ள கட்டுரையைப் படித்து வியப்பும் வேதனையுமடைந்தேன். இதற்கு முன்பு பெரியாரின் **'தாய்ப்பால் பைத்தியம்'** என்ற கட்டுரையையும் படித்திருக்கிறேன். **தாய்ப்பால் பைத்தியம்** என்ற கட்டுரையை ஆய்ந்த விளக்கக் கட்டுரையொன்று விரைவில் தென்மொழியில் வரும்.

அவர், ''தமிழில் என்ன இருக்கிறது? தமிழர் இல்லங்களில் எல்லாரும் ஆங்கிலத்திலேயே பேசவேண்டும்; தமிழ் நாட்டுக் கல்விக் கூடங்களில் ஆங்கிலமே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும்; அப்பணியில் ஈடுபட்டுள்ள அமைச்சர் பக்தவத்சலனார்க்கு மக்கள் துணையாக இருக்கவேண்டும்; ஆங்கிலத்தை இளமையிலேயே, ''எழுத்தாணிப்பால்'', ஊட்டும்போதிருந்தே கற்பிக்கவேண்டும்; தமிழ் நெடுங் கணக்கு எழுத்துகளுக்கு மாற்றுக ஆங்கில எழுத்துகளையே பயன்படுத்தவேண்டும்; தமிழர்கட்குத் தாய்மொழிப் (வெறி) பைத்தியம் போகவேண்டும்; ''புட்டிப்பால்'', போன்று பிறமொழி கற்பதால்தான் பயன் உண்டு, என்று பலவாறு மயங்கக்கூறி தமிழர்களின் மனத்தைக் குழப்பிவிட்டார்.

''தமிழர் தலைவர்'', என்றும், ''தந்தையென்றும்'', ''பெரியார்'', என்றும் நாம் பாராட்டும் ஒருவர்; தமிழர்களாலேயே பாராட்டுப் பெறுகின்ற ஒருவர்; பொறுப்பு வாய்ந்த உயர்நிலையிலுள்ள சீர்திருத்தச் செம்மல், சிந்தனைச் சிற்பி இங்ஙனம் எழுதியுள்ளார் என்பதை எண்ணி எண்ணி என் மனம் ஏக்கமுறுகின்றது.

அவர் தம்மைக் கன்னடியர் என்று கூறிக்கொண்டாலும் அவர் போற்றப்படுவதெல்லாம் தமிழராலேயே. அவர் அயராது உழைப்பதெல்லாம் தமிழர்கட்காகவே. இத்தகையார் தமிழ் மொழிபற்றி எழுதியுள்ள கருத்துரைகள் கவல்தற்குரியனவே.

தமிழில் என்ன இருக்கிறது? என்று கூறி அதனை ஒதுக்குவதைவிட, அதில் என்ன இல்லை? என்று ஆராய்ந்து குறைகளை நிறைவுசெய்ய வழி வகுக்கக் கூடாதா? ஒரு மொழியில் அறி

வியல் நூல்கள் ஆக்கப் பெறவில்லையென்பதற்காக அதனை அழிக்க முற்படுவது அறிவுடைமையன்று. அம்மொழியில் உள்ள குறை களைந்து, பிறநாட்டு நல்ல கலைகளை அம்மொழியில் பெயர்த்து, அதனைச் சிறந்த மொழியாக, எல்லாக் கலை நூல்களும் உள்ள மொழியாக ஆக்கவேண்டும். அவ்வாறின்றி மாறுபட்ட விரைந்த முடிவுக்கு வருவது பொருத்தமன்று. வழக்கற்ற மொழியாகிய சமற்கிருதத்தை அம்மொழிக்காரர் உயர் நிலைக்குக் கொணர்வதற்கு எத்துணை முயற்சிகளை மேற்கொள்ளுகின்றனர்? இதனைப் பெரியார் அறியாரா?

ஆங்கிலம், தமிழைவிட, எந்தவகையிலும் சிறந்த மொழி அன்றுவென்பதை மொழி நூல்வல்லார் நன்கறிவர். தமிழ் போன்று அஃது உயர்தனிச் செம்மொழியன்று. அஃது இன்று உலக மொழியாக உள்ளது என்றால், அதற்கு ஆங்கிலேயருடைய மொழிப்பற்றும் அதனைப் பரப்ப அவர்கள் மேற்கொண்ட முயற்சியுமே காரணமாகும். பெரியார்போல் ஆங்கிலேயர் நினைத்திருந்தால் பல்லாண்டுகட்கு முன்னரே ஆங்கிலம் மாய்ந்திருக்கும்.

ஆங்கிலர் உலகத்திலுள்ள பல நாடுகளைவென்று தமது ஆட்சிக்குட்படுத்தினர். அங்கெல்லாம் ஆங்கிலத்தையே ஆட்சி மொழியாகவும் முதன் மொழியாகவுமாக்கினர். நூற்றுக் கணக்கான ஆண்டுகள் அவரது ஆட்சி நிலைத்திருந்ததனால் ஆங்கிலம் அந்நாடுகளிலெல்லாம் பரவிவிட்டது. உலகத்தின் பெரும்பாலான இடங்களில் பரவியதாலும் ஆங்கிலப் புலவர்கட்கு ஆங்கில ஆட்சியினர் உதவியதாலும் பல நூல்களை யாத்துப் பரப்பினர். இன்று அஃது உலக மொழி என்று போற்றப்படுகின்றது.

இந்தியா ஆங்கிலர் ஆட்சிக்குட்பட்டதும் முதலில் என்ன செய்தார்கள்? ஆங்கிலத்தையே முதல் மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் செய்தார்களேயன்றி இந்திய நாட்டு மொழிகளில் ஒன்றையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆங்கிலர் எத்துணை மொழிப்பற்றுள்ளவர் என்பது இதனால் போதரும்.

அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் ஆங்கிலேயரும் ஆங்கிலம் அறிந்தவருமாக இருந்தமையின் அவர்கள் செய்த ஆராய்ச்சிகளை அம்மொழியிலேயே வெளியிட்டனர். அதனை உலக மக்கள் ஏற்றுப் பயின்றனர். அவற்றைப் படித்து மேலும் மேலும் ஆராயத் தொடங்கிய பிற மொழியினரும் அறிவியல் கருத்துகளை ஆங்கிலத்திலேயே வெளியிட்டனர்.

எந்த மொழியும் தோன்றிய பொழுதே இலக்கியம், இலக்கணம், அறிவியல் கருத்துகள் நிரம்பியதாக இருந்ததில்லை. அத்

தகுநிலைக்குக் கொணர்ந்தவர் அவ்வம்மொழியினரே. ஏனெனின் அவர்கள் மொழிப்பற்றும், தம்மொழியை உயர்த்த மேற்கொண்ட நடவடிக்கைகளுமே காரணியமாம். ஆங்கிலர் போன்று தமிழர்களும் உலக முழுவதும் வென்று ஆண்டிருந்தால், தமிழையே முதன் மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் கொண்டிருந்தால், இன்று தமிழே, ''உலகப் பொது மொழி''யாக இருக்கும். அத் தகுதி தமிழுக்கு இன்றும் உண்டு. ஆனால், தமிழர்க்குத் தமிழ்ப் பற்றும், தமிழ் நாட்டுப் பற்றும் இருக்கவேண்டும்.

உலகத்தில் முதலில் தோன்றியது இயற்கை மொழியாகிய தமிழே; பண்டைத் தமிழர் தமிழ்க் கழகங்கள் பல நிறுவி தமிழை யாய்ந்து பல்லாயிரம் நூல்கள் இயற்றியதாகத் தெரிகிறது. அந் நூல்கள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டன.

சேர, சோழ, பாண்டிய அரசர்கட்குப் பின் வந்த அரசர்களோ, ஆட்சியாளரோ தமிழரல்லாதவர்களாகவும், தமிழ்ப் பற்றற்றவர்களாகவும் இருந்ததனால் தமிழ் நூல்களும் அழிவெய்தின; தமிழ் வளர்ச்சியும் புறக்கணிக்கப்பட்டது. தொல்காப்பியம் திருக்குறள், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை முதலியனவே எஞ்சிய கழகத் தமிழ் நூல்களாகும். அவை தமிழ்ப்பற்றுள்ள தமிழர் சிலரால் மறைத்து வைக்கப் பெற்றமையின் தமிழ்ப் பகைவர் கைக்குத் தப்பின. அவற்றிலும் இடைச் செருகல்கள் உள.

தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திவ்வியப் பிரபந்தம்போன்ற பரவற் பாடல்கள் நிறைந்த நூல்கள் இற்றைக்கு ஆயிரத்தைஞ்னூறு ஆண்டுகட்குப்பின் தோன்றியவையே. அவற்றைமட்டும் கொண்டு தமிழின் த கு தி யை மதிப்பிடுவது பொருத்தமற்றதாகும். தமிழில் என்ன இருக்கிறதென்று பொறுப்பின்றிப் பேசுவதும் எழுதுவதும் பொருளற்றனவே.

'தாய்ப்பால்' குடித்து வளர்கிற குழந்தையைவிட குப்பிப் பால் (புட்டிப்பால்) குடித்து வளருகின்ற கு ழ ந் தை த வளமாக இருக்கிறதென்பது அருமையிலும் அருமை. தாய்ப்பால் இல்லாவிட்டால்தான் வேறுவகை உணவை மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். தாய்ப்பால் தட்டின்றிக் குடிக்கும் குழந்தை உடல் வளத்துடன் வாழ்வதையும் ''புட்டிப்பால்'', குடிக்கும் குழந்தை இளைத்து எலும்புந் தோலுமாய் இருப்பதையும் நம் நாட்டவர் நன்கறிவர்.

அதுபோன்று தாய் மொழியை நன்றுகக் கற்றவர்களே நல்லறிஞர்களாகத் திகழ்வர். தாய் மொழியை ஐயந்திரிபறக் கற்ற பின்னரே பிற மொழிப் பயிற்சி எளிதாகும். தாய்மொழி வாயிலாக ஒருவர் தம் க ரு த் து க ளை எடுத்துரைப்பது போன்று

வேற்று மொழி வாயிலாகக் கூறிப் பிறரைத் தெளிவு பெறச் செய்வதென்பது இயற்கைக்கு எதிரானதே. ஆங்கிலேயர் முதலானவதாகத் தம் தாய் மொழியை நன்றாகக் கற்ற பிறகே பிற மொழி பயிலத் தொடங்குகின்றனர். அதன் பயனாகப் பிற மொழிகளிலும் வல்லுநராகின்றனர். இதற்குச் சான்றாக விளங்கு வோர் திரு. போப்பையர், திரு. கால்டுவெல், திரு.வீரமாமுனிவர் முதலானவராவர்.

தாய்மொழியை நன்கு கற்காதவர் பிற மொழிப்புலமை பெறு வரென்பது இயற்கையன்று. அதே போன்று தாய்ப்பால் குடிக் காத குழந்தை நல்லுடல் பெற்று வாழுமென்பது முரணானதே. ''தாய்ப்பால் பைத்தியம்'', என்று எழுதி மக்களைத் தாய்மொழிப் பற்றற்றவர்களாக்க முயல்வதும் தமிழ் மொழியில் என்ன இருக் கிறது? என்று கூறுவதும் தாய்மொழிப் பற்றற்றவர் கூற்றே யாகும். இத்தகையோர் எழுதுவதையும், பேசுவதையும் படித் தாலும் கேட்டாலும் கருத்திற் கொள்ளக்கூடாது. எந்த நாட்டி லும் இத் தமிழ் நாட்டைப்போன்று மொழிப்பற்றும் நாட்டுப்பற் றும் அற்றவர் இலர். இருந்தால் அவர்கள் நாடு கடத்தப்பெறு வர். தமிழ் நாடுதான் இவற்றிற்கெல்லாம் இடம் கொடுத்து வரு கிறது.

தமிழ் மொழியில் ஒன்றுமில்லை; ஆங்கிலத்தில்தான் எல்லாம் இருக்கின்றன; ''நான் ஆங்கில நாட்டியல் குடிமகனாக விரும்பு கிறேன்,'' என்று செப்புகின்றவர் ஆங்கில நாட்டில்போய் வாழ வேண்டுமேயன்றி தமிழ் நாட்டில் இருந்துகொண்டு இவ்வாறு பேசுவதோ, எழுதுவதோ விரும்பத் தக்கதன்று. மேலும், தமிழ் எழுத்துகளை அகற்றி ஆங்கில எழுத்துகளைக்கொண்டே தமிழை எழுதவேண்டுமென்றும், தமிழர் வீடுகளில் ஆங்கிலமே பேசவேண்டுமென்றும், ''எழுத்தாணிப் பால்'', ஊட்டும்போதே ஆங்கிலத்தையும் பயிற்றத் தொடங்க வேண்டுமென்றும் கூறித் தமிழ் மொழியை ஒழித்துவிடத் திட்டம் செய்வது பொருந்தாது.

மொழியைச் சீர்திருத்த மொழி நூல் வல்லுநர் பலர் உளர். கூட்டரவு (சமூக)ச் சீர்திருத்தக்காரர்களும், அரசியல் தலை வர்களும் மொழியைத் திருத்த முற்படாமலிருப்பது நலமாகும். (அது புத்தக வாணிகன், புத்தகத்தைத் திருத்துவதுபோன்ற அறியாமைச் செயலாகும்) கல்விக் கூடங்களில் பாடம் பயிற்று மொழியாக அவாவர் தாய் மொழிதான் இருக்கவேண்டும். ஏனெனின், ஒரு பொருள்பற்றி ஒருவனுக்குத் தெளிந்த அறிவு பெறச் செய்ய வேண்டுமானால் அவனுடைய தாய்மொழியே தக்க கருவியாகும். மாணவர்கட்கு அவரது தாய்மொழியில் கூறும் செய்தி புரிவதுபோன்று வேற்று மொழியின் மூலம் கூறுவது விளங்காது என்பது ஆசிரியப் பணியை மேற்கொண்ட

அனைவர்க்கும் தெரிந்த உண்மை. ஒரு பாடத்தை வேற்று மொழியில் கற்றாலும் அதனைத் தாய்மொழிக் கருத்தாக்கினால்தான் மனத்திற் கொள்ளமுடியும்; நினைவிலிருத்தவும் இயலும். ஒருவன் தன் உள்ளக்கிடக்கையை உள்ளவாறு உரைக்கவேண்டுமானால் தனது தாய் மொழியாற்றான் உரைக்கமுடியும்; எவரும் தம் எண்ணங்களைத் தாய்மொழி வாயிலாக எடுத்துக் கூறுவது போன்று பிறமொழிமூலம் இயலாதென்பது உலகோர் உணர்ந்த உண்மை.

இயற்கைக்கு மாறாக, தமிழ்நாட்டில் மட்டும் ஆங்கில மொழி வாயிலாகப் பாடங்கள் பயிற்றுவித்தால்தான் புரியும் என்று புகல்வது பொருத்தமற்றதே. ஒரு சிலர், தமிழ்ப்பற்றின்மையா லும், தமிழ் தமது தாய்மொழியன்மையாலும் இவ்வாறுரைக்கின்ற னர். அத்தகையோரால் தமிழ் ஆக்கமுறாது; அவர்களைக் கல்லூரி, பல்கலைக் கழகத் தமிழ் மொழித் துறைகளில் தலைவர்க ளாக அமர்த்துதல் நன்றன்று. வயிற்றுப் பிழைப்புக்காகமட்டும் தமிழ் கற்றவர்களையோ, உண்மையான தமிழ்ப் பற்றற்றவர் களையோ அரசியலார் தமிழ் வளர்ச்சிக்குப் பணிபுரிபவர்களாக அமர்த்தக்கூடாது.

தமிழ் நாட்டிலுள்ள கல்விக் கூடங்களில் தமிழ் பயிற்று மொழியாக இருக்கத் தகுதியற்றதென்றால் வேறு எந்த நாட்டிற் குப்போய் தமிழை வளர்ப்பது? தமிழில் பாடங்களைக் கற்பித் தால் புரியாது; ஆங்கிலத்தில் கற்பித்தால்தான் புரியும் என்ப வர்கள் ஆங்கில நாட்டில் சென்று பயில்வது நலமாகும். ஒரு சிலருடைய நன்மைக்காகப் பலருடைய நன்மைகளைப் புறக் கணிக்கலாமா? ஒருவனுடைய தாய்மொழி வாயிலாகக் கற்பிப் பது புரியாது என்றால் அவனைத் தாய் மொழிப் பற்றுள்ளவனாகக் கருத இடமுண்டா? தமிழ்நாட்டில் தமிழால் பிழைக்கின்றவர்கள் பாடம் கற்பிக்கத் தமிழ் தகுதியற்றதென்றால் அவர்களை என் னென்பேம்? எந்த நாட்டவனும் தன் தாய் மொழியின் மூலம் சொன்னாற்றான் எதையும் புரிந்து கொள்ள முடிகிறதென்கிறான். தமிழ்நாட்டானோ ஆங்கிலத்தில் விளக்கினால்தான் புரியும் என் கின்றான். என்னே, தமிழ் நாட்டின் தகைமை! ○

உறுப்பினர் பார்வைக்கு!

அலுவலகத்திற்கு முகவரி மாற்றங் கருதியோ, வேறு தொடர்பிலோ மடல் எழுதுவார், தம் உறுப்பினர் எண்ணை மறவாது குறிப்பிட வேண்டுகிறோம்

— அமைச்சர்.



என் சுவை என்பது.

நுழைவாய்:

சுவை என்பது இனிமை எனப் பொருள்படுமெனினும், நாவின் ஊறுணர்வையே சுவை என்று பொதுப்படக் கூறுவர். அறிவால் அறிந்து சுவைப்பதே கற்றார்க்குப் பேரின்பம் பயக்க வல்லது. பொருளை உண்டு மகிழ்தல் நாச்சுவையின் பொது விலக்கணம்; பொருளை எண்ணி மகிழ்தல் அறிவுச் சுவையின் தனி இலக்கணம். உண்ணும் பொருள் இடம், காலம், நிலை கடவாதது; அப்பொழுதைக்கப்பொழுதே உண்டு, சுவைத்து, மறப்பது நாச்சுவையின் நிகழ்ச்சி முறை. அறிவுச்சுவை அவ்வாறன்றி எண்ணும் போதெல்லாம் பொருள் விரிவுணர்ந்து, அதனொடு ஒன்றிச் சுவைப்பது. நாச்சுவை கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு என ஆறாகும். அறிவுச் சுவை,

நகையே, அழுகை, இளிவரல், மருட்கை,
அச்சம், பெருமிதம், வெகுளி, உவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப.

(தொல்-பொருள்-மெய்-251)

இவற்றுள் அழுகையை அவலம், அருள் என்று இரண்டு படுத்தி ஒன்பதாகக் கூறுவாரு முளர். அழுகை என்பது பொதுப் பட வருந்துதல் என்றும், அவலம் என்பது தன் துன்பங்கண்டு வருந்துதல் என்றும், அருள் என்பது பிறர் துன்பங்கண்டு

துரை-மாணிக்கம்

வருந்துதல் என்றும் பொருள் கொள்ளுவர். இனி, அருள் (சமநிலை)எனும் சுவை பெரும்பாலும் முக நெகிழ்ச்சியாலே காட்டப்படுதலான் அதனை நாடகத்திற்கே உரியதென்பர். எவ்வாற்றானும் முப்பத்திரண்டு மெய்ப்பாட்டுப் பொருளையும் பதினாறாக்கி, அவற்றையும் ஒன்றினுளொன்றடக்கி முழுமைச்சுவை எட்டென மொழிந்தனர். இந்த எண்சுவைகளையும் வடநூலார் முறையே ஆசியம், கருணை, பீபத்சம் அல்லது குற்சிதம், அற்புதம் அல்லது அதிசயம், பயானகம், வீரியம், இரௌத்திரம், சிருங்காரம் எனக் கூறுவர்.

இச்சிறு நூலுள் வரும் பாடல்களெல்லாந் தாய் கூற்றாக அமைந்திருப்பன; ஒரு தாய் தன் மகளைப்பற்றி எண்ணுகின்ற எண்ணங்களை எண்வகையாக்கி, எட்டுச் சுவைகளையும் உணர்த்துவன. பாடல்கள் முழுவதும் செப்பலோசையுடைய வெண்பா யாப்பில் சிந்தியன் முறைப்படி இனிமைச் சொற்களில் விளைந்தனவாதலின், தமிழின்பம் வேண்டுவார் தள்ளாமற்கொள்ளுவர் என்பது நம் கருத்தாகும்.

இடைக்காலத்துத் தமிழ் குன்றியமைக்கும், தமிழ் மக்கள் தன்னுணர்வின்றி அடிமைப்பட்டு வீழ்ந்தமைக்கும், ஈண்டுத் தமிழை மேயவரும் இந்தியெனும் கடாவை வெருட்டப் பாடுகள் பல படுகின்றமைக்கும், தலையாய காரணம் என்னவெனில், சோம்பல் கருதியும், மேனாட்டுப் போலிப் பகட்டுக்கு வளைந்தும், தமிழ் இலக்கியப் பயிற்சியை விலக்கி வந்தமையே ஆகும். தூய தமிழ் நூல் என்னில் மறவாமல் துய்க்க வேண்டும் என்ற அவா பற்றியே இதனைக் கூறுகிறோம்.

இனி, எட்டுச் சுவைகளும் கதைபற்றியும், தொடர்பு பற்றியும், மறம் அல்லது பெருமிதம், மருட்கை அல்லது வியப்பு, அச்சம், அழுகை அல்லது அவலம், இளிவரல் அல்லது இழிவு, வெகுளி அல்லது சினம், உவகை, நகை என முறைமை மாற்றியமைக்கப்பட்டன.

நூலுள் வரும் சுவை நலன்கள்.

1. மறம்:

தன் மகள் ஒருத்திக்கு ஏற்ற கணவன் இத்தகையவனே என்றும், அவ்வாறல்லாதார், அவளை மணம்பேச வருதல் கூடாதென்றும், அவள் தாய் பெருமிதந் தோன்றப் பேசுகின்றாள்; இதுவே மறம்.

கல்வி, தறுகண், இசைமை, கொடை எனும் நான்வகைப் பெருமித மெய்ப்பாடுகளும் ஈண்டுக் காட்டப்பட்டன. தன் மகளுக்கு வாய்ப்பவன் கற்றவனாதல் வேண்டும் என்பதுள்

கல்வியும், அவ்வாறல்லாதார் உறவினரெனினும், உரியவரெனினும் அவளை அடைய இயலாது என்பதுள்-தறுகணும், மறுவறக் கற்றூர்க்கீயும் பெண்ணின் பேரழகும், இளமை நலமும் கூறியதுள் இசைமையும், பெருஞ்செல்வமாகிய தன் ஒரேயொரு மகளைப் பிறர்க்குக் கொடுக்க இசைவது பற்றிக் கூறுமிடத்துக் கொடையும் கூறப்பட்டிருப்பதைக் கண்டு தெளிக. இவற்றுள் கல்வி முதலியன பிறருடைமைகளாகக் காட்டப்பட்டுள்ளனவே, இதில் தான் மறங்கூறிப் பெருமிதப் படுவதில் யாதுளதெனில், *பிறர் கல்வி வேண்டல், தன் கல்விச் சிறப்பை உணர்த்துமாத*லின் மறம் ஆண்டுள்ளதாம் என்க. இவ்வாறே பிறவற்றையும் கொள்க.

2. வியப்பு

அவ்வாறு மறம் பேசிய தாய், தன் மகளின் முன்னை இருப்புக்கும், பருவம் வந்துற்ற பின்னைச் சிறப்புக்கும் உள்ள வேறுபாட்டினை விருப்பமொடு வியந்தது வியப்பு.

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் எனும் நான்குவகை மருட்கை மெய்ப்பாடுகளும் விரிக்கப்பட்டிருக்கின்றன.

பருவம் அணைந்த பின்னைத் தன் மகளுடைய மேனியின் பொலிவு பேசுங்கால் உற்ற புதுமையும், அவள் மணப்பருவம் உற்றதால் தனக்குமேவும் பெருமையும், முன்னைச் சிறுபெண்ணாயிருந்தவள் ஈண்டு இளமை கொழிக்கும் பருவப்பெண்ணாயினள் என்பதுள் அவள் சிறுமையும், இம்மாறுபாடுகளால் விளையும் நிகழ்ச்சி மொழியுங்கால் ஆக்கமும் தோன்றின வென்க.

3. **அச்சம்:**

அங்ஙன் வியந்த தாயினைவிட்டு, மகள் ஒருவன் பின் போனதை எண்ணித், தனக்குற்ற பழி நினைந்தும் அவர் சென்ற வழி நினைந்தும் அஞ்சுதல் அச்சம்.

அணங்கு, விலங்கு, கள்வர், இறை எனும் நால்வகை, அச்ச மெய்ப்பாடுகளுள், தீண்டி வருத்தும் தாக்கணங்கு என்பது வலிமனம் கொள்ளார் அச்சமேற்பட்டுப் பொய்மையாகச் சமைத்துக் கொண்டதாகலின் அணங்கு விடப்பட்டது. விலங்குக் கஞ்சலும், கள்வர்க் கஞ்சலும், இறையவர்க் கஞ்சலும் விட்டு, இக்காலம் வன்கருவிக் காலமாகையான், அவற்றிற் கஞ்சலும் பொருத்தம் என்னலாம். எவ்வாற்றுனும் அஞ்சுதல் அச்சம் எனும் இலக்கணம் பற்றித் தன் மகள் தனிவழி சென்றது குறித்தும், அவருக்கு வந்துறும் தீமை குறித்தும், தனக்கு மேவிய பழி குறித்தும் அஞ்சுதல் அச்சமாயிற்றென்க.

4. **அழுகை:**

அப்படி அஞ்சிய தாய் உணவுறக்கமின்றி மகள்பற்றி எண்ணிக் கிடப்பது அவலம்.

இளிவு, இழவு, அசைவு, வறுமை எனும் நான்வகை அழுகை மெய்ப்பாடுகளும் கூறப்பட்டுள்ளன. மகள் பிறனொடு சென்றதால் வந்துற்ற இழிவுக்கு அஞ்சியதில் இளிவும், இழத்தற்கரிய செல்வமாகிய மகளை இழந்ததிலும், மகிழ்வு இறந்துபட்டதினும் இழவும், முன்னிருந்த அறநிலைகெட்டுத் தீநிலையுற்றதால் அசைவும், மகள் இழப்புக் காரணமாய் உண்ணாமை, உறங்காமை, முதலிய கூறி வெறுமனே கிடத்தலைக்காட்டலால், வறுமையும் கூறப்பட்டன என்க.

5. இழிவு

அவலங் கொண்ட தாய் முன் அவள் மகள்பற்றி ஊரார் பேசியது இழிவு.

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை எனும் நால்வகை இழிவு மெய்ப்பாடுகளுள் தாயின் மூப்புக் காலத்தே மகள் தனக்கீந்த துயர் கூறுங்கால் மூப்பும், அவளின் உளப் பிணியும், மெய் வருத்தமும் உட்பட அவற்றைத்தாளா எளியோள் எனக் கூறுங்கால் மென்மையும் கூறப்பட்டன.

6. சினம்:

ஊரார் இழித்துப் பேசிய தாய் முன்னை, வேற்றூர் போய் மணந்த மகளும், மருகனும் வந்தவுடன் விளைந்தது சினம்.

உறுப்பறை, குடிகோள், அலை, கொலை எனும் நால்வகை வெகுளல் மெய்ப்பாடுகளுள், அறங்காத்து அல்லவை கடிந்து உறுப்புக் குறைத்தல் அரசர்க்குரியதாகையால் ஈண்டுவிடப்பட்டது. தன் மகள் தனக்கே கேடு செய்தாள் ஆகலின் தாய்க்கு வந்த சினம் கூறுங்கால் குடிகோளும், கோல் கொண்டலைதற்குச்சொல் கொண்டேசலும், தன் மகளின் அறிவும், புகழும் கொன்றுரைத்தலால் கொலையும் கூறப்பட்டன.

7. உவகை:

சினம் இயல்பாற் குறுகி மறைந்து மகள்பால் அன்பு படர உண்டாகியது உவகை என்க.

செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு, எனும் நால்வகை உவகை மெய்ப்பாடுகளுள், தாய் தன் மகளிடம் அணி மணி பூண்டு உவகை கொடுத்துக் கொண்டாள் என்பதுள் செல்வ நுகர்ச்சியும், திறம்படப்பேசி அவளொடு மகிழ்ந்தாள் என்பதுள் புலனும், மகளையும், மருமகனையும் ஒன்றுபடுத்திக் கூறியவற்றால் புணர்வு நிமித்தமும், பூவொடும், புனலொடும் இடைப்படுத்தி மகிழ்தலால் விளையாட்டும் குறிக்கப்படலாயின.

8. நகை:

உவகை மேவிய தாய், மகளின் வாழ்க்கை கண்டு கொழித்தது நகையாம்.

எள்ளல், இளமை, பேதைமை, மடன் எனும் நால்வகை நகை மெய்ப்பாடுகளுள், எள்ளல் இழிவுக்கண் அடங்கியதால் ஈண்டுவிடப்பட்டது மகள் இளமைச் செயல்கண்டு நகைத்தலும் அவள் தன் கணவனொடு பேசி மகிழ்ந்து பழகுங்கால் இடைப்பட்ட பேதைமை கண்டு நகைத்தலும், தன் மகளுக்குச் சிற்சில போழ்து படுகின்ற மடன் கண்டு நகைத்தலும் கூறப்பட்டன வென்க.

இனி, ஒரு சுவை இயலுள் மறு சுவைக்கான ஓரிரண்டு நிகழ்ச்சிகள் விரவி வருவதான பாடல்களும் உண்டு எனினும் பெரும்பான்மை கருதுமிடத்து வழுவாகாதென்க.

நூல்.

(தாய் கூற்று)

1. மறம்.

உற்றார்க் குரியளல்லள்; ஓங்குயர்நூல் செப்பமுறக்
கற்றார் வியக்கும் கலைவிளக்குஞ் செந்தமிழ்நாப்
பெற்றார்க் குரியளெம் பெண். (1)

விரிவுரை.

எண்சுவை எண்பது – எட்டுச் சுவைகளையும் பொதுளிய எண்பது பாடல்கள்.

1. மறம்

தாய் தன் அரும் பெறல் மகட்குரிய நல்லான் ஒருவனைத் தேட விரும்புவளாதலின், வருவார் போவாரிடம் எத்தகையவன் அவட்கு ஏற்றவன் என்பதாகத் தருக்கிக் கூறுவதே மறம் எனலாயிற்று.

1) உற்றார்க்குரியளல்லள்–என்றது அவளை அடைய உறவு வழியில் வருவார் பலர் எனினும், அவள் அவர்க்கு உரியவள் ஆகாள் என்பது பற்றி, மணம்பேச வருவார் முதலில் உறவினர் என்ற முறைமை பற்றியே பேசுவர் ஆகலின், அதை அவர்கள் விடல் வேண்டும் என்னும் கருத்தமையக் கூறினாள் என்க. இதனால் உறவு அல்லாதவர்களும் அவளை மணக்கலாம் என்றபடி.

செந்தமிழ் நாப் பெற்றார்க் குரியள் எம் பெண்-என்றது அவ்வாறு உறவு தவிர்த்த மற்றார்க்குத் தகுதி கூறப்பட்

கத்துகடல் சூழுகின்ற கன்னித் தமிழகத்துப்
புத்திளைஞீர்! நும்மிலொரு போதான் எவனவனே
முத்துவன்மொய் கூந்தன் முகம். (2)

வாயுண்ணல் நற்றமிழே வாழ்ந்துபடல் செந்தமிழ்க்கே
ஏயுமுளம் அற்றை இளந்தமிழ்க்கே என்பான்மேல்
மேயுமிவள் கண்ணென்னு மீன். (3)

செந்தமிழில் வல்லாற்கே செம்பொருளைக் கண்டாற்கே
அந்தமிழ்க்கே வாழ்வை அமைத்தார்க்கே எந்நாளுஞ்
சொந்தமிவள் செங்கனிவாய்ச் சொல். (4)

ஆய்ந்தார் புடைசூழ ஆய கலைமுற்றும்
வாய்ந்தார் மருங்கமர வண்டமிழில் நன்னெஞ்சந்
தோய்ந்தார்க் குரியதிவள் தோள். (5)

டது. வெறும் நாப் பெற்றூர் என்பதல்லாது, கலை விளைக்கின்ற செந்தமிழ் பேசும் நா வென்றதும், வெறுங் கலை என்பதல்லாது கற்றூர் வியக்கும் கலை என்றதும் வெறுங் கற்றூர் என்பதல்லாது, செப்பமுறக் கற்றூர் என்றதும் அவ்வாறு செப்பமுறக் கற்றிருக்க வேண்டியவை ஓங்குயர்ந்த நூல்களையே என்றதும், தருக்கிய, ஏற்ற எண்ணம் உடையாள் என்று காட்டித் தலைப்பொடு பொருத்தற்கும் வேண்டி என்க. இப்பாட்டால் தன் மகள் இன்னூர்க்கே உரியவளாகுவள் என்ற பொதுத்திறம் விளங்கிற்று.

2) **இப்பாடல் பலர் முன் மொழிதல்.**

'**போதான் எவன் அவனே முத்துவன்**' - என்றது அவனே முத்த உரியவன் ஆவான் என்பதுபற்றி; முத்தல்-முத்தமிடல். போதான்-தகுதியுடையான். போதல் தகுதியுடையதாதல்.

3) வாயுண்ணல் என்பது தமிழை மொழிதல் மட்டுமன்றிக் கற்றலுமாம் என்பான் வேண்டி; வாழ்ந்து படல்-வாழ்ந்து இறத்தல். **என்பான்மேல் மேயும் இவள் கண்ணென்னு** *மீன்*-என்றது அவன் தவிரப்பிறர்மேல் மேயாதென்றபடி.

4) தமிழில் வல்லானுதலும், அதனுட் பொதிந்த மெய்ம்மைப் பொருள்களை ஆய்ந்து கண்டானுதலும், அவ்வாறு கண்டு அத் தமிழ்க்கெனவே தன் வாழ்வை அமைத்துக் கொண்டானுதலும் வேண்டும் என்றபடி.

5) தமிழில் நன்னெஞ்சந் தோய்ந்தாரே இவள் தோளையுந், தோய உரியவராகுவர் என்றபடி.

வணங்குவாய்ச் செந்தமிழில் வல்லான் எவனே
பிணங்குசெங் கைதள்ளிப் பின்கூடும் பேதைச்
சுணங்குமுலைத் தாலியுவன் சொத்து. (6)

சற்றும் தயங்குவதில்; சார்ந்தாரை எண்ணுவதில்;
முற்றும் உளந்தோயும் முத்தமிழில் வல்லானைப்
பற்றுமென் பாவையிளங் கை. (7)

மயங்காத் தமிழ்க்கல்வி மாந்துபுகழ் மேவி
வயங்கும் இளையானை வஞ்சியிடை தோய
முயங்கும் மகள்மென் முலை. (8)

தட்டுவினை யாச்செந்நா தாழாமல் தண்டமிழ்ப்பா
கொட்டுதமிழ்க் கோவையிளங் காளையற்கே எஞ்ஞான்றுங்
கிட்டுமிவள் மார்புக் கிடை. (9)

---

6) பிணங்கு செங்கை தள்ளிப் பின்கூடும் பேதை.-என்றது ஊடலும் கூடலும் ஒருங்குடன் அளிப்பள் என்று அவள் காதற்றிறம் உரைத்தது. சுணங்கு-தேமல். சுணங்கு முலைத்தாலி என்றது அதன்மேற் புரளுந்தாலி என்பதனால்.

7) பற்றும் என் பாவையிளங் கை-என்றது அவளும் விரும்பிப் பற்றுவள் என்றபடி. இளங்கை-என்றது மகளின் இளமை தோன்றக்குறித்தது. சார்ந்தாரை எண்ணுவதில் என்றது அதற்காக அவள் பிறர்க்கு அஞ்சாள் எனக் குறித்தல் வேண்டி.

8) மயங்காத் தமிழ்க்கல்வி-ஐயமறக் கற்றல்; 'கற்க கசடற' என்றாராகலின். அவ்வாறு கற்றலோடமையாது, புகழ்மேவி இருத்தல் வேண்டும் என்பது 'மாந்து புகழ் மேவி வயங்கும்' என்பதால் விளக்கப்பட்டது.

வயங்கும் இளையான் என்றது அவ்வாறு இருப்போரிலும் இளமையுடையானையே உரிமையாக்குவள் என்பான் வேண்டி.

இளையானை வஞ்சியிடை தோய முயங்கும்-என்றதால் தன் மகளும் அன்னவனையே விரும்புவள் என்று குறிப்புணர்த்தலாயிற்று.

9) தட்டு-தடை. தாழல் தன் நிலையிற் கீழிறங்கல். தமிழ்க் கோவை என்றது சொல். செயல் முதலிய கருவி வினைகளும் உள்ளம், அறிவு முதலியகாரண வினைகளும் பொருந்திய கோவை என்றபடி. அக் கோவை முற்றுந் தமிழால் ஆயது என்பது பெறப்படும்.

தணிவடையாச் செந்நாவின் தண்டமிழ்நூல் கற்றுப்
பணிவுடைய பாவலற்குப் பாவையவள் செம்பொன்
மணிவயிறு தாங்கும் மகன். (10)

---

10) தண்டமிழ் நூல் கற்றுப் பணிவுடைய பாவலன்–என்றது கற்றலினால் உண்டாகும் செருக்கற்றிருந்து, பணிவுடையனாயிருத்தல் வேண்டும் என்று உரைப்பான் வேண்டி, *'ஆன்றவிந்தடங்கிய சான்றோன்'* என்றாராகலின்.

மணி வயிறு தாங்கும் மகன்–என்றதால் தாய் தன் மகளின் மகன் (பெயரன்) மேல் கொண்ட உள்ளக் கிடக்கை அறியலாயிற்று.

தமிழ் மொழியின் சொல்வளம்.

நீர் நிலைகள்.

குளம் — குளிக்கும் நீர்நிலை.
தெப்பக் குளம் — தெப்பத்தேர் ஓடும் குளம்.
ஊருணி — ஊரால் உண்ணப்படும் அல்லது ஊர் நடுவிலுள்ள குளம்.
ஏரி — ஏர்த் தொழிலுக்கு நீர்பாய்ச்சும் குளம்.
கண்வாய் — சிறு கால்வாயால் நீர் நிரப்பும் குளம்.
தடம், தடாகம் — அகன்ற அல்லது பெரிய குளம்.
கயம் — ஆழமான குளம்.
குட்டம் — குளத்தின் ஆழமான இடம்.
குட்டை — சிறு குளம்
குண்டு — வற்றிய குளத்தில் நீர் நிறைந்த கிடங்கு.
பொய்கை — மலையடுத்த இயற்கையான குளம்.
சுனை — நீர் சுரக்கும் மலைக் குண்டு.
கிணறு — வெட்ட வெட்ட ஆழமான சிறு நீர் நிலை.
கேணி — மணற் கிணறு.
கூவம் — சிறு கிணறு.
துரவு — சுற்றுக் கட்டில்லாத பெருங் கிணறு.
மடு — அருவி விழும் கிணறு

— ஞா. தே.

(இப்பகுதியில் திரவிட மொழிப் பெரும்புலவர், உயர்திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் விடையளிக்கின்றார். இலக்கணம், இலக்கியம், மொழி, நாடு, வரலாறு இவைபற்றிய உங்கள் ஐயங்களை இப் பகுதிக்கு எழுதியனுப்புங்கள்! கேள்விகளைக்,

''கேள்விச் செல்வம்
தென்மொழி, திருப்பாதிரிப்புலியூர்''
என்ற முகவரியிட்டு அனுப்பவும். — ஆசிரியர்.)

தாயம்மை, சேலம் 9.

கடல்கோளால் அழிந்த இலக்கிய நூல்களுள் 'பண்ணத்தி'' என்பதுவும் ஒன்று எனப் படுகிறது. அந்நூல் பற்றிய விளக்கங்கள் கிடைக்குமாயின் அருள்கூர்ந்து தெரிவி யுங்கள்.

''பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டி னியல பண்ணத்தி யியல்பே.''

என்பது தொல்காப்பிய நூற்பா (1436).

''பழம்பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளா கப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி என்றவாறு.........அவையாவன: நாடகச் செய்யுளாகிய பாட்டு மடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கட்கண்டும் முத லாயின.........அவை வல்லார் வாய்க் கேட்டுணர்க'' என்பது பேராசிரியர் உரை.

காலஞ் சென்ற பண்டாரகர் (Dr.) பெரும் பேராசிரியர் (மஹா மஹோபாத்தியாய) உ. வே. சாமிநாதையர் அவர்கள் பண்ணத்தியை நாடோடிப் பாட்டென்றார்கள். அவர்கள் நாடோடிப் பாட்டென்றது நாட்டுப்புறப்பாட்டை.

பண்ணத்தியென்பது, இந்துத்தானிப் பாட்டுகளில் வரும் தொகையரா வாயிருக்கலாம்.

● ''பாவம்'' ''பாவி'' என்பன தமிழ்ச் சொற்கள் தாமா?

○ 'பாவம்' 'பாவி' என்பன வட சொற்கள். அறங்கடை, கரிசு, தீவினை என்பன பாவத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள்.

● ''குணகுணி சம்பந்தம்'' (மறை-திருநாவுக்கரசு எழுதிய மறைமலை அடிகள் வரலாறு 64-ஆம் பக்கம்) என்ற விளக்கத்தின் படி நல்லறிஞர் அழகியதோற்றங்களில் விளங்க வேண்டியிருக்க, சாக்ரடீசு, ஆபிரகாம்லிங்கன் ஆகிய சிறந்த அறிஞர் அழகற்ற தோற்றம் பெற்றிருந்ததேன்?

○ அகத்தழகும் முகத்தழகும் என்றும் ஒத்திருக்கவேண்டும் என்பது இயற்கை நெறியன்று. ஒட்டுமாவையும் கூட்டுமா வென்னும் கொட்டைமாவையும் ஒப்பு நோக்கிக் காண்க.

க. பழனியப்பன், பொன்மலை, திருச்சி-4.

● தமிழில் பன்னெடுங்காலமாக விரவி வழங்கிவரும் வடமொழி (ஆரிய எழுத்துக்களான ஜ,ஷ,ஸ,க்ஷ,ஹ என்ற) எழுத்துகள் வடமொழியில் வேறு வடிவம் பெற்றிருக்கத் தமிழில், ஜ, ஷ, ஸ, க்ஷ, ஹ என்ற வடிவம் வந்தது எவ்வாறு? எப்பொழுது? ஏன்?

○ ஆரியர் தென்னாட்டிற்கு வந்த பின்னரே தமிழ் நெடுங் கணக்கையொட்டிக் கிரந்தாட்சரம் என்னும் ஆரியவெழுத்துக் களை அமைத்துக் கொண்டனர். அக்காலம் கி. மு. ஏறத்தாழ 1500 க + ஷ = க்ஷ.

● கல்லூரிகளில் அனைத்தும் தமிழ்ப் பயிற்றுமொழி ஏற் படுத்துவது பற்றித் தங்கள் கருத்தென்ன? அறிவியல் நூல்கள் தமிழில் போதுமான அளவு இல்லாதிருக்க, மாண வர்கள் அவற்றைத் தமிழில் படித்து எங்ஙனம் மேலை நாட்டு அறிவியல் அறிஞர்களுக்கு நிகராக விளங்க முடியும்?

○ இவ்வினாவிற்கு விடை ஏற்கனவே எழுதப்பெற்றுளது. முந்திய வினா விடை மாலைகளைக் காண்க.

ந. தட்சு, மணலூர்.

● முகத்தைக் குறிக்கும்போது ''மூஞ்சி'' என்றும் சொல் கிறோம். இவை இரண்டும் தமிழ்ச் சொற்கள் தாமா? விளக்க வேண்டுகிறேன்.

○ 'முகம்' 'மூஞ்சி' இரண்டும் தமிழ்ச் சொற்களே. முகம் மக்களது; மூஞ்சி (Muzzle) விலங்குகளது. முகம் என்னும் சொல் வரலாற்றைத் தமிழ்ப்பொழிலிற்

காண்க

மூசு–மூஞ்சு–மூஞ்சி. மூசுதல்–மூச்சுவிடுதல். மூசு–மூச்சு

● ''பிறகு''என்பதற்கு 'மல்லாக்க', என்றும் 'பொறக்கி' என்றும் சொல்லி வருகின்றனர். அவை எந்தச் சொற்களின் திரிபு?

○ மல்–மல்லா–மல்லாக்க. மல்லாத்தல்–மலர்தல். பிறகு–புறகு–புறகே–புறகேக்கு–புறகைக்கு–புறைக்கு.

கோவி. க. வேலன், தஞ்சை.

● இப்பொழுது புத்தாண்டு என்று சித்திரை முதல்நாளைக் கொண்டாடுகிறார்களே, இது உண்மையில் தமிழ்ப் புத்தாண்டா? ஆம் எனின் எதன் அடிப்படையில் இதை வகுத்தனர்?

○ தமிழாண்டு என்று தொடங்குவதென்பது திட்டமாய்த் தெரியவில்லை. அறுவகைப் பெரும் பொழுதுகளுள் (பருவங்களுள்) இளவேனில் சிறந்ததென்னும் இலக்கிய அடிப்படையில் தமிழாண்டு சித்திரையென்னும் மேழ மாதத்தில் தொடங்கியது போலும்!

முகவை. ஆடல்வல்லான்.

● உலக மொழியாக விளங்க Esperanto எனும் மொழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலக மொழிகளின் திறம்யாவும் வடித்தெடுக்கப்பட்ட மொழியிதுவென்ப தறிவோம். தமிழின் திறம், வளம்–இம்மொழியாக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டதா? இல்லாவிடில் உலக மொழியாகத் தமிழை ஆக்கிட இயலும் வழிவகைகளைக் கூறிட வேண்டுகிறேன். அயல் நாட்டாரும் நயந்து ஏற்றிடும் வகையில் தமிழை எளிதாக்கித் தற்போதைய Esperantoவின் இடத்தைப்பெற ஆய்வு நடத்த முடியுமா?

○ ஆங்கிலம் உலக மொழியாகப் பரவாத 17–ஆம் 18–ஆம் 19–ஆம் நூற்றாண்டுகளில், மேனாட்டு மொழியறிஞர் பெரும்பாலும் ஐரோப்பிய மொழிச் சொற்களை அடிப்படையாகக்கொண்டு, Volapuk, Esperanto Ido, Esperantido, Interlingua, Norial, முதலிய செயற்கை மொழிகளை உலக மொழிகளாகப் பயன்படுமாறு படைத்தமைத்தனர் இக்காலத்தோ, ஆங்கிலம் உலக மொழியாகிவிட்டது. இனி அதன் இடத்தை வேறொரு மொழி பெற முடியாது. ''எல்லாரும் பல்லக்கேறினால் எவர் பல்லக்குத் தூக்குவது?'' தமிழ் எளிய முப்பான்ஒலிகளைக் கொண்ட உலக முதற்றனிச் செம்மொழியாதலாலும், தமிழர் இனிமேல் ஆங்கிலர் போல் உலகமுழுதும் பரவவும் பன்னாடுகளை ஆளவும் இயலாதாதலாலும், தமிழை உலக மொழியாக்கக் கருதுவது ''வானத்து மீனுக்கு வன்றூண்டிலிடுவதே.'' தமிழ் நாட்டில் தூய்மையாக வழங்குவதும், உலகமெங்கும் கற்கப்படுவதுமே, தமிழ் இனியடையத்தக்க பேறும்.

விடுதலை உள்ளம்.

புதுச்சேரியில் பாவலர் பாரதியார் வறுமையுடன் வாழ நேர்ந்தது. அக்காலத்தும் அவர் உள்ள உறுதியுடன் ஓயாமல் உழைத்து வந்தார்.

பலகால் அவர் மனைவி அவரைக் கடிந்து கொண்டதுண்டு. வாழ்க்கையில் பிறரைப்போல் முன்னேறுதற்கியலாமல் 'தமிழ் தமிழ்' என்று ஆர்ப்பரிக்கும் அவர் விடுதலையுள்ளத்தை உணர்ந்திருந்தாலும், அவ்வுள்ளத்தின் விரைந்த உணர்ச்சிகளுடன் ஒத்துப்போகவியலாமல் அந்த அம்மையார் அடிக்கடி சலிப்புற்றிருந்தார். பால், விறகு முதலியவற்றுக்கான கடன்கள் மாதக் கணக்கில் கொடுபடாமல் இருக்கும். வீட்டுக்கு வேண்டிய பொருள்கள் பற்றிய நினைவேயின்றி இயங்கிக் கொண்டிருப்பார் பாரதியார்.

ஒருநாள் இவர் குறிப்பறிந்து இவர் துணைவி காலைச் சிற்றுண்டிக்குப் பின் தாள், தூவல், மைக்கூடு முதலியவற்றை எடுத்துப்போய் அவர் அருகில் வைத்துவிட்டு வந்தார். ஏதாவது எழுதி முடித்து அன்றைய அஞ்சலில் செய்தித் தாள்கட்கு அனுப்பினாலாவது பணம் வராதா? என்ற கருத்து அந்த அம்மையாரின் செய்கையில் ஊடுருவி நின்றது. பாரதியார்க்கு எழுத ஓடவில்லை. அவர் வீட்டுச் சுமைகளை நினைத்து என்றும் வருந்தியதில்லை. அம்மையார் சமையலுக்கென்று இருந்த சிறிதளவு அரிசியையும் முறத்தில் எடுத்து வைத்துவிட்டு, வேலையாக உள்ளே போனார். திரும்பி வந்தபொழுது பாரதியார் இருந்த நிலைமையைக் கண்டு வியப்பும் எரிச்சலும் அடைந்தார்.

முறத்திலிருந்த அரிசியை இரண்டு கைநிறைய அள்ளி யள்ளி முற்றத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் குருவிகளுக்கு அதைத் தூவிய வண்ணம், அவை உண்பதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார். அவர் வாய்,

'விட்டு விடுதலை யாகி நிற்பாய் – இந்தச்
சிட்டுக் குருவியைப் போல!'

என்ற பாட்டை முதன்முதலாகப் பாடிக்கொண்டிருந்தது. பாட்டு முடிந்ததும் பின் வந்து நின்ற மனைவியாரைப் பார்த்து ''செல்லம்மா, வா! இந்தக் குருவிகள் எவ்வளவு மகிழ்வாக இருக்கின்றன பார். நாமும், ஏன் இவற்றைப்போல் கவலையின்றி இருத்தல் கூடாது?'' என்று கள்ளங் கவடின்றி மனைவியிடம் கூறினார்; மனைவி கல்லாய்ச் சமைந்தார்.

*

பொருளடக்கம்

சுவடி-1 ஓலை-6

ஆடி தி.பி.1994

பயிற்று மொழி	(ஆசிரியவுரை)	3
தமிழ் வரலாற்றுச் சுருக்கம்		11
ஆங்கில மொழியாக்கம்		16
ஒருநாட் கூத்து	(பாட்டு)	19
உ.வே.சாமிநாதர்	(வரலாறு)	21
உரிமை—இங்கர்சால்		32
புறத்தாறு	(சிறுகதை)	36
நமது பண்பாடு	(பாட்டு)	43
கடல்படு செல்வம்		44
புகழ்		46
தமிழர் செய்ய வேண்டிய தலையாய கடமைகள்		54
மூளை ஆய்வு		56
தமிழும் ஆங்கிலமும்		58
எண்சுவை எண்பது	(இலக்கியம்)	63

மற்றும்

கேள்விச் செல்வம், நூல் நிறை, உடலியல்

விலை 50 காசு